# புதினம்-2

# புதினம்-2

# பொருளடக்கம்


- P1014 புதினம்-2
- பாட ஆசிரியரைப் பற்றி

- பாடம் - 1 P10141 கி.ராஜநாராயணனின் புதினங்கள்
- பாட அமைப்பு
- 1.0 பாட முன்னுரை
- 1.1 கி. ராஜநாராயணன்
- 1.2 கோபல்லபுரத்து மக்கள் - புதினம்
- 1.3 கதை மாந்தர்
- 1.4 வாழ்வியல் முறைகள்
- 1.5 சமுதாயப் பிரச்சனை
- 1.6 புதினத்தில் கையாளும் உத்திகள்
- 1.7 தொகுப்புரை

- பாடம் 2 P10142 இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள்
- பாட அமைப்பு
- 2.0 பாட முன்னுரை
- 2.1 இராஜம் கிருஷ்ணன்
- 2.2 இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள்
- 2.3 கதைக்கருக்கள்
- 2.4 சமூகச் சீர்திருத்தக் கருத்துகள்
- 2.5 கதைமாந்தர்
- 2.6 நாவல்களில் கையாளும் உத்திகள்
- 2.7 தொகுப்புரை

- பாடம் - 3 P10143 சிவகாமியின் புதினங்கள்
- பாட அமைப்பு
- 3.0 பாட முன்னுரை
- 3.1 சிவகாமி
- 3.2 ஆனந்தாயி - புதினம்
- 3.3 கதைமாந்தர்
- 3.4 குடும்பமும் பெண்களும்

- 3.5 நாவலில் கையாளும் உத்திகள்
- 3.6 தொகுப்புரை

- பாடம் - 4 P10144 கே. டானியலின் புதினங்கள்
- பாட அமைப்பு
- 4.0 பாட முன்னுரை
- 4.1 கே. டானியல்
- 4.2 கானல் - புதினம்
- 4.3 கதைமாந்தர்
- 4.4 சமுதாய நோக்கு
- 4.5 நாவலில் கையாளும் உத்திகள்
- 4.6 தொகுப்புரை

- பாடம் - 5 P10145 பொன்னீலனின் புதினங்கள்
- பாட அமைப்பு
- 5.0 பாட முன்னுரை
- 5.1 பொன்னீலன்
- 5.2 புதிய மொட்டுகள்
- 5.3 கதைமாந்தர்
- 5.4 சமுதாயச் சிந்தனைகள்
- 5.5 நாவலில் கையாளும் உத்திகள்
- 5.6 தொகுப்புரை

- பாடம் 6 P10146 சுஜாதாவின் புதினங்கள்
- பாட அமைப்பு
- 6.0 பாட முன்னுரை
- 6.1 சுஜாதா
- 6.2 என் இனிய இயந்திரா - புதினம்
- 6.3 கதைமாந்தர்
- 6.4 அறிவியலாட்சியும் வாழ்வியல் மாற்றங்களும்
- 6.5 நாவலில் கையாளும் உத்திகள்
- 6.6 தொகுப்புரை

- P10141 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P10141 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- P10142 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P10142 தன் மதிப்பீடு : வினாக்கள் - II

- P10143 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P10143 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- P10144 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P10144 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- P10145 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P10145 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- P10146 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P10146 தன் மதிப்பீடு : வினாக்கள் - II

# P1014

# புதினம்-2

P10141 கி. ராஜநாராயணனின் புதினங்கள்

P10142 இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள்

P10143 சிவகாமியின் புதினங்கள்

P10144 கே. டானியலின் புதினங்கள்

P10145 பொன்னீலனின் புதினங்கள்

P10146 சுஜாதாவின் புதினங்கள்

# பாட ஆசிரியரைப் பற்றி

முனைவர் தி. செந்தமிழ்ச்செல்வி

கல்வித் தகுதி : எம். ஏ., எம்ஃபில்., பிஎச்.டி

பணி நிலை : தமிழ் முதுநிலை விரிவுரையாளர்

பணி புரியும் கல்லூரி : எஸ்.டி.என்.பி. மகளிர் வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை, சென்னை – 600044.

பணி அனுபவம் : 7 ஆண்டுகள்

ஆய்வுத் தலைப்புகள் : எம். ஏ – 'குடந்தை நகர இசைக் கலைஞர்கள்' (1985) எம்ஃபில் – மறைமலையடிகள் ஆய்வு நூல்கள்
ஒரு கண்ணோட்டம் (1986) பிஎச்.டி – 'மணிக்கொடி சிறுகதைகளில் மகளிர்' அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழகம். கொடைக்கானல் (ஜூன் 1995)

ஆய்வுக் கட்டுரைகள் : 11

வெளிவந்துள்ள நூல் விவரம் : ஒன்று – மணிக்கொடி சிறுகதைகளில் மகளிர்.

இல்ல முகவரி : 15 ஏ, வரசித்தி விநாயகர் கோயில் தெரு, போஸ்டல் நகர், குரோம்பேட்டை, சென்னை 600044

தொலைபேசி எண்: 044-22655398

## பாடம் - 1

# P10141 கி.ராஜநாராயணனின் புதினங்கள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ் நாவல் ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர் கி.ராஜநாராயணன். இந்தப் பாடம் கி. ராஜநாராயணனை அறிமுகம் செய்கிறது. அவர் எழுதிய கோபல்ல கிராமத்து மக்கள் எனும் புதினத்தின் வழி வெளியிடப்படும் அவருடைய சமுதாயப் பார்வை, பாத்திரப் படைப்பு, நடைத்திறன் ஆகியவற்றையும் விளக்குகிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படிப்பதால் பின்வரும் பயன்களைப் பெறலாம்.

- கி.ராஜநாராயணனின் கோபல்ல கிராமத்து மக்கள் எனும் புதினத்தின் மூலம், சமூகத்தில் நிலவிய பல்வேறு பிரச்சனைகளையும் தெரிந்து கொள்ளலாம்.
- குடும்பம், வாழ்க்கை, சமுதாயம் பற்றிய மதிப்பீட்டை அறியலாம்.
- கி.ரா. வின் நடையில் காணப்படும் எளிமை, உவமை, பழமொழி, வர்ணனை, வட்டார வழக்கு ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

பாட அமைப்பு

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை

1.1 கி. ராஜநாராயணன்

1.2 கோபல்ல மக்கள் – புதினம்

1.3 கதை மாந்தர்

1.4 வாழ்வியல் முறைகள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

1.5 சமுதாயப் பிரச்சனை

1.6புதினத்தில் கையாளும் உத்திகள்

1.7 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 1.0 பாட முன்னுரை

மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கிய வகைகளில் புதினமும் ஒன்று. தமிழ்ப்புதின எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க எழுத்தாளர் கி. ராஜ நாராயணன். இவருடைய ‘கோபல்லபுரத்து மக்கள்’ எந்த வகையைச் சார்ந்தது என்பது பற்றியும் அந்த நாவலில் கையாளும் உத்திகள் ஆகியவை பற்றியும் இப்பாடத்தில் விளக்கப்படுகிறது.

# 1.1 கி. ராஜநாராயணன்



தற்பொழுது வாழ்ந்துவரும் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர் கி.ரா., இவரின் பிறந்த நாள் 16.9.1923. சொந்த ஊர் கோவில்பட்டிக்கு அருகிலுள்ள இடைச்செவல் கிராமம். பெற்றோர்கள் கிருஷ்ண ராமானுஜன், இலட்சுமி அம்மாள், மனைவி கணபதி அம்மாள். இரு மகன்கள் திவாகர், பிரபாகர். இவர் 40 வயதிற்குப் பிறகு எழுத ஆரம்பித்து சிறுகதை, நாவல், குறுநாவல், கிராமியக் கதை, அகராதி, கடிதம் என்று தமிழின் பல்வேறு இலக்கியத் தளங்களிலும் தடம் பதித்திருக்கிறார்.

- பெற்ற பரிசுகள்

மிகச்சிறந்த நாவலாசிரியரான கி.ராஜ நாராயணனுக்குக் கிடைத்த பரிசுகள் பின்வருமாறு :

கதவு (சிறுகதைத் தொகுதி) - தமிழ்வளர்ச்சி மன்றப் பரிசு (1965)
பிஞ்சுகள் (குழந்தைகள் நாவல்) - இலக்கியச் சிந்தனை பரிசு (1979)
கோபல்லபுரத்து மக்கள் (நாவல்) - சாகித்ய அகாதெமி விருது

## 1.1.1 படைப்புகள்

தமிழில் ஒரு சமூக வரலாற்று நாவலைக் கூறமுடியுமானால் அது கோபல்ல கிராமம் தான். “ஒரு நாவலாசிரியனே தனது சமூகத்தைப் பற்றி எழுதுவதில் முதன்மையானவன்” என காதரின் லிவர் என்பார் (the Novel and the Reader P.97) கூறும் கூற்று கி.ரா., நடைக்குப் பொருந்தும்.

கோபல்ல கிராமம் எழுதிய கி.ரா., கோபல்லபுரத்து மக்கள் என்ற புதினத்தையும் எழுதியுள்ளார். இந்த இரு புதினங்களும் சமூக வரலாற்றுப் புதினங்களாகத் திகழ்கின்றன. வழக்கமான நாவல்களில் வரும் கதைப் பின்னலும், நிகழ்ச்சித் தொடர்ச்சியும் இல்லாவிட்டாலும் ஒரு புது முயற்சியாகக் கோபல்லபுரத்து மக்கள் என்ற நாவலைக் கி.ரா. படைத்துள்ளார்.

### **1.1.2** தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறுமிடம்

கி.ரா., சிறுகதை, நாவல், குறுநாவல், கடிதம் போன்ற பல துறைகளில் தன் பங்களிப்பைச் செய்திருந்தாலும் ‘கரிசல் இலக்கிய முன்னோடி’ என்ற வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறுகிறார்.

நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடத்தில்

ஒதுங்கினேன், பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல்

மழையையே பார்த்துக் கொண்டிருந்து விட்டேன்

என்று சொல்லும் கி.ரா.,வைப் புதுவைப் பல்கலைக் கழகம் பேராசிரியராக்கிப் பெருமையடைந்துள்ளது. இவர் ‘கதவு’ என்ற சிறுகதை மூலம் தமிழ்ச்சிறுகதை உலகின் கதவை விலாசமாகத் திறந்து வைத்தவர். இவர் 70க்கு மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்ததோடு இரு நாவல்களையும் படைத்துள்ளார்.

- தனித்தன்மை

நாவலாசிரியர் தனக்குக் கிடைத்த கருவை விளக்கிக் காட்டவே, கதைப்பின்னல், பாத்திரங்கள், பின்னணி என்று பலவற்றை அமைத்துக் கொள்கிறார். அந்த வகையில் கி.ரா., விவசாயிகளின் போராட்டத்தில் கலந்து கொண்டு, விவசாயிகளின் நிலையை நன்கு உணர்ந்து கிராம மக்களின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு நாவல்களைப் படைத்துள்ளார். மேலும் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் வாழ்க்கையைக் குறியீடாக்கி மனிதர்கள் மனநிலையை விளக்கியுள்ளார். சங்க இலக்கியம் இயற்கையோடு இயைந்த மக்கள் வாழ்க்கையைச் சித்திரிப்பதைப்போல, உரைநடை இலக்கியத்தில் இயற்கையோடு இரண்டறக் கலந்த கிராம மக்களின் வாழ்வைக் கூறுவது இவரது தனிச் சிறப்பாகும்.

## 1.2 கோபல்லபுரத்து மக்கள் - புதினம்

கரிசல் தமிழின் முன்னோடியான இவருக்கு ஓர் இலக்கியப் பரம்பரையை உருவாக்கிய பெருமை உண்டு. இவரது அக்கறையும், ஈடுபாடும், அன்பும், அனுதாபமும் எப்பொழுதும் சுரண்டப்படுகின்ற ஏழைக்கூலி விவசாயிகள் பக்கமே இருந்து வருகின்றது. கிராம மக்களின் வாழ்க்கைக் கூறுகளை மனிதாபிமானத்தோடு ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் ஒரு விசாலமான பார்வை அவருக்கு இருக்கிறது. முப்பத்து நான்கு வாரங்களாகக் கோபல்லபுரத்து மக்கள் என்ற நாவல் ஆனந்த விகடனில் தொடராக வெளிவந்தது. இந்நாவல் விடுதலைப் போராட்ட வீரவரலாறு என்றும், சாதாரண மக்களை நாயகர்களாக்கிப் படைக்கப்பட்ட நல்ல நாவல் என்றும் ஏராளமான வாசகர்களால் பாராட்டப்பட்டது. இந்த நாவலுக்குச் 'சாகித்ய அகாதெமி' விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- கதைமாந்தர்கள்

துயாரம் நாயக்கர், துயாரம் நாயக்கர் மகள் அச்சிந்தலு, அச்சிந்தலுவின் தம்பி வெங்கடபதி, அச்சிந்தலுவின் முறைமாப்பிள்ளை கிட்டப்பன், கிட்டப்பனின் மனைவி ரேணம்மா, கோட்டையார் வீட்டு கோவிந்தப்ப நாயக்கர், நந்தகோப நாயக்கர், வாத்தியார் சாமிக்கண்ணு, ஆசாரி போன்றவர்கள் கோபல்லபுரத்து மக்கள் என்ற நாவலின் கதைப்பாத்திரங்கள்.

### 1.2.1 கதைப் பின்னல்

மேற்குறிப்பிட்ட நாவலில், கோபல்ல கிராமத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் சிறு சிறு கதைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பல கதைகளின் பின்னலில் கோபல்லபுரத்து மக்கள் ஒன்றிணைகிறார்கள்.

ஆந்திராவிலிருந்து தெலுங்கு அரசர்கள் தமிழகத்தில் ஆட்சி செலுத்தியதை ஒட்டி வந்தவர்கள். பஞ்சம் பிழைக்க வந்தவர்கள். முகலாய அரசர்களுக்குப் பயந்து வந்தவர்கள்; இவ்வாறு இங்கு வந்து குடியேறி தமிழர்களோடு தமிழராய் மாறி வாழ்ந்து வரும் தெலுங்கு தேச மக்களின் சமூக வரலாற்றைப் பின்புலமாகக் கொண்டு கி.ராஜ நாராயணன் 'கோபல்ல கிராமம்' என்ற ஓர் அரிய நாவலை எழுதியுள்ளார். வரலாற்றை அடியொற்றி எழுதப்பட்டிருப்பினும் சமூக வாழ்க்கையை மையமாகக் கொண்டே 'கோபல்ல கிராமம்' எழுதப்பட்டுள்ளது. அதைப்போலவே 'கோபல்ல கிராமத்து மக்கள்' என்ற நாவலும் அமைந்துள்ளது. அச்சிந்துலு, கிட்டப்பனின் வாழ்க்கை, முதல் 95 பக்கங்களில் தரப்பட்டுள்ளது. மீதியுள்ள 195 பக்கங்களில் ஆங்கிலேயர் வரவால் அந்த ஊரில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட நாகரிகமும், பண்பாட்டு மாற்றமும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது ஒரு சமூகத்தின் வரலாறாக,

ஆவணமாக விளங்குகிறது.

**1.2.2** கதைச் சுருக்கம்

தாய்மாமன் மகளான அச்சிந்தலு பிறந்தவுடன் அவளைக் கிட்டப்பனுக்குத் திருமணம் செய்து கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், குழந்தைப் பருவம் முடிந்து பருவத்தின் தலைவாயில் வந்து நின்றபோது இரு குடும்பங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவினால் அவர்களுக்கு நடக்கவிருந்த திருமணம் தடைபடுகிறது. அந்தச் சூழ்நிலையில், இருவரது உள்ளத்திலும் ஒருவரையொருவர் சந்திக்க வேண்டும் என்ற உணர்வு எழுகிறது. ஆனால் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போகிறது. பிறகு உடல் உறுதி வாய்ந்த கிட்டப்பனுக்குச் செல்வக்குடும்பத்தில் திருமணம் நடக்கிறது. அவனுக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது என்று தெரிந்த உடனையே வீம்புக்காக, பேரழகியான அச்சிந்தலுவுக்கு அந்த முகூர்த்தத்தில் ஒரு அவசரத் திருமணம் நடந்து முடிகிறது. அத்திருமணம் நடந்த நான்காம் நாளே, அச்சிந்தலுவின் கணவன் நிலத் தகராறில் கொலையுண்டு இறந்து போனான். அச்சிந்தலு மாங்கல்யத்தை இழந்தாள். சின்ன வயசிலே தன்னோடு ஒட்டிப் பழகிய கிட்டப்பன், தன்னை ஒரு பொருட்டாகக் கருதாமல் உதறிவிட்டு இன்னொருத்தியின் கையைப்பிடித்தது அவளை அதிகமாகப் பாதித்தது. அந்தப் பாதிப்பே பழிவாங்கும் உணர்வாக மாறுகிறது.

- அச்சிந்தலுவின் சூட்சி

ஒவ்வொரு வருட ‘மாநோன்பு’ திருவிழாவில் வன்னிமரம் ஒன்று நடப்படும். அந்தக் கோபல்லபுரத்தின் வீரனான கிட்டப்பன்தான் அந்த மரத்தைப் பிடுங்குவான். இந்த முறை அவனைப் பழிவாங்க அச்சிந்தலு தந்திரம் ஒன்று செய்தாள். நேரான மரத்திற்குப் பதிலாகக் கவட்டையோடு கூடிய மரத்தை நடுமாறு மரம் நட வந்த தன் தம்பியிடமும் மற்றவர்களிடமும் யோசனை கூறுகிறாள். வழக்கம்போல் அந்த ஆண்டும் “மாநோன்பு” ஊர்வலம் வன்னிமரம் நட்ட இடத்தில் வந்து நிற்கிறது.

அறிவுக் கடலான கலாதேவிக்கும் அஞ்ஞான இருளான வன்னி ராஜனுக்கும் போர் நடந்தது. தோற்று விழுந்த வன்னிராஜனை அந்த இடத்திலிருந்து பெயர்த்து அப்புறப்படுத்த வேண்டும். ஒவ்வொருத்தரும் தங்கள் தங்கள் பங்குக்கு அந்த வன்னிமரத்தை ஆட்டி ஆட்டிப் பிடுங்கிப் பார்த்தார்கள். கிட்டப்பனுக்கு இந்தத்தடவை வைத்து விடாமல் தாங்களே ஒரு கை பார்த்து விடவேண்டும் என்று சில இளவட்டங்கள் முயன்று தோற்றார்கள். எல்லோரும் வன்னிமரத்தோடு போராடித் தோல்வியடைந்தனர். கிட்டப்பன் அதிகநேரம் போராடியும் மரம் துளிக்கூட அசைவதாகத் தெரியவில்லை. இருந்தாலும் முயன்று கொண்டிருந்தான். இறுதியில் அடக்கிய மூச்சினால் உடம்பின் நரம்புகள் புடைப்பது தெரிந்தது. நெடு நெடு என்று உள்ளமுங்கிய சத்தம் மார்புக்கு உள்ளே என்னமோ உடைகிற மாதிரி உணர்ந்தான். வன்னிமரம் மேலே வந்தது. கூட்டமும் ஆரவாரித்தது. ஆனால், அவனுக்கோ கேட்கவில்லை. ஏதோ கனவில் கேட்பது

போல இருந்தது. பிடுங்கிய மரத்தோடு அவனும் மரம்போல் தள்ளாடி தலையில் சாயப்போன சமயத்தில், சாமிக்கண்ணாசாரி ஓடிவந்து தாங்கிக் கொண்டார். அன்றிலிருந்து கிட்டப்பன் படுத்த படுக்கையாகி விட்டான். மார்புக்குள் தாங்க முடியாத ஏதோ வலி ஏற்பட்டது.

கிட்டப்பனின் உடல்நிலை பாதிக்கப்பட்டதற்கு அச்சிந்தலுதான் காரணம் என்பதை ஊரார் மூலம் கிட்டப்பனின் மனைவி ரேணம்மா அறிகிறாள். தன் மனதில் நீண்ட காலமாக இருந்து வரும் ஐயத்தைப் போக்கிக் கொள்ள நினைக்கிறாள். அச்சிந்தலுவுக்கும் அவனுக்கும் இருந்த பால்ய பருவ நட்பினைப் பற்றிக் கணவனிடம் வினவுகிறாள். அதற்குக் கிட்டப்பன் "உண்மைதான்; விருப்பமிருந்தால் என்னோடு இரு இல்லை என்றால் உன் பெற்றோர் வீட்டிற்குப் போயிடு" என்று கோபமாகப் பேசுகிறான். ரேணம்மா கணவனைப் பிரிந்து செல்கிறாள்.

கிட்டப்பனின் நினைவாகவே இருந்த அச்சிந்தலு அவனோடு முன்பெல்லாம் அமர்ந்து பேசும் மரத்தடிக்கு வந்து சேர்கிறாள். அதே மரத்தடியில் கிட்டப்பன் கீழே மயங்கிக் கிடப்பதைக் கண்டு அவனைத் தூக்கிக் காப்பாற்றுகிறாள். அன்றிலிருந்து ஊராரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் அஞ்சாமல் இருவரும் உயிருள்ளவரை ஒன்றாகவே வாழ்ந்தனர்.

## 1.3 கதை மாந்தர்

கதைமாந்தரைத் தலைமை மாந்தர், துணைமாந்தர் என்று இருவகைகளாகப் பிரிக்கலாம்.

### 1.3.1 தலைமை மாந்தர்

தலைமைப் பாத்திரமான அச்சிந்தலுவுக்கு உறவுமுறையில் நடக்கவிருந்த திருமணம் தடைப்படுகிறது. அந்நிலையில் அச்சிந்தலுவின் விருப்பம் கேட்கப் படவில்லை. திருமணத்தில் வாழ்க்கைத் துணைவரைத் தெரிவு செய்யும் உரிமை மறுக்கப்படுகிறது. இந்த நிலையில் சூழ்நிலைகளுக்குக் கட்டுப்பட்டு யாரோ ஒருவனை விருப்பமில்லாமல் அவள் மணக்க வேண்டியுள்ளது. அப்படி நடந்த திருமணத்திற்குப் பிறகு சில நாட்களிலேயே கணவன் இறந்தபோது கூட அது அச்சிந்தலுவுக்கு இழப்பாக இல்லை. சாதாரண நிகழ்வாகவே உள்ளது. ஆனால், கிட்டப்பன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளவில்லையே என்ற ஏக்கம் அவள் அடிமனதில் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்தது. ஒருவர் மீது கொண்ட அதிகமான அன்பே பழிவாங்கும் உணர்வாக மாற்றம் பெறுகிறது. அதனால் கிட்டப்பனைப் பழிவாங்குகிறாள். ஆனால், அந்த நிகழ்ச்சி அவன் உடலுக்கே கேடாகும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அச்சிந்தலுவின் பழிவாங்கும் உணர்வே நிறுத்தி வைக்கப்பட்ட அவர்களுடைய உறவைப் புதுப்பித்தது. திருமணத்திற்கு முன் வீட்டைவிட்டு வெளியில் வரும் அனுமதி அவளுக்கு இல்லை. ஆனால் விதவையான அச்சிந்தலுவுக்கு அந்த அனுமதி கிடைக்கிறது. அதனால், அவள் சமுதாயத்தை எதிர்த்துத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் துணிவைப் பெறுகிறாள்.

### 1.3.2 துணை மாந்தர்

துணைப் பாத்திரமான கிட்டப்பனின் மனைவி ரேணம்மாவும், பரசு நாயக்கர் மனைவியும் கணவன், “உன் அப்பன் வீட்டிற்குப்போ” என்று கூறியவுடன் வேறு யோசனை எதுவுமின்றி உடனே தந்தை வீட்டிற்குக் கிளம்பி விடுகின்றனர். துணைமாந்தராகப் படைக்கப்பட்டுள்ள பெண்கள் தன்மான உணர்வுடையவர்களாகவும், தெளிந்த சிந்தனை உடையவர்களாகவும் உள்ளனர். இது போன்று நாவலில் இடம்பெறும் ஆண்களும் பெண்களும் துணைப்பாத்திரங்களாக விளங்கி நாவலுக்குச் சுவையூட்டுகின்றனர். கி.ரா.,வின் நாவலில் இடம்பெறும் தலைமை மாந்தரும், துணைமாந்தரும் அன்றாடம் நாம் சந்திக்கும் மாந்தர்களைப் போலவே இயல்பாக வாழ்கின்றனர்.

# 1.4 வாழ்வியல் முறைகள்

விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் மக்களின் வாழ்வியல் முறை எப்படி இருந்தது என்பதைப் பற்றிக் 'கோபல்லபுரத்து மக்கள்' நாவல் மூலம் அறிந்து கொள்ளலாம். இல்லத்தில் அவர்கள் கடைப்பிடித்த பழக்க வழக்கங்களையும், சமுதாயத்தில் நிலவிய கல்வி முறைகளையும் ஒரு சில உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தலாம்.

## 1.4.1 பழக்க வழக்கங்கள்

அக்காலச் சமுதாயத்தில் காணப்பட்ட பழக்க வழக்கங்கள் நாவலில் இடம் பெற்றுள்ளன. அவை பின்வருமாறு

- நெருப்புதானம்



தானம் பலவகைப்படும். அதில் நெருப்பு தானமும் ஒன்று. நெருப்பைப் பாதுகாத்து வைத்து இல்லாதவர்கள் வந்து கேட்கும்போது சிறிது கொடுப்பது ரேணம்மாவின் வேலையாக இருந்தது. அக்கால மக்கள் தானங்களில் சிறந்தது நெருப்புதானம் என்று கருதினர்.

- வைகறைத் துயிலெழல்



இந்நாவலில் மக்கள் வைகறையில் கோழி கூவியவுடன் துயிலெழுவதையே பெருமையாகக் கருதினர். பொழுது விடிந்து எழுந்தால் அது அம்மக்களுக்கு அவமானமாக இருக்கிறது என்பது இதன்மூலம் புலப்படுகிறது.

- செவ்வாய்க்கிழமை விரதம்

இந்நாவலில் இடம்பெறும் பெண்களால் ஆடி, தை, மாசி மாதங்களில் செவ்வாய்க்கிழமை இரவு விரதம் கடைப்பிடிக்கப்படுவதால், ஆண்கள் எல்லாம் மடத்தில் சென்று படுத்து விடுவார்கள். இந்த விரதத்தைப் பற்றி ஆண்கள் கூட்டத்தில் பேச்சுகள் யூகமாகவும் கற்பனையாகவும் தான் இருந்தது. பெண்கள் செவ்வாய்க்கிழமைகளில் செய்யும் கொழுக்கட்டைகளை ஆண்களுக்குக் கொடுத்தால் கண் தெரியாமல் போய்விடும் என்று கருதினர். இந்த விரதம் இன்றும் கிராமப்புறங்களில் நடைமுறையில் உள்ளது.

**1.4.2** கல்வியும் பயிற்சியும்

ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் பூமணல் அடித்து அதில் விரலால் கோடு கிழித்து எழுதிப் படித்தனர். பிறகுதான் எழுத்தாணி பிடித்து ஓலை ஏட்டில் எழுதப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஊருக்கு ஏட்டுப்பள்ளி வந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த மாணவன் அதிகாலையில் எழுந்து முதலில் பள்ளிக்கு வருகிறானோ அவனுக்கு 'ஏரான்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஏட்டுப்பள்ளிக்குச் சாமிக்கண்ணாசாரி ஆசிரியராக வருகிறார். அவர் உருவாக்கிய சரஸ்வதி தேவியை அலங்கரிக்கப்பட்ட தேரில்

ஊர்வலமாகக் கொண்டு வந்து பாட்டுப்பாடிக் கொண்டே சுற்றிலும் கோலாட்டம் அடிப்பர். வன்னிமரம் நடப்பட்டிருக்கும் இடத்திற்குத் தேர்வந்து சேரும். ஆசிரியர் வன்னிமரத்தின் மீது வில்லை வளைத்து அம்பு எய்வார். அதைத் தொடர்ந்து வன்னிமரம் பிடுங்கப்படும். இந்த 'மா நோன்பு ஊர்வலம்' வருடாவருடம் நடைபெறுகிறது.

- சிலம்பப் பயிற்சி (கம்பு சுற்றி ஆடும் ஆட்டம்)



ஏட்டுக்கல்வியைப் பகலிலும், சிலம்பப் பயிற்சியை இரவிலும் சாமிக்கண்ணு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கிறார். ஆசிரியர் சிலம்பப் பயிற்சி கொடுப்பதற்கு முன் தினமும் அவர் தனியாகத் தானே பயிற்சி எடுத்துக் கொள்வார் என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து நாள்தோறும் பயிற்சி செய்துவிட்டு, பிறகு மற்றவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற கருத்து புலனாகிறது. ஒரு கலையை மற்றவர்களுக்குப் பயிற்றுவிக்கும் குரு தான் முதலில் பயிற்சி செய்ய வேண்டிய கடமையுணர்வுடையவர் ஆகின்றார்.

- கவிராயர்கள்

பொருநராற்றுப்படையில் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர் என்ற இருவகையான கவிராயர்கள் உள்ளனர். அந்த வகையில் ஏர்க்களம் பாடும் கவிராயர்கள் இந்த நாவலில் 'கம்பர்' என்று அழைக்கப்படுகின்றனர். இந்தக் கவிராயர்கள் மிகுந்த மரியாதையோடு நடத்தப்பட்டனர். அவர்கள் தங்களுக்குத் தேவையான கம்பினை

(ஒரு வகை தானியம்) தாங்களே எடுத்துக் கொள்ள அனுமதிக்கப் பெற்றிருந்தனர். இந்த நிகழ்ச்சி கவிராயரின் செல்வாக்கைக் காட்டுகிறது. இவ்வாறு கோபல்லபுரத்து மக்களின் வாழ்க்கை முறை இருந்தது.

**1.4.3** வாழ்வியல் மாற்றம்

மேற்குறிப்பிட்ட வாழ்வியல் முறைகளைக் கடைப்பிடித்த மக்களின் வாழ்க்கையில் சில மாற்றங்களும் ஏற்பட்டன. நடைமுறைப் பழக்க வழக்கங்களிலும் சிலவற்றை நாகரிகம் என்று கருதினர். படித்தவர்கள் சட்டை போட்டுக் கொள்வதோடு அதில் ஒரு பவுண்டன் பேனாவையும் சொருகிக் கொண்டனர்.

- புதுமைக்கு மறுப்பு

எந்தப் புதுசு வந்தாலும் முதலில் அதைச் சந்தேகிக்கிறதும் அதையே குறைபேசிப் பரப்புகிறதும், பிறகு தயக்கத்தோடு வழியில்லாமல் ஏற்றுக் கொள்கிறதுமே, ஏற்றுக்கொண்டபிறகு புதிய வியாதிகள் அதனால்தான் பரவுவதாகச் சொல்லுவதும் வழக்கம். கோபல்லபுரத்துப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பையன்கள் முதன்முதலில் ஊரைவிட்டு வெளியூர் போய்ப் படிக்க ஆரம்பித்தனர். ஆங்கிலக் கல்வி பயின்ற பிறகு தலையிலிருந்த குடுமியைக் 'கிராப்'பாக வெட்டிக் கொண்டனர். அதைக் கண்ட ஊரார் 'என்ன இது அசிங்கம்' என்று முகம் சுளித்தனர். பாட்டிமார் 'குய்யோ முறையோ' என்று புலம்பினர். இவ்வாறு புதிய நிகழ்வுகளுக்கு ஊரில் ஏற்பட்ட எதிர்ப்புகளைப் பல இடங்களில் சுவையாகக் கூறியுள்ளார் ஆசிரியர்.

- புதிய பொருள்களைக் கண்டு வியப்பு






மணிபார்க்கும் கடிகாரம், மதுரையிலிருந்து வாங்கி வந்து நுன்ன கொண்ட

நாயக்கர் வீட்டில் மாட்டியிருந்தது. ஊரிலுள்ளவர்கள் அந்தக் கடிகாரத்தைக்கண்டு மகிழ்ந்ததோடு மணிபார்க்கவும் கற்றுக் கொண்டனர். "கடையில் விற்கும் தீப்பெட்டியை வாங்கி ஒரு குச்சில  எடுத்து உரசினா தீப்பிடிக்கி" என்று தீப்பெட்டியை வேடிக்கைப் பொருளாகக் கண்டு வியந்தனர். தீப்பெட்டியைப் போலவே, ஜப்பானிலிருந்து வந்த 'மௌத் ஆர்கன், ஜெர்மன் பூட்டு, பேனாக்கத்தி, மண்ணெண்ணெய் ஊற்றப்பட்ட அரிக்கன்விளக்கு, டார்ச்லைட்' இது போன்ற பொருள்கள். மக்களின் கவனத்தைக் கவர்ந்தது. இவ்வாறு பண்பாட்டு மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள், புதிய பொருட்களைக் கண்டு வியப்புற்று வரவேற்புத் தந்தனர். கோபல்ல புரத்தின் தோற்றத்தைப் போலவே அந்த மக்களின் மன இயல்பும் மெதுவாக மாற்றமடைந்து கொண்டே வந்தது. பழக்கவழக்கங்களை விட ஆடை அணிகள் போன்ற உடம்பு சம்மந்தப்பட்ட காரியங்களில் மட்டும் வெகுதுரிதமான மாற்றம் காண முடிந்தது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 1.5 சமுதாயப் பிரச்சனை

கி.ரா. விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இருந்த இந்தியாவின் நிலையையும், விடுதலைப் போராட்டத்தின்போது இந்திய நாட்டின் நிலையையும் அப்பொழுது நிலவிய சமுதாயப் பிரச்சினைகளையும் பலர் மூலம் இந்நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.

### 1.5.1 விடுதலைப் போராட்டம்

கழுகுமலை ஐயர், "நாடு அந்நியனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. மக்களின் பசியும், ஏழ்மையும் ஒழிய வேண்டும் என்றால் மிக விரைவில் நாடு சுதந்திரம் அடைந்து ஆகவேண்டும்" என்று சுட்டிக் காட்டுகிறார். இதனால் "கரிசல் காட்டில் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் கோபல்லபுரத்து மக்களின் மனதில் இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டக் கனல் ஒன்று தெறித்து வந்து விழுந்து மெல்ல கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது" என்று கூறுகிறார் ஆசிரியர்.

- காந்தியக் கொள்கைகள்



விடுதலைப் போராட்ட வீரர்கள் மூலம் விழிப்புணர்வு பெற்ற மக்கள், காந்தியக் கொள்கைகளையும் வாழ்க்கையில் கடைப்பிடித்தனர். அந்தக் காலத்தில் வீசிய காந்தியப் பெரும்புயல் அவர்களையும் வெகுவாகப் பாதித்தது. சில உணர்ச்சி மிகுந்த வீரர்கள் கிராம மக்களிடமுள்ள மூட நம்பிக்கைகள் பற்றியும், அறியாமை, சுத்தமின்மை ஆகியவை பற்றியும் பேசினர். முதலில் மது ஒழிப்பை மேற்கொண்டனர். பின்னர் சாதி ஒழிப்பில் ஈடுபட்டனர். இவ்வாறு காந்தியக் கொள்கைகள் பரவின. கொடிகாத்த குமரன்,

பகத்சிங் போன்ற வீரர்களின் வரலாற்றை அறிந்த இளைஞர்கள் நெஞ்சம் குமுறினர். பெரியவர்களின் திடமனத்தையும் இச்செய்திகள் பாதித்தன.

"வெள்ளைக்காரனிடமிருந்து நாம் விடுதலை பெறுவதற்கு முன் பார்ப்பனியத்திலிருந்தும், மக்கள் விடுதலை பெறணும். இது ரொம்பவும் முக்கியம். நாடு விடுதலையடைந்தவுடன் இப்படியான சீரழிவு சக்திகளும் அழிந்தே தீரும்" என்று அன்னமய்யா எடுத்துக் கூறுகிறார். நாடு விடுதலை அடைந்த பிறகு கிராமத்தில் மூன்று அரசியல் பிரிவுகள் ஏற்பட்டன. அவை காங்கிரஸ் கட்சி, திராவிட இயக்கம், கம்யூனிஸ்ட் கட்சி ஆகும். இந்த மூன்று கட்சிகளோடு ஆங்கிலேயர்களுக்குத் துதிபாடும் உதிரிகளின் கட்சியும் சேர்ந்தது. இவ்வாறு விடுதலைக்கு முற்பட்ட, விடுதலைக்குப் பிற்பட்ட மக்களின் நிலையைச் சித்திரித்துள்ளார்.

# 1.6 புதினத்தில் கையாளும் உத்திகள்

கி.ரா., வின் நாவலில் கையாளும் எழுத்துநடை, வர்ணனை, சொல்லாட்சி, பழமொழி, உவமை, நாட்டுப்புறப்பாடல் ஆகியவற்றில் ஒரு சில உதாரணங்களை இங்குக் காணலாம்.

கரிசல் காட்டு மக்களின் வாழ்க்கை முறை, பேச்சுவழக்கு எல்லாம் இவருடைய கதை நடப்பில் எளிமையையும் அழகையும் கூட்டுகின்றன. மேலும் இவர் நடையில் இடையிடையே நகைச்சுவை இழையோடுகிறது.

## 1.6.1 வர்ணனை



“கொடியில் காயப் போட்டிருந்த சேலையை எடுப்பது போல மஞ்சள் வெயிலை உருவி எடுத்துக் கொண்டு மேகமலைக்குள் இறங்கினாள் சூரியதேவி” என்ற அழகான புதிய வர்ணனையோடு, ‘கோபல்லபுரத்து மக்கள்’ என்ற நாவல் தொடங்குகிறது.

“அச்சிந்தலு பால் கறக்க ஆரம்பித்தாள். பாத்திரத்தில் பால் பீச்சும் ஓசை, பால்மீது பால் விழும் ஓசை, பால் நுரையின்மீது, பால்விழும் ஓசை இப்படிக் கேட்டுக் கொண்டிருந்தது. மத்தியில் நுரையைத் தொட்டு காம்புகளில் தேய்த்துப் பால் கறக்கும் லாவகம். சொரு சொரு சொரு என்று பாத்திரம் நிறைந்து கொண்டு வருவதை ஓசையிலிருந்து நிதானிக்க முடிந்தது.” இவ்வாறு அமைந்துள்ள வர்ணனை படிப்பவர்களின் காதில் ஒலிக்கிறது.

அந்த மக்கள் மனசில் காரிக்காளை, தனக்கென்று ஓர் இடம் பிடித்துக் கொண்டது. அதைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார்கள் பலர். அதன் உடல்வாகை, புச்சன்னா வர்ணிக்கிறார்.

பார்ரா, என்ன நீளம் கீரிப்பிள்ளை கெணக்க

திமிலைப் பாத்தயா தேர் மாதிரி; எம்புட்டு

உசரம், வாலைப்பாரு; சுண்டெலிவால் போல

அம்புட்டுச் சிறிசு; சன்னம். சரியான கல்க்காட்டுப்

பிறவி; ஈக்கி நுழையுமா பாரு குளம்புக

நடுவில! அதும் முதுகுல ரண்டாள் படுத்துப்

புரளலாம்டா!

இவ்வாறு காரிக்காளையின் வர்ணனை எடுத்துரைக்கப்படுகிறது.

ஊருக்கு இரயில் வந்த முதல்நாள் அன்று ஊரே திரண்டுபோய்ப் பார்த்தது.



ஜிகு ஜிகு ஜிகு ஜிகு ண்ணு ஓசையு ஒலியு

மொலியுமா நெருப்பும் பொகையும்

கக்கிக்கிட்டு பொசல்க்காத்து எறைஞ்சி

வார மாதரி வருது! பாத்துக்கிட்டிருந்தவங்களுக்

கெல்லாம் என்ன செய்யிறதுண்ணுட்டுத்

தெரியலெ! விழுந்தாம்பாரு... தலையைக்

கவிழ்ந்து கொஞ்சம் சிரித்து விட்டு,

அப்பிடியே... நெடுஞ்சாங் கெடாயா! விழுந்து

கும்பிட்டதைப் பார்க்கணுமெ கூட்டமெல்லாம்....!!"

என்று கூறிய நாயக்கரின் கொந்தளிப்பான

குரலையும் நடிப்பையும் பார்த்து எல்லாரும்

ஓ என்று சிரித்துக் கைதட்டினார்கள்

என்று இரயில் வண்டியை முதலில் பார்த்த மனிதர் நிலை. வருணிக்கப்பட்டுள்ளது. ஆற்றில் புதுவெள்ளம் வரும்போது விழுந்து வணங்குவது தமிழ் மரபு. அந்த மரபுப்படி இரயிலையும் வணங்கினார்கள் போலும்.

**1.6.2** சொல்லாட்சி

தேயிலையைச் சுவைத்து, அனுபவித்ததைப் பற்றிப் பின்வரும் சொல்லாட்சி விளக்குகிறது.

"தூக்கம் வராம இருக்க இப்ப என்னவோ ஒரு இலை வந்திருக்காமே?" என்று கேட்டான் சொள்ள முத்து.

"ஆமடப்ப; அதக்கேக்கிய. அது ஒரு கதை!" என்று சிரித்துக் கொண்டே ஆரம்பித்தார் துயாரம்.

'கொத்தூரு போயிருந்தேன். போயிருந்தனா, ராச்சாப்பாட்டுக்கு மேலெ, எல்லாரும் உக்காந்து பேசிக்கிட்டிருந்தோம். மாமனாருதான் சொன்னாரு 'மாப்பிள்ளை வந்திருக்காரில்ல, தேயிலைத்தண்ணி போட்டுக் கொடுங்க'.

அவரு அப்படிச் சொன்னதும் எல்லோரும் சிரிச்சாங்க! எனக்கு மொத விளங்கல பார்த்துக்கொ. பெறகு அவருதாஞ் சொன்னாரு கதெய.! கேட்டுக்கொ நல்லா; ஏ சொள்ள முத்தோய்" என்று தொடர்ந்தார்.

"ஒரு நா ரவப் பொளுதில ராச்சாப்பாடு முடிஞ்சி படுக்கப் போறதுக்கு முன்னாடி அந்தப்படி கருப்பட்டி தேயிலையப் போட்டுக் கொதிக்கவிட்டு நல்ல பாலை ஊற்றிக் குடிச்சிப் பார்த்தாங்களாம். குடிக்கிறதுக்கு அம்புட்டு ருசியா இருக்காம். ஆளுக்கு ரண்டு, மூணு போகணிண்ணு குடிச்சிட்டு, கொஞ்ச நேரம் பேசிட்டுப் படுத்தாங்களாம். தூக்கம் வரலையாம். இது என்ன கூத்து இன்னைக்கு இப்படித் தூக்கமே வரலையாம். கொஞ்சம் நேரம் உக்காந்து ஊர்க்கதைகளை எல்லாம் பேசி.. பெறகும் கோழி கூப்பிடலை!"

சே; இந்தத் தேயிலைத் தண்ணி செஞ்ச கூத்தில்லா, இப்படி ஆயிட்டது. இதும் முகத்திலேயே முளிக்கப் படாதுன்னுட்டு அன்னைக்குப் பெட்டியில வச்சி

மூடுனதுதான்னுட்டுச் சொல்லி,. கொஞ்சம் நீங்களும் சாப்பிட்டுப் பாக்கீகளா மாப்ளென்னு கேட்டுச் சிரிச்சாரு சம்மந்தகாரரு!

இவ்வாறு வட்டார வழக்கு இந்நாவலில் பல இடங்களில் காணப்படுகிறது.

கி.ரா., பால் உணர்வுச் சிந்தனையில் சின்ன வயதில் ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் உள்ள வேறுபாட்டை பின்வருமாறு விளக்குகிறார். கிட்டப்பனுக்கு ஆண் குழந்தைகளுக்கே உண்டான ஒரு வித மக்குத்தனம். இனம் புரியாத வெட்கம், தயக்கம் இதெல்லாம் இருந்தது. ஆனால் அச்சிந்தலுவுக்கு பெண்ணுக்குரிய சுதாரிப்பும் துருதுருப்பும் இருந்தது. ஆண் பிள்ளைகளுக்கு அப்படிப்பட்ட சுறுசுறுப்பு இருப்பதில்லை. பெண் வேப்பமரம், சீக்கிரம் வளர்ந்து விடுகிறாள். ஆண் அரசமரம்; நின்று நிதானித்து வளர்ந்து, நிலைத்து நிற்கிறான். வளர வளர அச்சிந்தலுவின் பெருந்தீனி சுருங்கி, சதை பூரிப்பும் இறுகி உடம்பில் அரும்புகட்ட ஆரம்பித்தது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே இப்பருவத்தில் பால்ச்சோளப்பயிர் வளர்ச்சிபோல பெண் ஆச்சரியமூட்டுகிறாள். வேளைக்கொரு தினுசாய் நாளைக்கொரு தோற்றமுமாய், தூங்கி அவள் எழுந்ததும் அவளைப் பார்த்தால், அப்போதுதான் கடைந்து திரட்டிய பச்சை வெண்ணெயின் மின்னாப்பும் ஆரோக்ய சௌந்தரியமும் தெரியத் துலங்குவாள். அவளுடைய அருகாமையே சூழ்நிலைக்கு ஒரு புத்துணர்ச்சி தருவதாக இருக்கும். அப்போதைய அவளுடைய நடமாட்டங்களையும் மௌனமான அசைவுகளையும் நாளெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் பிரியத்துடன். அவர்களுடைய பருவங்கள் உயர உயர உடம்புகள் வேற்றுமைப் படப் பட மனங்கள் மனத்தோடு ஒருமைப்பட்டது. சோளப்பயிரின் வளர்ச்சியோடு பெண்ணின் உடல் வளர்ச்சி ஒப்பிடப் பட்டுள்ளது. இவ்வாறு பல இடங்களில் கி.ரா.,வின் சொல்லாட்சியைக் காணலாம்.

**1.6.3** நாட்டுப்புறப் பாடல்

மக்களின் பேச்சுவழக்கில் காணப்படும் நாட்டுப்புறப் பாடல்களும் இந்நாவலில் இடம் பெற்றுள்ளன. நெல்லுச்சோறு என்பது இந்த மக்களின் கனவாக இருந்தது. சாமிக்கண்ணாசாரி இதைக்கண்டு, நினைத்து நினைத்து அதிசயப்பட்டார். இந்த அதிசயத்திலிருந்து அவர் விடுபட ரொம்ப நாள் பிடித்தது. கலியாண வீட்டுப் பந்திகளில் ஒரே நபர் மாறி மாறி திரும்பவும் திரும்பவும் உட்கார்ந்து சாப்பிட்டதை இங்கேதான் பார்த்தேன் என்று சொல்லுவார்.

நெல்லுச்சோற்றைப் பற்றி மக்கள் பாடுகிற நாடோடிப் பாடல்களைக் கேட்டு யோசித்தார்.

நித்தம் நித்தம் நெல்லுச்சோறு நெய்மணக்கும்

கத்தரிக்காய்....

இப்பாடல் நெல்லுச்சோற்றைப் பற்றியும், சுவையான கத்தரிக்காய் குழம்பைப் பற்றியும் கூறுகிறது.

ஆட்டுத் தோலுக் கிடங்கொடுத்த

தாலே வந்த மோசம் – அத

னாலே வந்த மோசம்...

என்ற பாடல் ஆங்கிலேயர் நம்ம நாட்டுக்கு முதல் முதலில் ஆட்டுத்தோல் வாங்க வியாபாரியாக வந்ததையும், நம் நாட்டு மக்களை ஏமாற்றியதையும் அழகாக விவரிக்கிறது. ஆங்கிலேயர்களை இந்திய மக்கள் வெள்ளைக்காரன் என்று அழைத்தனர். அந்த வெள்ளைக்காரர்கள் இந்திய மக்களை அடிமைப்படுத்தியதைப் பின்வரும் மற்றொரு பாடல் விளக்குகிறது.

ஊரான் ஊரான் தோட்டத்திலே

ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்காய் – அத

காசுக்கு ரண்டா விக்கச் சொல்லி

காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்

ஆங்கிலேயர் நம்நாட்டிற்கே வந்து நமக்கே கட்டளையிட்டதை மேற்குறிப்பிட்ட பாடல் உணர்த்துகிறது.

**1.6.4** பழமொழிகள்

வாய்மொழி இலக்கியமாக இருந்த பழமொழி நாட்டுப்புற இலக்கியம் என்ற பெருமை பெற்றது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் பழமொழி இரண்டறக் கலந்துள்ளது. மாடுகள் பழகிய இடத்தில்தான் புல் மேய விரும்பும். புதிய இடத்தை விரும்புவதில்லை என்பதை

மாடு மேய்ந்த இடம்

மழை பேய்ந்த இடம்

என்ற பழமொழி விளக்குகிறது.

கடும் உறவு கண்ணை மறைக்கும்

என்பது ஒரு மொழி.

உருக்குத்தி (அம்மை ஊசி) குத்துனயோ

உருக் குலைஞ்சி போனயோ

அம்மைகுத்தின குழந்தையின் அழகு உருக்குலைந்து போகும் என்ற அர்த்தத்தில் இந்தப் பழமொழி மக்களின் அறியாமையைக் காட்டுகிறது.

தீராயும் படியும் தெருவில இருக்கு

என்று ஒரு பழமொழி உண்டு. தீராயு என்பது திராயு (தராசு) படி என்பது மனிதர்களைப் பற்றி மனிதர்களே நிர்ணயிக்கும் எடையின் அளவு. தெரு என்பது பொதுவைக் குறிக்கும். மனிதர்களைப் பற்றி மனிதர்களே எழுதும் குறிப்புகள் இவை.

காடைக்கறிக்கு மிஞ்சினகறி ஒலகத்திலேயே கிடையாதாக்கும்! என்கிற பெருமை லகுவணத் தேவருக்கு,

முழு உடும்பு

முக்காக் காடை

அரை ஆடு

கால்க் கோழி

என்று சொல்லப்படும் பழமொழியில் அவருக்கு நம்பிக்கையில்லை. அதை முழுக்காடை முக்கால் உடும்பு என்று மாற்றிச் சொல்லுவார். இந்நாவலில் பழமொழி ஒவ்வொருவர் பேச்சிலும் இடம் பெற்றுள்ளது.

**1.6.5** உவமைகள்

கி.ரா., கையாண்ட உவமைகளில் ஒன்று. “தேசம் பரிபூரண சுதந்திரம் அடைந்தவுடன், இந்த ஒட்டுண்ணி வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு ஒரு முடிவுகாலம் வந்து விடும்” என்றான் அம்மையா.

“இல்லை; நீ சொல்றது தவறு. தேசம் சுதந்திரம் அடைவது என்பது நாம் சட்டிக்குப் பயந்து நெருப்பில் விழுந்த கதையாத்தானிருக்கும்” என்றான் சாமி நாயக்கர்.

கம்மஞ் சோத்தையே தின்று தின்று சவக்களித்துப் போன வாய் நெல்லுச் சோத்தைக் கொண்டா கொண்டா என்று வாங்கி வாங்கிச் சாப்பிடும். “கரிசல் காட்டுக்காரங்களுக்கு நெல்லுப் பருக்கையைக் கண்டா, குலதொய்வத்தைக் கண்டது மாதிரி!” என்று தீரவாசத்துக்காரர்கள் இவர்களைக் கேலி செய்தார்கள். பர்மா அரிசி வருவதற்கு முன்னால் விசேஷ வீடுகளில் கம்மஞ்சோறும் ஆட்டுக்கறியும் தான் என்று

ஆகிவிட்டது. நெல்லுச்சோறு என்பது இந்த மக்களின் கனவாக இருந்தது.

பின்வரும் உவமை உடல்நிலையைப்பற்றி விளக்குகிறது. “எந்த உடம்பும் ஆரோக்யமாக இருந்தால் பசிக்கிறதும் தூங்குகிறதும் முழிப்புத் தட்டுகிறதும், சொல்லி வச்சது போல ஒரு ஒழுங்காகச் சுழலுகிற சக்கரம் மாதிரி நேரம் தவறாமல் நடக்கும்”. உடல் நலமாக இருந்தால் பசிக்கிறதும், தூங்குகிறதும் சரியான நேரத்தில் நடக்கும் என்பதை இவ்வுவமை சுட்டுகிறது.

ஒரு மனிதனுக்கோ ஒரு குடும்பத்துக்கோ ஏழ்மையானாலுஞ்சேரி சீர்மையானாலுஞ்சேரி முப்பது வருசங்களுக்குத்தான். சுழலும் சக்கரம் போல கீழேயுள்ளது மேலேயும், மேலே உள்ளது கீழேயும், இப்படி மாறி மாறி வரும் என்று புதூர் நாயக்கர் மனித வாழ்க்கையைப் பற்றி மதிப்பிடுகிறார். ‘சுழலும் சக்கரம் போல்’ என்ற ஒரே உவமை இருவேறு கருத்துக்களை விளக்க பயன்படுத்தப்படுகிறது. இதே போல பல உவமைகள் ‘கோபல்ல புரத்து மக்கள்’ என்ற நாவலில் இடம் பெற்றுள்ளது.

## 1.7 தொகுப்புரை

கி.ராஜநாராயணன் தன்னுடைய சுற்றுப்புற மக்களின் வாழ்க்கை நிலைகளை அதற்குரிய சூழலில் இயல்பாகவும், கலைத் தன்மையுடனும் பதிவு செய்து ஒரு சிறப்பான பங்களிப்பைத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வழங்கியிருக்கிறார். இயற்கையோடு இரண்டறக் கலந்த கிராம மக்களின் வாழ்க்கையைக் கூறுவது இவரது தனிச்சிறப்பாகும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் 2 P10142 இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ்ப் பெண் நாவலாசிரியர்களுள் இராஜம் கிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர். அவர் தம் சமூக நனவுமிக்க படைப்புகளால் வாசகர்களிடையே மட்டுமின்றித் தமிழ்நாட்டு அறிவாண்மையரிடையேயும் பெரிதும் பேசப்படுகிறவராகத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறார். இந்தப் பாடம் இராஜம் கிருஷ்ணனை அறிமுகம் செய்து அவர் எழுதிய சமூகப் புதினங்கள் வழி வெளிப்படும் அவருடைய சமுதாயப் பார்வை, பாத்திரப்படைப்பு, நடைத்திறன் ஆகியவற்றை விளக்குகிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படிப்பதால் பின்வரும் பயன்களைப் பெறலாம்.

- இராஜம் கிருஷ்ணன் புதினங்கள் மூலம் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களையும், சமூகத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளையும் தெரிந்து கொள்ள முடியும்.
- குடும்பம், வாழ்க்கை, சமுதாயம், ஜனநாயகம் பற்றிய இராஜம் கிருஷ்ணனின் மதிப்பீட்டை அறியலாம்.
- இராஜம் கிருஷ்ணனின் சமுதாயப் பார்வை எந்த அளவிற்குத் தீவிரத்தன்மையும் நுட்பமும் கொண்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.
- இராஜம் கிருஷ்ணனின் நடையில் காணப்படும் எளிமை, உவமை வர்ணனை, வட்டார வழக்கு ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

2.0 பாட முன்னுரை

2.1 இராஜம் கிருஷ்ணன்

2.2 இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள்

2.3 கதைக்கருக்கள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

2.4 சமூகச் சீர்திருத்தக் கருத்துகள்

2.5 கதைமாந்தர்

2.6 நாவல்களில் கையாளும் உத்திகள்

2.7 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 2.0 பாட முன்னுரை

இக்காலத் தமிழ் இலக்கிய வகைகளுள் புதினமும் ஒன்று. தமிழ்ப் புதின எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர் இராஜம் கிருஷ்ணன். இராஜம் கிருஷ்ணனின் நாவல்கள் எந்த வகையைச் சார்ந்தவை என்பது பற்றியும், அந்த நாவல்களில் பேசப்படும் கதைக்கரு, சமூகச் சீர்திருத்தப் போக்கு, கதைமாந்தர் படைப்பு, நாவல்களில் கையாளும் உத்திகள் ஆகியவை பற்றியும் இப்பாடத்தில் விளக்கப்படுகின்றது.

# 2.1 இராஜம் கிருஷ்ணன்



தற்பொழுது வாழ்ந்து வரும் மூத்த பெண் எழுத்தாளரான இராஜம் கிருஷ்ணன் பிறந்த தேதி 05.11.1925. பெற்றோர்கள் யஞ்ஞ நாராணன், மீனாட்சி. கணவர் மின்வாரியப் பொறியாளரான முத்து கிருஷ்ணன். 1946லிருந்து பல்வேறு பத்திரிகைகளில் எழுதி வருகிறார். கணவரின் பணிமாற்றம் காரணமாக ஊட்டி, குந்தா, கோவா போன்ற இடங்களுக்குச் சென்றிருந்தமை இவர் நாவல் உருவாக்கத்திற்கு உறுதுணையாக இருந்தது.

## 2.1.1 இராஜம் கிருஷ்ணனின் படைப்புகள்

1948-இல் சுதந்திர ஜோதி என்ற நாவல் மூலம் எழுத்துலகில் புகுந்த இராஜம் கிருஷ்ணன் நாற்பதுக்கும் மேற்பட்ட நாவல்களைப் படைத்துள்ளார். முதல் சிறுகதையான வெள்ளி டம்ளர் சாவி அவர்களின் ‘வெள்ளி மணி’யில் வெளிவந்தது. அலைகடலில், பவித்ரா, அல்லி போன்ற குறு நாவல்கள், டாக்டர் ரங்காச்சாரி வாழ்க்கை வரலாறு, பயணநூலான அன்னை பூமி, மாஸ்கோ போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். கதையின் கதை, கானாற்றின் செல்வங்கள் போன்ற 25 வானொலி நாடகங்களையும் படைத்துள்ளார். ஊசியும் உணர்வும் என்ற உயரியகதை உலக மொழிகளின் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. அதிலிருந்து அவ்வப்போது சில ஆண்டு மலர்களிலும் மற்றும் சிறப்பிதழ்களிலும் சிறுகதைகள் எழுதினார். இருந்தாலும், “நாவல்துறையில் அவர் பெற்றிருக்கும் புகழ்தான் முக்கியமானது” என்று மணிக்கொடி எழுத்தாளரும் சிறந்த திறனாய்வாளருமான ‘சிட்டி’ பெ.கோ. சுந்தரராஜன் குறிப்பிட்டுள்ளார். இராஜம் கிருஷ்ணன் சிறுகதை, வாழ்க்கை வரலாறு, வானொலிக் கட்டுரைகள், வானொலி நாடகங்கள், மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம் போன்ற பல துறைகளில் சாதனை முத்திரை பதித்திருந்தாலும் நாவல் துறையில் மட்டுமே அதிகக் கவனம் செலுத்தியுள்ளார்.

மிகச்சிறந்த நாவலாசிரியரான இவர் இருமுறை இலக்கியச் சிந்தனைப் பரிசு

பெற்றுள்ளார். இருமுறை சோவியத் நாடு சென்றுள்ளார்.
பெண்குரல் - கலைமகள் பரிசு (1953)
மலர்கள் – விகடன் பரிசு (1958)
வேருக்கு நீர் – சாகித்ய அகாதெமி விருது (1973)
வளைக்கரம் – சோவியத் நாடு நேரு பரிசு (1975)
கரிப்பு மணிகள் – இலக்கியச் சிந்தனை விருது (1980)
சேற்றில் மனிதர்கள் – இலக்கியச் சிந்தனை விருது (1983)
சுழலில் மிதக்கும் தீபங்கள் – தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு (1983)

இராஜம் கிருஷ்ணன் பெற்ற பரிசுகளே அவருடைய இலக்கியத் தரத்தை உயர்த்திக் காட்டும் துலாக் கோலாகத் (தராசாக) திகழ்கின்றன.

**2.1.2** தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறுமிடம்

இராஜம் கிருஷ்ணனின் சிறுகதை, வாழ்க்கை வரலாறு, வானொலி நாடகங்கள், மொழிபெயர்ப்பு சிறுவர் இலக்கியம் போன்ற பல துறைகளில் தன் பங்களிப்பைச் செய்திருந்தாலும் சிறந்த சமூக நாவலாசிரியர் என்ற முறையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறுகிறார்.

நாவலுக்கான மையப்பொருளை முன்பே திட்டமிட்டு உரிய இடத்தை அடைந்து, களஆய்வு செய்து, சமகாலப் பிரச்சினைகளை எழுதுவதே இராஜம் கிருஷ்ணனின் தனித்தன்மையாகும்.

புதிய கருக்களுக்கு உருகொடுப்பதும், பழைய பொருளுக்குப் புதிய பின்புலம் தந்து தெளிவுபடுத்துவதும் அவரது சிறப்புத் தன்மைகள்; மானிடவியலையும் மனவியலையும் (Anthropology and Psychology) எழுதுவதில் வல்லவர்; பழங்குடியினர், பல மாநில மக்களின் வாழ்வு, நாட்டு வரலாறு, அரசியல் ஆகிய பின்னணியில் நாவல் படைப்பதில் வல்லவர்.

## 2.2 இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள்










"இலக்கியம் படைப்பவர் சாமானிய மக்களை விட்டு விலகி நிற்கும்போது அங்குக் கலை மலர்வதற்கில்லை" என்று குறிப்பிடும் இராஜம் கிருஷ்ணன், நாவல் என்பது காலத்தால் உருவான கலைவடிவம் என்பதை நன்கு உணர்ந்தவர். நாற்பதுக்கும் மேற்பட்ட இவருடைய நாவல்களைச் சமூக நாவல்கள், வட்டார நாவல்கள் என்று இரு வகைகளில் அடக்கலாம்.

### 2.2.1 சமூக நாவல்கள்

பால் வேறுபாடு, வர்க்கப் போராட்டம், பாலியல் வன்முறை, சிறுவர் சிறுமியர் மீதான வன்முறை, பெண்களின் அடிமை நிலை போன்ற பல பிரச்சினைகளைப் பற்றி இராஜம் கிருஷ்ணன் தம்முடைய சமுக நாவல்களில் பேசுவதோடு நிற்காமல், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழியும் காட்டியுள்ளார். காலந்தோறும் பெண்கள் வாழ்ந்த அடிமை வாழ்வைப் பற்றி விளக்கிக் கூறுவதோடு அமையாமல், இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் கல்வியறிவோடு, தொழிற்கல்வியையும் பெற்று எவ்வாறு

விழிப்புணர்வோடு வாழ வேண்டும் என்றும் பல சமூக நாவல்களில் அறிவுறுத்தியுள்ளார். சமுதாயம் சிறப்படைய அவர் கூறும் வழிகள் மூலம் இராஜம் கிருஷ்ணனின் நாட்டுப்பற்றை உணர முடிகிறது.

இராஜம் கிருஷ்ணனின் சமூக நாவல்களில் சேற்றில் மனிதர்கள், கரிப்பு மணிகள், அலைவாய்க் கரையில் ஆகியவை சிறப்பு வாய்ந்தவை. உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கைப் பிரச்சினைகளை இந்நாவல்கள் வெளிப்படுத்துகின்றன.

**2.2.2** வட்டார நாவல்கள்

இராஜம் கிருஷ்ணன் எழுதிய குறிஞ்சித்தேன், வளைக்கரம், கரிப்பு மணிகள் போன்ற வட்டார நாவல்களில், அந்தந்த வட்டார மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள் சித்திரிக்கப்பட்டிருப்பதோடு மண்ணின் மணமே நாவலின் பின்னணியாய் நின்று படிப்போரை ஈர்க்கிறது.

குறிஞ்சித்தேன் எனும் நாவல் படகர் வாழ்வின் உண்மையான படப்பிடிப்பு. போலி நாகரிகத்தின் இடையே பண்பாடு காக்கும் படகரின் காவியம். பழைய பண்பாட்டிற்கும் புதிய நாகரிகத்திற்கும் இடையே நடக்கும் போராட்டத்தினை இந்நாவலில் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இந்நாவலைப் படிக்கும் போது நீலகிரி மலையிலேயே பல்லாண்டுக் காலம் வாழ்ந்து வருவது போன்ற உணர்வே நம்முன் மேலோங்கி நிற்கிறது. அதேபோல் இவருடைய வளைக்கரத்தைப் படிக்கும்போது கோவா நாட்டின் மண்ணில் நாம் நிற்பதுபோல் உணரமுடிகிறது. தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது கரிப்பு மணிகள் என்ற புதினமாகும்.

# 2.3 கதைக்கருக்கள்

தன் மனத்தைக் கதை பொதி கருவூலமாக எவர் ஒருவர் ஆக்கிக் கொள்கிறாரோ அவரே எழுத்தாண்மை கொண்டவராகத் திகழ்கிறார். நாவலாசிரியர் தனக்குக் கிடைத்த கருவை விளக்கிக் காட்டவே கதைப்பின்னல், பாத்திரங்கள், பின்னணி என்று பலவற்றைக் கண்டு அமைத்துக் கொள்கிறார்.

இராஜம் கிருஷ்ணனின் எழுத்துகளில் கையாண்டுள்ள நுவல் பொருள்கள் பலவற்றுள்ளும் முதன்மையானது சமகால மகளிரின் வாழ்க்கைச் சிக்கல்களே எனலாம். அகில உலகப் பெண்கள் ஆண்டான 1975-ற்குப் பிறகு இவரது நாவல்களில் மகளிரின் வாழ்க்கைச் சிக்கல்கள் பெண்ணுரிமை என்னும் கருத்துப் படிவம் மிகத் தீவிரமாகவும், உணர்ச்சி முனைப்போடும் வெளிப்படுகிறது. உண்மைகளைக் கண்டும், உணர்வுகளைக் கொண்டும் எழுதிய இவர் இன்றைய பொருளியல், சமூகவியல், கலையியல், அறிவியல், வாழ்க்கை நிலை என்ன என்று கண்டு சீரான வாழ்வுக்கு உரிய வேர் எது என்று சுட்டிக்காட்டுகிறார்.

இராஜம் கிருஷ்ணன் நிகழ்காலப் பிரச்சினைகளைக் கதைக் கருவாகக் கொண்டு நாவல் படைக்கும் சமூக அக்கறை கொண்ட சிறந்த நாவலாசிரியர்.

## 2.3.1 வர்க்கப் போராட்டமும் பாலியலும்

சேற்றில் மனிதர்கள் என்ற புதினத்தில் உழவர் வாழ்வின் உழைப்பும், அவர்களின் நிலையும் எடுத்துக் காட்டப்படுகிறது. சாதீய வர்க்கப் பாகுபாட்டின் மூலம் மேல்வர்க்கம், அடித்தள வர்க்கத்தை அமுக்கி அடக்குவதும் சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்நாவலில் இடம் பெறும் காந்திமதி, அந்த வாழ்வின் முறைகளோடு ஒத்துப் போகாது எதிர்த்து நிற்கிறார்.

கரிப்பு மணிகள் புதினத்திலும் இதே வர்க்கப் போராட்டம் பின்வருமாறு சித்திரிக்கப்படுகிறது.

“பாத்திக்காட்டுல இளவயிசா ஒரு புள்ள வந்திட்டா அந்தக் காலத்துல யாரும் என்னேனும் செய்யலான்னு இருந்தது” என்று செங்கமலத்தாச்சி கூறுவதிலிருந்து உப்பளப் பெண் தொழிலாளர்களின் அவலநிலையை அறிய முடிகிறது. கூலி வேலை பார்க்கும் பெண்கள் மீது கங்காணிகளும், கான்ட்ராக்டர்களும் செய்யும் கூலிக்குறைப்பு, அடாவடித்தனங்கள் பெண்களைப் போகப் பொருளாக எண்ணி அவர்களைச் சீண்டும் இழிசெயல்கள் நிகழ்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு காண இராமசாமியின் துணையுடன் சங்கத்தில் சேர முடிவெடுக்கும் செங்கமலத்தாச்சி படைப்பு மிகவும் சிறப்பிற்குரியது. தொழிற்சங்கப் போராட்டம் என்பது, ஆண்களோடு பெண்களும்

பங்கெடுக்கும்போது தான் முழுமையாக வெற்றியடையும் என்பதும் இந்நாவலில் சுட்டப்படுகிறது. இராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்களின் மீதான ஒடுக்கு முறைகளையும், பாலியல் வன்முறைகளையும், பெண்களே உணர்ந்து அதிலிருந்து மீள்தல் தனிச்சிறப்பிற்குரியது.

**2.3.2** பால்வேறுபாடும் பெண்சிசுக் கொலையும்

வரலாற்றில் ஆண் உயர் மதிப்பும், வரவேற்பும் பெற்றிருப்பது போல, பெண் மதிப்பும் உயர்வும் பெற்றிருக்கும் வாய்ப்பு குறைவாகவே இருந்து வருகிறது. வறுமைக்கோட்டில் வாழும் பெண்களின் வாழ்க்கையில் பெரும் சிக்கல்கள் ஏற்படுவதால் அவற்றை எதிர்கொள்ள இயலாத சூழலில் பெண் குழந்தைகள் பலி கொள்ளப்படுகிறார்கள். பால்வேறுபாடு காட்டி பெண்ணினம் அழிக்கப்படுகிறது.

ஆண்களோடு பெண்களும் என்ற நாவலில் இடம்பெறும் சாரு பின்வருமாறு பேசுகிறாள்.

> "பெத்த தாய்மாருங்க பெண் குழந்தைங்கன்னா
> கண்ணைத் திறக்காம, எருக்கம்பால ஊத்தியோ
> நெல்லுமணியப் போட்டோ கொலை பண்ணுறாங்க
> என்னங்க கேவலம்? இதைத் தடுத்து வேரோட களைஞ்சு
> போடலன்னா, நாம் இந்த நூற்றாண்டில் இருக்கிறதாச்
> சொல்லிக்கறதில் அர்த்தமே இல்ல"

என்று பெண்சிசுக் கொலையை எதிர்த்துக் குரல் கொடுக்கும் இராஜம் கிருஷ்ணன், இதே பிரச்சினையை மண்ணகத்துப் பூந்துளிகள் என்ற நாவலிலும் விரிவாகப் பேசுகிறார். தாய்ப்பாலுண்டு தவழ்ந்து வளர வேண்டிய பெண் சிசுக்களை, எருக்கம்பாலிட்டு, குழியில் போடும் அவலம் சமுதாயத்தில் நடப்பதை மண்ணகத்துப் பூந்துளிகள் என்ற புதினம் சித்திரிக்கிறது. பெண் குழந்தை சுமையாக, விரும்பத்தகாததாக, செலவாக, கவலையுடையதாக, எதிர் காலத்தில் அப்பெண்ணைத் திருமணம் செய்து வைப்பது வரை பாதுகாக்கக் கூடியதாக, மிகுந்த பொறுப்புகளுடன் வளர்க்க வேண்டிய நிலை இருப்பதால் பால்வேறுபாடு காட்டி, பெண் பிறவி தவிர்க்கப்படுகிறது என்ற சமூக உண்மையையும் மறைமுகமாக ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

# 2.4 சமூகச் சீர்திருத்தக் கருத்துகள்

இராஜம் கிருஷ்ணனின் பார்வை, சமூகவியல் பார்வை என்றும் அவரைப் பொறுத்தவரை நாவல் என்பது சமுதாய மாற்றத்தை உருவாக்கும் சாதனம் என்பதும், நம்பிக்கை ஒளியை ஊட்டிப் படிப்போரைச் செயலாக்கத்தில் செலுத்துவதே அவர் தம் நோக்கம் என்பதும் வெளிப்படை வாழ்வின் போக்குகளையும், சமூகச் சார்புகளையும் கணித்து நிகழ்காலப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்பதும் ஆக்கப்பூர்வமான முடிவுகளை ஆராய்வதுமே தனது இலக்கிய நோக்கமென்றும் இராஜம் கிருஷ்ணனே குறிப்பிட்டுள்ளார். மனிதாபிமானத்தை எழுத்தில் வடித்து நடப்பியலை நாவலாகத் தரும் சமுதாய நாவலாசிரியர் இராஜம் கிருஷ்ணன்.

## 2.4.1 சிறுவர் சிறுமியர் மீதான வன்முறை



கூட்டுக் குஞ்சுகள் புதினத்தில் குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிலில் முடக்கித் தீக்குச்சிகளை அந்தப் பெட்டியில் அடைப்பதைப் போன்று குழந்தைகளை அடைப்பதை விஜி எதிர்க்கிறாள். காலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை குழந்தைகளை வேலை வாங்கும் முதலாளித்துவ சமுதாயத்தில், அவர்களுக்குத் தகுந்த ஊதியமும், அடிப்படைச் சலுகைகளும் தரப்படாத நிலையில் உடலும், மனமும் நொறுங்கும் அவலம் குழந்தைகளின் மீதான வன்முறையாக கருத வைக்கிறது.

“குழந்தைகளுக்கு எதிர்காலமில்லாமல் செய்யக் கூடிய தொழிலும், உற்பத்திப் பெருக்கமும் உண்மையில் மகத்தான தேசிய நஷ்டம் என்று கருதுகிறேன்” என்று விஜி, குழந்தை தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டப்படுவதைத் தட்டிக் கேட்கிறாள். கல்வி கற்று ஓடியாடி விளையாட வேண்டிய இளஞ்சிறார்கள், வறுமையின் கொடுமையால் கூலித்தொழிலாளர்களாவது கண்டிக்கப்படுகிறது.

## 2.4.2 பெண்களின் அடிமைநிலை



தமிழ் நாட்டுப் பெண்ணினம் விலங்கு பூட்டப்பட்டிருக்கும் அவல நிலையை இராஜம் கிருஷ்ணன் சுட்டுகிறார். இன்றைய சமூக அமைப்பில் பெண்களுக்கு வீடும் விலங்கு, வெளியுலகமும் விலங்கு என்று கூறுகிறார்.

"பெண் மெல்லியள்; வீடே அவளுக்குரிய பாதுகாப்பான இடம் என்ற காப்பை; கண்ணுக்குத் தெரியாத விலங்கைப் பூட்டி விடுகிறார்கள். அந்த விலங்கை உடைத் தெறியத் துணிவின்றி வெளியே செல்லும் போது அதன் சுமையில் அஞ்சிச் சாகிறாள். அவள், அதை உடைத்துக் கொண்டு வெளியே, வண்ண வண்ணப் படை திரண்டாற்போல் வருபவர்களோ பல மாயக்கவர்ச்சிக்கு அடிமையாகிறார்கள். புரட்சிகரமாக இருக்க வேண்டிய அம்சங்களில் மாற மறுத்துக் காலத்துக்கும் நடைமுறைக்கும் ஒவ்வாத பழைய கருத்துகளுக்கு மதிப்பு கொடுக்கும் குடும்பம் எதுவாயினும் அது விலங்காகவே அமையும்." இவ்வாறு விலங்குகள் என்ற நாவலில் பெண்களின் அடிமை நிலையைக் குறிப்பிட்டுள்ளார்.

### **2.4.3** சமுதாய மேம்பாடு

"குடும்பத்தை நல்லபடியாகக் கொண்டு வந்தாலே சமுதாயம் சிறப்படையும்" என்று வேருக்கு நீர் நாவலில் குறிப்பிட்டிருப்பதிலிருந்து இவரின் சமுதாயப் பற்று வெளிப்படுகிறது.

விடுதலை இந்தியாவில் பல்வேறு கட்சிகள் இயக்கங்கள் விளைத்த அரசியல் குழப்பங்களைக் காட்டி, "அன்பும் தியாகமுமே நாட்டு வாழ்வாம் மரத்தின் வேருக்கு நீர் என்றும், ஜனநாயகம் சிறக்க தனிமனிதன் செம்மை நெறியில் ஒழுகுதல் வேண்டும் என்றும்" வேருக்கு நீர் நாவலில் குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தையும், மாற்றத்தையும் முள்ளும் மலர்ந்தது நாவலிலும் காணலாம்.

## 2.5 கதைமாந்தர்

நாவலில் காண்பதெல்லாம் கதை மாந்தர் தொடர்புடைய நிகழ்ச்சிகளேயாகும். எனவே கதை மாந்தரை, தலைமை மாந்தர், துணை மாந்தர் என்று இருவகையாகப் பிரிக்கலாம். இப்பகுதியில் இராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் சிறந்து விளங்கும் பெண் பாத்திரங்கள் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன.

### 2.5.1 பெண் பாத்திரங்கள்

இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் வரும் பெண் பாத்திரங்கள் கூட்டுக் குடும்பம் என்னும் கூட்டுக்குள் உரிமை இழந்து தனிமையின் கொடுமையைத் தீவிரமாக உணர்கின்றனர். இக்காலப் பெண்களுக்கு எதிலுமே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை மறுக்கப்படுகிறது. குறிப்பாகத் திருமணத்தில் வாழ்க்கைத் துணைவரைத் தெரிவு செய்யும் உரிமை தரப்படுவதில்லை. இந்த நிலையில் சூழ்நிலைகளுக்குக் கட்டுப்பட்டு யாரோ ஒருவனை மணக்க வேண்டியுள்ளது. ஓசைகள் அடங்கிய பிறகு நாவலில், மீனா, லோகனை விரும்பினாலும் சாரங்கனையே கணவனாக ஏற்றுக் கொள்கிறாள். ருக்கு (மானுடத்தின் மகரந்தம் என்ற நாவலில்) தன் தாயின் வற்புறுத்தலுக்காகவே கோவர்த்தனுக்கு இரண்டாம் தாரமாகச் சம்மதிக்கிறாள்.

ஓசைகள் அடங்கிய பிறகு என்னும் நாவலில் வரும் மீனா, ஒரு பெண்ணுக்குப் பொருளாதார சுதந்திரம் அவசியமென்றும் அந்த அடிப்படையில் மேலும் உழைத்துப் பொருள் ஈட்டத் தாய்மைப்பேறு அடைவது தடையாக இருக்குமென்றும் உணர்ந்த பிறகு, மீனா சிலகாலம் தாய்மைப் பேற்றைத் தள்ளிப்போட எண்ணுகிறாள். ஆனால், தலைமை மாந்தரான மீனாவின் கணவன் சாரங்கனோ ஆண் ஆதிக்க உணர்வோடு அவளை நடத்துகிறான்.

“ஒரு பெண்ணுக்கு ஒரு குழந்தையைப் பெத்துக்கிறதுக்கும் பெறாமல் தள்ளிப் போடறதுக்கும் உரிமை இல்லையா?” என்று மீனா குமுறுகிறாள். அடிப்படைச் சுதந்திரம் பறிக்கப்படுமாயின், அந்த இல்லறம் தனக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு வருகிறாள். தன்னை அடக்கி ஒடுக்கிய ஆண் ஆதிக்கத்தின் கர்வத்தை அழிக்க அவளுள் இருந்த புதிய பெண்மை வெளிக்கிளம்புகிறது.

இராஜம் கிருஷ்ணனின் தலைமை மாந்தரைப் போலவே துணை மாந்தரும் சிந்தனைத் தெளிவுடையவர்களாக உள்ளனர். வீடு என்ற புதினத்தின் கதைத்தலைவி தேவிக்கு, துணைமாந்தர் ரஞ்சனி துணைபுரிகிறாள். ரஞ்சனியின் தெளிந்த சிந்தனையால், தேவி தன் கணவனின் ஆதிக்கப் பிடியிலிருந்து விலகி வெளிவரும் துணிவைப் பெறுகிறாள். தன்னைக் காத்துக் கொள்ளத் தையல் பணி செய்து குடும்ப நிலையை முன்னேற்றுகிறாள். காலமெல்லாம் ஆணின் பொருளாதாரச் சார்பாக வாழும் பெண்

அதை மீறி வெளிவரப் பொருளாதாரம் காரணமாகிறது. ஒரு பெண் பிறரைச் சார்ந்து வாழாமல், தன் காலில் தற்சார்புடன் வாழ்வதற்கு, தொழில் செய்து உழைத்து வாழ வழிகாட்டப்படுகிறது. அறிவுக் கூர்மையுடைய துணை மாந்தர் தலைமை மாந்தருக்கு உறுதுணையாக இருக்கிறாள். இவ்வாறு இராஜம் கிருஷ்ணனின் அனைத்து நாவல்களிலும் இடம்பெறும் தலைமை மாந்தரும், துணைமாந்தரும் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றிலிருந்து வெளிவர முயற்சி செய்கின்றனர்.

## 2.6 நாவல்களில் கையாளும் உத்திகள்

இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் கையாளும் நடை, வருணனை, சொல்லாட்சி, உவமை ஆகியவற்றில் ஒரு சில உதாரணங்களை இங்கு காணலாம்.

- எழுத்து நடை

இராஜம் கிருஷ்ணனின் நாவல் படைப்புத்திறனில் அவருடைய எழுத்துநடை முக்கியப் பங்கு வகிக்கிறது. அவருடைய நடை உயிரோட்டமான நடை. வாசகரைக் கவரும் வகையில் சிறப்பாக எடுத்துரைக்கும் அவரின் போக்கு மனித மனத்தைக் கவரவல்லது. அவரின் பிறமொழிச் சொற்களின் கலப்பின்றி எழுதும் தமிழ்நடை, வாசகரின் நெஞ்சையும் நினைவையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் வாய்ந்ததாக உள்ளது. மண்ணின் மணமே நாவலின் பின்னணியாக நின்று படிப்போரை ஈர்க்கிறது.

- வர்ணனை

நாவலின் வர்ணனை, படிப்பவரை வியக்கவைக்கும் தன்மையுடையதாகவும், நிகழ்ச்சியைப் படம் பிடிப்பதாகவும் இருக்க வேண்டும்.

“பதினாறாம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர் கோவாவைக் கைப்பற்றிக் கொண்ட புதிதில் காப்பாக எழுப்பிக் கொண்ட கோட்டை அது... மாண்டலின் முகத்துவாரத்தில் வந்து நிற்கும் கப்பல் பிரயாணிகளின் தொற்று நோய்த் தங்கு மனையாக வெகுநாட்களுக்கு அக்கோட்டை பயன்பட்டு வந்தது. பிறகு பாழடைந்த கோட்டையாக, தொற்று நோய்க் கிருமிகளின் உறைவிடங்களாக விளங்கிய அந்தக் கட்டிடத்துக்கு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தாறாம் ஆண்டு யோகம் அடிக்கலாயிற்று. அந்த அறைகளில் ஆடு மாடுகளைப் போல மக்கள் வந்து நெருங்கினார்கள். ஆணை ஒலிக்கும் சிப்பாய்களின் அடியோசைகளும் துப்பாக்கிச் சரிசெய்யும் அரவங்களும் அடைபட்டுக் கிடக்கும் கைதிகளின் பலவேறு குரல்களும், கடலும், ஆறும் கைகோத்துப் பணியும் அந்தக் கோட்டைக்குள் கேட்கின்றன”

இவ்வாறு இராஜம் கிருஷ்ணன் வளைக்கரம் என்ற நாவலில் தகவல்களைத் தரும் முறை வியக்கத்தக்கது. மேற்கண்ட பின்னணி வர்ணனை நீல்மோகோஸ் கோட்டையின் பழைய வரலாற்றை எடுத்துச் சொல்வது மட்டுமின்றி அக்கோட்டை வாசலில் பல்வேறு அரவங்களைக் காதால் கேட்டபடி நாமே நின்று கொண்டிருப்பது போன்ற உணர்வையும் எழுப்புகிறது.

- சொல்லாட்சி

இராஜம் கிருஷ்ணன் தம் புதினங்களில் கையாளும் சொல்லாட்சிகள் சிறப்புடையன. எடுத்துக்காட்டாக,

"கீழ்மலை மாதலிங்கேசுவரர் கோயிலில் அழல் மிதிக்கும் திருவிழா நிறைவேறி பூமி திருப்பி புதுவிதை விதைக்கும் விழா நடைபெற்று பயிரும் வளர்வதாயிற்று. காய்ச்சலில் கிடந்து புது இரத்தம் ஊறிய உடல்போல் வறண்ட மரங்களில் எல்லாம் புதுத்தளிர்கள் தோன்றின" என்று குறிஞ்சித்தேன் நாவலில் வாழ்க்கையின் வேகத்தைச் சுட்டிக் காட்டப் பயன்படும் தொகுப்புரையில், இனிமையான எளிமையான சொல்லாட்சி கொண்ட தமிழ்நடையைக் காண முடிகிறது. இத்தகைய சொல்லாட்சி இராஜம் கிருஷ்ணனின் நாவல்களில் அமைந்துள்ளது.

- உவமை

இராஜம் கிருஷ்ணன் கையாண்டுள்ள உவமைக்கு ஒரு எடுத்துக்காட்டு "வெளிச்சம் பாய் விரித்தாற் போல சாலையில் படிகிறது" என்று வேருக்குநீர் நாவலில் புதிய உவமையைக் கையாண்டுள்ளார். சுற்றுச் சூழலை உவமை மூலம் விளக்கும் முறை சிறப்புடையதாக உள்ளது.

## 2.7 தொகுப்புரை

"நாவல் இன்றைய நெருக்கடி மிகுந்த சமூகச் சூழ்நிலையில் மக்களின் சிந்தனையை ஆரோக்கியமான நிலையில் ஆக்கப் பூர்வமான செயற்பாடுகளில் நம்பிக்கை கொள்ளச் செய்யும் ஓர் இனிய சாதனமாக அமைய வேண்டும்" என்ற கொள்கை கொண்ட இராஜம் கிருஷ்ணன் பெண்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தம் நாவல்களில் பேசுகின்றார். மேலும், சமுதாயத்தின் இயக்கவியலை நுணுக்கமாகக் கண்டறிந்து அந்த நோக்கில் பெண்களின் படிநிலையையும், சமுதாயத்தில் அவர் தம் வாழ்க்கைப் பாங்கினையும் தெளிவுபடுத்தியதோடு சுதந்திரமும், சமத்துவமும், சமூகநீதியும் பெண் இனத்திற்குக் கிட்ட வேண்டும் என்றும் அவர் கருதுகிறார்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## பாடம் - 3

# P10143 சிவகாமியின் புதினங்கள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ் நாவல் ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர் சிவகாமி. இந்தப் பாடம் சிவகாமியை அறிமுகம் செய்து அவர் எழுதிய புதினங்கள் வழி வெளிப்படும் அவருடைய சமுதாயப் பார்வை, பாத்திரப்படைப்பு ஆகியவற்றை விளக்குகிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படிப்பதால் பின்வரும் பயன்களைப் பெறலாம்.

- சிவகாமியின் புதினங்கள் மூலம் சமூகத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளையும் தெரிந்து கொள்ளலாம்.
- குடும்பம், வாழ்க்கை, சமுதாயம் பற்றிய மதிப்பீட்டை அறியலாம்.
- சிவகாமியின் நடையில் காணப்படும் எளிமை, வர்ணனை, வட்டார வழக்கு ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

3.0 பாட முன்னுரை

3.1 சிவகாமி

3.2 ஆனந்தாயி – புதினம்

3.3 கதைமாந்தர்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

3.4 குடும்பமும் பெண்களும்

3.5 நாவலில் கையாளும் உத்திகள்

3.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 3.0 பாட முன்னுரை

மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கிய வகைகளில் புதினமும் ஒன்று. தமிழ்ப் புதின எழுத்தாளர்களுள் வளர்ந்து வரும் பெண் எழுத்தாளர் சிவகாமி. இவருடைய ஆனந்தாயி என்ற நாவல் எந்த வகையைச் சார்ந்தது என்பது பற்றியும் அந்த நாவலில் கையாளும் உத்திகள் ஆகியவை பற்றியும் இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

# 3.1 சிவகாமி



அரசுப்பணியில் உயர் அதிகாரியாகப் பணியாற்றும் சிவகாமி, சிறந்த சமூக நாவல்களையும் படைத்து பெண் எழுத்தாளராகவும் விளங்குகிறார். பிறந்த ஆண்டு 1957, சொந்த ஊர் திருச்சிக்கு அருகிலுள்ள பெரம்பலூர். தந்தை பழனிமுத்து, தாய் தாண்டாயி. விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர், சிறுவயதிலேயே எழுத்துத் துறையிலும் தம் காலடியினைப் பதித்தவர். சிறுவயதிலிருந்து தாய்மொழியான தமிழ்மொழியில் பேச்சாற்றலும், படைப்பாற்றலும் கொண்ட இவர் ஜப்பானிய மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். 1980-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணியில் (ஐ.ஏ.எஸ்) தேர்ச்சி பெற்று அது முதல் இருபத்தைந்து ஆண்டுகளாக வெவ்வேறு அரசுத்துறைகளில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

## 3.1.1 சிவகாமியின் படைப்புகள்

இவர் நித்யா என்ற புனைபெயரில் இப்படிக்கு உங்கள் யதார்த்தமுள்ள என்ற முதல் சிறுகதைத் தொகுப்பை 1986-இல் வெளியிட்டார். இவர் எழுதிய முதல் நாவலான பழையன கழிதலும் 1988-இல் வெளியிட்டார். அதன்பின்னர் ஆனந்தாயி (1992), குறுக்குவெட்டு (1999) ஆகியவை வெளிவந்தன. கடைசிமாந்தர் என்ற இரண்டாவது சிறுகதைத் தொகுதி 1997இலும், கதைகள் என்ற மூன்றாவது சிறுகதைத் தொகுதி 2003இலும் வெளிவந்தன. ஆனந்தவிகடன் பவழவிழா மலரில் ரஹமத்துன்னிஸா என்ற சிறுகதையை எழுதியுள்ளார்.

1995-இல் இவர் இயக்கிய ஊடாக என்ற குறும்படத்திற்குக் குடியரசுத் தலைவர் பரிசு கிடைத்தது. இவர் புதிய கோடங்கி என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். அதில் உடல்மொழி என்ற தலைப்பிலும், மெல்லிய துளையிட்ட காகிதத்தின் வழி என்ற தலைப்பிலும் இரு தொடர்களையும் எழுதி வருகிறார். சிவகாமி, சிறுகதை, நாவல், கட்டுரைத் தொடர் என்று பல்வேறு இலக்கியத் தளங்களிலும் தடம்

பதித்து வருகிறார். இளைஞர்களுக்கான விழிப்புணர்வு முகாமும் இவர் நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகாமி தலித் அடையாளம் பற்றிப் பேசியும் எழுதியும் வருகிறார். கிராம மக்களின் வாழ்க்கைக் கூறுகளை மனிதாபிமானத்தோடு ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் ஒரு விசாலமான பார்வை கொண்ட சிவகாமி இதுவரை மூன்று நாவல்களையும், மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார்.

## 3.2 ஆனந்தாயி - புதினம்




சமூக நாவலான ஆனந்தாயி எதார்த்தவாதமாக ஏழை மக்களின் பிரச்சினைகளையும், ஒரு குடும்பத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் நடப்பியல் நெறியில் சித்திரிக்கிறது. இந்த நாவல், நகரமாக வளர முற்படும் போது மாறுதலுக்கு உள்ளாகும் ஒரு தமிழகக் கிராமத்தின் நிலையையும் அங்கு வாழும் விவசாய உழைப்பாளியின் குடும்ப நிலையையும் நுட்பமாக விளக்குகிறது.

நாவலாசிரியர் தனக்குக் கிடைத்த கருவை விளக்கிக் காட்டவே கதைப்பின்னல், பாத்திரங்கள் பின்னணி என்று பலவற்றை அமைத்துக் கொள்கிறார். அந்த வகையில் ஒரு கிராமம், நாகரிகம் வளர வளர தனது பாரம்பரியத்தை எவ்வாறெல்லாம் மாற்றிக் கொள்கிறது என்பதை ஆசிரியர் தனது நடையில் இயல்பாகச் சித்திரித்துள்ளார். மேலும் கிராமப்புறத்துப் பெண்களுக்கு மூன்று தலைமுறையில் ஏற்படும் வாழ்வியல் சிக்கல்கள் இந்த நாவலில் இடம்பெறுகின்றன. ஒரு நடுத்தரக் குடும்பத்து வாழ்வில் நிகழும் இன்ப துன்பங்களைக் கட்டமைத்துச் செல்லும் புதினமாக ஆனந்தாயி விளங்குகிறது.

- கதை மாந்தர்கள்

ஆனந்தாயி, பெரியண்ணன், வெள்ளச்சியம்மாள், கலா, மணி, பாலன், அருள், அன்பு, லட்சுமி, வடக்கத்தியான், வடக்கத்தியான் மனைவி, பூங்காவனம், கங்காணி, கங்காணியம்மாள், நீலவேணி, பூங்காவனம், அய்யா கண்ணு, தேவமணியம்மாள், டானியல் போன்றவர்கள் ஆனந்தாயி நாவலின் கதைமாந்தர்கள்.

ஆனந்தாயி நாவலில், பெரியண்ணன் ஆனந்தாயி குடும்பத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

**3.2.1** கதைச்சுருக்கம்

கதைத்தலைவியான ஆனந்தாயி சிறுமியாக இருந்த பொழுதே பெரியண்ணன் என்ற ஆணாதிக்கம் கொண்டவனின் மனைவியாகிறார். தாயை இழந்த ஆனந்தாயி மீது அவள் மாமியார் வெள்ளச்சியம்மாள் அன்புடையவளாக இருந்து, அவளை நெறிப்படுத்தி சிறந்த குடும்பத்தலைவி ஆக்குகிறாள். ஆனந்தாயி தன் குடும்பத்திற்காக மிகுந்த துன்பங்களை ஏற்கிறாள். குடும்பத்தலைவனான பெரியண்ணன் ஒரு தன்னலவாதி. மனைவியைக் கொடுமைப்படுத்துவது மட்டுமின்றி வேறொரு பெண்ணையும், மனங்காட்டிலிருந்த தன் சொந்த மாடிவீட்டிற்கு அழைத்து வந்து வைத்துக்கொள்கிறான். பிறகு சில நாட்களில் அவளையும் அடித்து துன்புறுத்துகிறான். மொத்தத்தில் ஒரு ஒழுக்கம் கெட்டவன்.

- ஆனந்தாயியின் துன்பம்

தனக்கு எல்லாமே குடும்பம்தான், மக்கள்தான். 'அவர்கள் நலன்தான் நம் நலன் என்று நினைத்துப் பல இன்னல்களைத் தாங்கிக்கொண்டு வாழ்பவள்' ஆனந்தாயி. எனினும் அவள் பெண்கள் பிறப்பு தாழ்வானது என நினைக்கும் அளவிற்கு கொடுமைக்கு ஆளாகிறாள்.

- கிராம மக்கள் வேலையும் வாழ்வும்

பெரியண்ணனின் மச்சு வீட்டிற்குச் சற்று தூரத்தில் புறம்போக்கு நிலத்தில் முத்துலிங்கம், வடக்கத்தியான், சுடலை, மகாலிங்கம் போன்றவர்களும் அவர்களது உறவினர்களும் குடிசை கட்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் பெரியண்ணனிடம் வேலை செய்தனர். அக்கிராமத்தில் கூலியாட்களுக்குப் பஞ்சமில்லை. கூப்பிட்ட நேரத்திற்கு வர ஆட்கள் இருந்தனர். ஆண்கள் மண்வேலை, எரு அடித்தல் உழவு வேலை என்று பல வேலைகளையும் செய்தனர். இவர்களில் வடக்கத்தியான் குடும்பத்தினர் மட்டும் பெரியண்ணன் குடும்பத்தில் ஒருவராகவே வாழ்ந்தனர். வடக்கத்தியான் மகளான பூங்காவனம் வீட்டு வேலை செய்யப்போன இடத்தில் துரை என்பவனுடன் ஏற்பட்ட பழக்கம் திருமணமாகாமலே குழந்தையைப் பெற்றெடுக்கும் நிலைக்கு கொண்டு போய் விடுகிறது. ஊரைவிட்டு துரை ஓடிய பிறகு பல்வேறு துன்பங்களை அவள் அனுபவிக்கிறாள். ஓடிய துரை திரும்பி வந்து சேர்ந்து வாழ அழைக்கிறான். அவள் மறுத்து விடுகிறாள். வாழ்க்கையில் திருமணம் செய்து கொள்ளாமல் குழந்தையை வயிற்றில் சுமந்து சமுதாயத்தை எதிர்த்து வாழ்கிறாள்.

- தனிச் சலுகை

போதிய வருமானம் வந்தபோதிலும் குடும்பத் தலைவன் என்பதால் பெரியண்ணனுக்கு மட்டும் நெல்லரிசிச் சோறும், மற்றவர்களுக்கு தங்கள் நிலத்தில்

விளைந்த வரகுச்சோறும், கேழ்வரகு களியும் கிடைக்கின்றன. தனக்குப் பேத்தி பிறந்ததும் பெரியண்ணன் மிக்க மகிழ்ச்சியோடு வெள்ளி அரைமூடியும், கடுக்கனும் செய்து போடுகிறான்.

- குடும்பம்

ஆனந்தாயியின் சிறிய மகள் அருள் இயற்கை அழகை ரசிப்பவள். அவள் தும்பியில் வாழை நார் கட்டி விளையாடுவதோடு, பூவரசு இலையில் பீப்பீ செய்து ஊதுவாள். மேலும், தீப்பெட்டியில் பொன் வண்டைப் பிடித்து வைத்தும் விளையாடுவாள். அருள் மட்டும் இலட்சுமியிடம் கதைகேட்பாள். இலட்சுமியும் அருள் மீது அன்புடன் இருந்தாள். ஆனால் விவரமறிந்த தனம், லட்சுமியைத் தீயவார்த்தைகளைக் கூறி நேரடியாகவே திட்டுகிறாள். ஒரு குடும்பத்தின் தலைவனான ஒருவனுடன் அவன் வீட்டிற்கே வந்தது தவறு என்று உணர்ந்த இலட்சுமி அவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்கிறாள்.

- கோஷ்டி சண்டையும் அழிவும்

இலட்சுமி பெரியண்ணனின் ஆதிக்கத்தைத் தாங்க முடியாமல் முதலில் லாரிக்காரன் ஒருவனுடன் ஓடிவிட அங்கிருந்து பெரியண்ணனே மீட்டு வருகிறான். மீண்டும் அவள் கங்காணி மகன் இராஜமாணிக்கத்துடன் ஓடிவிடுகிறாள். விவரமறிந்த பெரியண்ணன் கங்காணி குடும்பத்தை அழிக்க முற்படுகிறான். அதனால் கங்காணி குடும்பத்தைப் பழிவாங்கும் எண்ணத்தில் அவனுடைய காட்டில் விளைந்திருந்த பயிர்களை இரவோடு இரவாக அறுத்துக் கொண்டு வந்து தனது வீட்டில் வைத்து விற்பதற்குத் தயார் செய்து கொண்டிருந்தான். இதை ஆனந்தாயி கண்டித்தாள். பிறகு அவர்கள் அய்யாக்கண்ணுவையும், பெரியண்ணாவையும் தீர்த்துக்கட்ட நினைத்தனர். இதைக் கங்காணி வீட்டில் வேலை செய்யும் பூங்காவனத்தின் மூலம் இவர்கள் அறிந்து கொள்கின்றனர். பெரியண்ணன் கோஷ்டியினர், கத்தி கம்பி என்று எடுத்துக்கொண்டு அவர்களை அழிக்கச் செல்கின்றனர். இதில் அய்யாக்கண்ணு இறந்து போகிறான். பெரியண்ணன் வெட்டுப்படுகிறான். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவன் வெளியே அதிகம் நடமாடுவதில்லை.

- பொருளாதாரச் சரிவு

பெரியண்ணன் பொருளாதாரப் பற்றாக்குறையால் நிலத்தை வீட்டுமனைகளாக்கி விற்றான். விற்ற பணத்தில் ஏஜென்சி ஒன்று எடுத்து குடும்பத்தை நடத்திக் கொண்டிருந்தான். ஏஜென்சி மூலம் வரும் பணம் குடும்பம் நடத்த பற்றாக்குறையாக இருந்த காரணத்தால் குடியிருக்கும் வீட்டையே அடகு வைத்துச் செலவு செய்கிறான். மனைவிக்குக் குடும்பச் செலவிற்குப் பணம் கொடுக்காமல் இலட்சுமிக்கு நகை செய்து போட்டு அழகு பார்க்கிறான். இத்தகைய பொறுப்பற்ற

தன்மையால் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது. பேரன் பேத்தி பிறந்த பிறகும்கூட அவனுடைய ஆதிக்கம் குறையவில்லை. மனைவியை அடிமையாக எண்ணும் குணமும் சிறிதுகூட மாறவில்லை. இதுதான் கதை.

## 3.3 கதைமாந்தர்

நாவலில் இடம்பெறும் கதை மாந்தரைத் தலைமை மாந்தர், துணைமாந்தர் என்று இருவகைகளாகப் பிரிக்கலாம். இப்பகுதியில் நாவலில் இடம்பெறும் தலைமை மாந்தர்கள் குறித்து விளக்கப்படுகிறது.

- தலைமை மாந்தர்

ஆனந்தாயியும், பெரியண்ணனும் இந்நாவலின் தலைமை மாந்தர் ஆவார்.

### 3.3.1 ஆனந்தாயி

ஆனந்தாயி, இயல்பிலேயே நல்லகுணம் படைத்தவளாகவே இருக்கிறாள். இயல்பான கிராமத்துப் பெண்ணாகவே வாழ்கிறாள். ஆனால் மிகவும் இளம்வயதிலே பெரியண்ணனுக்கு மனைவியாகிறாள். ஆறு குழந்தைகளை ஈன்றெடுக்கிறாள் ஆனாந்தாயி. கணவன் பொதுமகளை (பணத்திற்காக இன்பத்தைத் தரும் பெண்) வீட்டிலேயே கொண்டுவந்து வைக்கும் போதும் சரி அந்தப் பெண்ணிற்கு எதிரில் தன்னை அடிக்கும் போதும் சரி சிலநேரங்களில் ஆவேசப்பட்டாலும் பல நேரங்களில் அமைதி காக்கிறாள். ஆனந்தாயி எதைச் செய்தாலும் அதைக் குறை கூறிக் கொண்டிருப்பதே அவள் மாமியாரான வெள்ளச்சியம்மாளின் வழக்கம் ஆகும். ஆனந்தாயி அதற்கும் பொறுமை காப்பாள். பிள்ளைகள் தவறு செய்து அது பெரியண்ணனுக்குத் தெரியவந்தால் அதற்கான அடி, உதை முதலியவற்றை அவள் தான் வாங்கிக் கொள்ளவேண்டும். சகிப்புத் தன்மை அதிகம் கொண்ட ஆனந்தாயி இலட்சுமி என்பவளைப் பெரியண்ணன் தன் வீட்டிற்கு அழைத்து வந்து வைத்தபோது அவள், இவளை அக்கா என்று அழைக்கிறாள். அதற்கு ஆனந்தாயி,

“யாரடி யக்கா, அக்கா குக்கா என்று
கூப்பிட்டால் செருப்பு பிஞ்சிடும்”

என்று முதலில் சொன்னவள், பின்னர் சிறிது காலத்தில் நட்புடன் பழகினாள். தன் குடும்பத்தில் அவளைச் சேர்த்துக் கொண்டாள். வந்தவள் பெரியண்ணனிடம் அடிவாங்கும் போது அவளுக்காக இரக்கப்படுபவளாக இருக்கிறாள். பிள்ளைகளை வளர்த்து பெரியவர்கள் ஆக்கியதும் தன் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணாமல் அவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தாள். ஏனென்றால், ஒரு மகனை இழந்த சோகம் அவளுடைய மனதில் இன்னும் நிலைத்திருந்தது. பெரியண்ணன் பகைமை காரணமாக அடுத்தவர் காட்டில் விளைந்த கம்பை எடுத்துக் கொண்டு வந்து தனது வீட்டில் வைத்திருப்பதை அறிந்து அதை ஆனந்தாயி எதிர்த்தாள். பிறகு பெரியண்ணன் குழுவினர் வீண்சண்டைக்குச் செல்லும் போது அவர்களைத் தடுப்பதில்

கவனமாக இருந்தாள். ஆனந்தாயி மேலும் தன் பிள்ளைகள் அனைவருக்கும் திருமணம் முடித்துவிட்டு தன் பேரக்குழந்தைகளுடன் கொஞ்சும் போதும் சரி அவள் தன் இயல்பைச் சற்றும் மாற்றவில்லை. இப்படியாக ஆனந்தாயியின் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது. அவள் தீயவழியில் கணவன் சென்றாலும் பொறுமையோடும் கற்போடும் வாழும் பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். மணமான பெண்ணுக்கு அறிவுரைகூறி, ஏனைய மகளின் நிலைக்காக ஏங்கும் தாய்மை உணர்வை ஆனந்தாயி மூலம் காணலாம்.

### 3.3.2 பெரியண்ணன்

பெரியண்ணன் ஆனந்தாயியின் கணவனாக மட்டுமல்லாமல் ஆணாதிக்கத்தின் குறியீடாகவும் படைக்கப்பட்டுள்ளான். அவன் பெற்ற தாய்மீதும், மனைவி, பிள்ளைகள் மீதும் பாசமில்லாதவன். பெற்ற தாயைக் கோபத்தில் கீழே தள்ளி விடுகிறான். பிறகு நான் தள்ளி விடவில்லை என்று குலதெய்வம் பொன்னுசாமி மீது பொய் சத்தியம் செய்கிறான். அவன் போக்கை வீட்டிலுள்ள அனைவரும் வெறுத்தனர். காண்ட்ராக்ட் எடுக்கிறேன் என்று வெளியூரில் தங்கிக் கொண்டு பொதுமகளோடு கும்மாளம் அடிப்பதும், வீட்டிற்குப் பலநாட்கள் வராததுமாகவும் இருந்தான். ஒருநாள் இலட்சுமி என்னும் பெண்ணை வீட்டோடு அழைத்து வந்து வைத்துக் கொண்டான். அவள் மீதும் சந்தேகங் கொண்டு அவளையும் அடித்துத் துன்புறுத்திக் கொடுமைப்படுத்தினான். ஆசை நாயகியாக வரும் இலட்சுமி மீது பெரியண்ணன் அதிக அதிகாரம் செலுத்துகிறான். வேறு ஆண்களிடம் பேசக்கூடாது என்கிறான். அந்தச் சூழலில் இலட்சுமி, தன் வீட்டிற்குக் குடிக்கத் தண்ணீர் கேட்டு வந்தவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறாள். இதை அறிந்த பெரியண்ணன் அவளைத் திட்டி உதைக்கிறான். இதனால் இருவருக்குமிடையே முரண்பாடு தோன்றுகிறது. அவள் இந்த அடக்கு முறையை நேரடியாக எதிர்க்காமல் எதிர்வினை புரிவது போல் வேறு ஒருவனுடன் வீட்டை விட்டுச் சென்று விடுகிறாள். தனக்குக் கிடைக்க வேண்டிய காண்ட்ராக்ட் கிடைக்காமல் போயின; அதனால் வெறுப்புற்ற பெரியண்ணனுக்குப் பழிவாங்கும் உணர்வு ஏற்பட்டது. மேலும் இலட்சுமி, கங்காணியின் மகன் மாணிக்கத்துடன் ஓடியதை அறிந்து கங்காணியின் குடும்பத்தை அழிக்க முற்படுகிறான். அந்த கலவரத்தில் அய்யாக்கண்ணு இறந்து போகிறான்; பெரியண்ணனின் கை வெட்டப்படுகிறது. அந்த வயதான காலத்தில்கூட பிற பெண்ணுடைய தொடர்பினை விடஇயலாமல் அவன் வாழ்கிறான். பெரியண்ணன் ஆரம்பத்திலிருந்து அடக்கி ஆளும் தன்மையுடையவனாகவும், கொடூரமானவனாகவும் படைக்கப்பட்டுள்ளான்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.4 குடும்பமும் பெண்களும்

குடும்பம் என்னும் நிறுவனத்தின் நங்கூரமாகப் பெண்ணே கருதப்படுகிறாள். குடும்பத்தைச் சிந்தாமல் சிதறாமல் கட்டிக்காக்கும் பொறுப்பு பெண்ணுக்கு மட்டுமே உரியதாகி விட்டது. இந்த அடிப்படையில்தான் பெண் வளர்க்கப்படுகிறாள்; நெறிப்படுத்தப்படுகிறாள். பெண்களுக்குச் சமுதாயத்தில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் புதினங்களில் இடம்பெற்றுள்ளன.

### 3.4.1 கட்டுப்பாடும் பொறுப்பும் பெண்களும்

பெண்களுக்கெனச் சில கட்டுப்பாடுகளை ஆண்கள் விதிக்கின்றனர். இருப்பினும் பெண்கள் குடும்பப் பொறுப்புடன் செயல்படுகின்றனர்.

- கட்டுப்பாடு

பெண்களின் அன்றாடச் செயல்பாடுகளில் ஆண்கள் குறுக்கிடுகின்றனர்.

“ஒத்த சடை போடேன். ரெட்டை சடை கன்றாவியா இருக்கு; பூவை ஏன் தொங்கவிட்டு ஆட்டிக்கிட்டுப்போற அதான் நாலுபேரு உம்பின்னாடி சுத்துறான்”

என்று கலாவை, அண்ணன் மணி கண்டிக்கிறான். கலா பெருங்குரல் எடுத்து அழுகிறாள். இதிலிருந்து தம் வீட்டுப் பெண்கள் மீது ஆண்கள் மேற்கொள்ளும் அடக்குமுறை உணர்த்தப்படுகிறது.

- பொறுப்பு

பெண்களைக் கண்ணும் கருத்துமாகப் பேணிக்காத்து ஒருவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்னும் எண்ணமே சமூகத்தில் பொதுவாகத் திகழ்கிறது. இந்த எதிரொலியை இப்புதினத்திலும் காண முடிகிறது.

“பொட்டப் புள்ளங்கள வச்சிக்கறது வயித்துல நெருப்ப வச்சிருக்ற மாதிரி இருக்குது. வாயில, வவுத்துல வந்துட்டா என்ன பண்றது, எவங்கையிலாவது புடிச்சுக்குடுக்கற வரைக்கும் ஏது நிம்மதி”

என்று வயதுக்கு வந்த பெண்ணின் தாயான ஆனந்தாயி புலம்புகிறாள்.

### 3.4.2 திருமணமும் பெண்களும்

ஆனந்தாயி கல்வி அறிவு அற்றவள், உடல் உழைப்பு மிகுந்தவள். எனவே கணவனுடன் அடிக்கடி வாதிட்டு உதையும் வாங்கிக் கொள்பவள். கணவன் மனைவி

தனக்கு அடிமை என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருப்பவன். மனைவியை மதிக்காத பெரியண்ணன் வீட்டிற்கே ஒருத்தியை அழைத்து வந்து விடுகிறான். ஒன்றும் செய்யவியலாது மனம் குமுறியபடிதான் ஆனந்தாயி நடமாடுகிறாள்.

ஆனந்தாயி கணவன் செய்யும் கொடுமை ஆண் ஆதிக்க சமுதாயத்தில் இயல்பானது என ஏற்றுக் கொண்டே செயல்படுகிறாள். குடும்பம் தன்னால் கட்டிக் காக்கப்பட வேண்டிய ஒன்று என்னும் பொறுப்புணர்வு பெண்களுக்கே ஊட்டப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தவளாக ஆனந்தாயி பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

“அவனிடம் தனக்கு மிஞ்சியிருப்பது அவன்மீது ஆசையா அல்லது உரிமையா அல்லது தன் குழந்தைகளுக்கும் தனக்கும் பாதுகாப்பு என்ற உணர்வா?” என்று ஆனந்தாயி சிந்திக்கிறாள். ஆணாதிக்க மனப்பான்மை கொண்ட கணவனைப் பிரிந்தால் என்ன என்று நினைத்துப் பார்ப்பாள். பிள்ளைகள் என்னாவது என்று மருகி, பின் மனதைத் தேற்றிக் கொள்வாள். குழந்தைகளை நல்லமுறையில் வளர்க்க வேண்டிய கட்டாயத்தினால் இன்று சமுதாயத்தில் பல பெண்கள் கணவனின் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். குடும்பம் என்னும் நிறுவனத்தில் உரிய பங்கினைப் பெறாமலே பெண்கள் குடும்பத்துக்குள் இயங்கிக் கட்டுப்பட்டு வாழ்வதற்கே பழகிக் கொள்கின்றனர். குடும்ப நிறுவனத்தில் தனக்கு இரண்டாவது இடமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்னும் மனநிலை மேலோங்குகிறது. இத்தகைய செய்திகள் இந்நாவல் மூலம் வெளியிடப்படுகிறது.

### 3.4.3 உள்ளமும் பெண்களும்

ஒரு பெண்ணிற்குத் தாய் என்ற உறவு ஏற்பட்டவுடன் அவள் குழந்தைகளுக்கும் தந்தைக்கும் இடையே பாலமாக இருக்க வேண்டியவள் ஆகிறாள். இரு பக்கத்தாரும் உணர்ச்சி வயப்படும் போது இவளே அதிர்வு தாங்கியாகச் செயல்படுகிறாள். குழந்தைகள் தவறு செய்தால் தாய்க்குத்தான் இடிமொழி எல்லாம். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இணக்கம் ஏற்படுத்துபவளாக அன்னை விளங்குகிறாள்.

> “அரிசி திங்கிறான்..........ஏண்டா பொழுதினிக்கும் பட்டினியா ....... கெடந்த ..... புள்ள வளக்கறா பாரு புள்ள ......... என்று கூறிவிட்டு அவள் தலைமயிரைப் பிடித்து ஒரு குலுக்கு குலுக்குகிறான்.”

பெற்ற குழந்தைகளைக் கவனிக்காமல் வீட்டைவிட்டு வெளியில் கணவன் தங்கியதால்தான் தன் மகன் பாலனை இழக்க நேரிட்டது என்பதில் அவளுக்குக் கணவனைப் பற்றி நினைக்கவே கசந்தது. பிள்ளைகளுக்குத் தாய்மட்டுமே..... என்று மனதளவில் கணவனை ஒதுக்கி வைத்தாள். ஆனால் அவனைவிட்டு வீட்டைவிட்டு விலகி

வாழ முடியவில்லை. குழந்தைகளை வளர்ப்பதற்கும், குடும்பத்தை நடத்துவதற்கும் நல்ல நடத்தை இல்லாத கணவனையே சார்ந்து வாழவேண்டிய நிலைக்கு ஆனந்தாயி தள்ளப்பட்டிருப்பதைச் சிவகாமி பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறார். அவள் கணவனின் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு வாழ்வதற்கும் அவளது தாயுள்ளமே காரணம் என எடுத்துக்காட்டுகிறார் சிவகாமி.

### **3.4.4** கல்வியும் பெண்களும்

கல்வி பெண்களுக்குக் கண்களைப் போன்றது என்ற விழிப்புணர்வு பெண்களுக்குத் தேவைப்படுகிறது. ஆனந்தாயியின் மகள் கலா பூப்படைந்தவுடன் அவள் பள்ளிப்படிப்பு நிறுத்தப்படுகிறது. அவள் வீட்டிற்குள் அடைக்கப்படுகிறாள். தந்தையின் அதிகாரத்தால் இளம்வயதிலேயே அவளுக்கு விருப்பமில்லாமல் திருமணம் நடைபெறுகிறது. அவள் வாழ்வு குறுகிய வட்டத்திற்குள் அமைந்து விடுகிறது.

வடக்கத்தியானின் மகள் பூங்காவனம் பள்ளியில் சென்று படிக்க மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறாள். ஆனால், அவள்தாய் "படிப்பாம் படிப்பு படிச்சிட்டு சட்டிப்பானை கழுவத்தான் போவணும் தெருவுல அந்த வசந்தா குட்டி படிச்சா, பத்து படிச்சிப்பிட்டு கண்டபய நின்னபயகூடக் கண்ணடிச்சுக்கிட்டுத் திரிஞ்சா. பார்வதிமகளும் எருக்கங்குச்சி வச்சி செத்துப்போனா..... சின்னய்யா வாத்தியாரு பொண்டுவ ஆதி, ஜோதி படிச்சிப்புட்டு வாத்தியாரு வேலைக்குப் போனாளுவ" என்று வடக்கத்தியாள் பேசுகிறாள். பள்ளிக்கல்வி பெற்ற ஒரு சில பெண்கள் தவறு இழைத்ததைச் சுட்டிக் காட்டி பெண் கல்விக்குப் பெண்களே தடைபோடக் கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது. மேலும், பெண் கல்வியின் பயனும் ஒருசில இடங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

- கல்வியின் பயன்

கல்வியறிவின் மூலம் பகுத்தறிவு வளரும். சிந்தனை விரிவடையும். தன் மகள் கலாவின் படிப்பை நிறுத்தியபின் ஆனந்தாயி "வயசுப் பொண்ணு படிக்கக்கொள்ள இருந்துச்சின்னா சிந்தன வேற தெசையிலே செதறிப்போவும். வீட்டுக்குள்ளே அடைச்சிப் போட்டா......" என்று சிந்திப்பதின் மூலம் பெண் கல்வியின் பயனை ஒரு பெண்ணே தயங்குவதைச் சிவகாமி சுட்டிக் காட்டுகிறார்.

### **3.4.5** பாலியல் பலாத்காரமும் பெண்களும்

மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள். அவர்களில் ஒருசிலர் மாணவிகளிடம் பாலியல் பலாத்காரம் செய்கின்றனர். இந்நாவலில் அத்தகைய காட்சி ஒன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் ஒருவர் ஒரு பள்ளிக்கூடப் பெண்ணை (நீலவேணி) பலாத்காரம் செய்கிறார். அதனால் அந்த வருட பள்ளிப்படிப்பில் அவளால் தேர்ச்சி பெற முடியவில்லை இந்த நிகழ்ச்சியினால் அவளுக்கு ஆண்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு பிற்காலத்தில் திருமணம் செய்து கொள்ளாமலே

வாழ்கிறாள். இளமையில் ஏற்பட்ட பாதிப்பு அவளை வருந்தியழவைக்கிறது. எந்தத் தவறும் செய்யாத பெண் இப்படி வருந்துகிறேன். ஆனால், கங்காணியின் மகனான இராஜமாணிக்கம் இளமையிலிருந்து மது அருந்துதல், பிறபெண்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல் என்று வாழ்கிறான். அவனை ஊரார் ‘மைனர்’ என்று செல்லமாக அழைக்கிறார்கள். இவன் தீய பழக்கம் உடையவன் என்றும் தெரிந்தும் கூட பெண்கள் இவன் மீது மையல் கொள்கிறார்களே இது எப்படி என்று எண்ணி ஆச்சரியப்படுகிறாள். மேலும் தன் வாழ்க்கையில் இளமையில் ஏற்பட்ட அனுபவத்தினால் கங்காணி வீட்டிற்கு வீட்டுவேலை செய்வதற்காக வரும் பூங்காவனத்திடம் “அண்ணன் (இராஜமாணிக்கம்) ஒரு மாதிரி; நெருங்கிப் பழகுற வேலை வச்சுக்காத” என்ற நேரடியாகவே சொல்கிறாள். பாதிக்கப்பட்ட பெண் மற்றொரு பெண்ணிற்கு அறிவுரை வழங்கி எச்சரிக்கிறாள். இவ்வாறு ஆணுக்கொருநீதி பெண்ணுக்கொருநீதி என்ற சமூக அவல நிலையை எடுத்துரைக்கிறார் சிவகாமி.

**3.4.6** பொருளாதாரமும் பெண்களும்

வீட்டு வேலைகளோடு வயல்வேலைகளைச் செய்யும் ஆனந்தாயி பின்வருமாறு பேசுகிறாள்.

“அதோட நிறுத்திக்க நானும் வயல்லே பாடுபட்டனே வீட்டில
தினமும் வடிச்சுக் கொட்டறனே அதுக்கெல்லாம் கூலி
கணக்குப் பண்ணி குடுத்திடு”

என்று கணவனிடம் வழக்காடி அல்லற்படுவதைச் சிவகாமி காட்டுகிறார். பெண்களின் அடி மனதில் எழும் எதிர்ப்புணர்வு ஒரு சில நேரங்களில் பொங்கி எழுந்து இவ்வாறு வெளிப்படுகிறது. மூளை உழைப்பிற்கு ஊதியம் வழங்கப்படுவது போல உடல் உழைப்பிற்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வைச் சிவகாமி முன்வைக்கிறாள். சிறிய சிறிய செலவுகளுக்காக, பெண்கள் சிறுவாடு சேர்க்கும் வழக்கம் ஏற்படுகிறது.

பொருளாதாரத் தற்சார்பற்ற பெண்களுக்குத் திடீர் செலவுகளுக்கும், குடும்பச் செலவுகளுக்கும் சிறுவாடு அவசியமாகிறது. சிற்றூர்ப்புறங்களில் வாழும் பெண்கள் மிகவும் சிக்கனத்துடன் வாழப் பழகிக் கொள்கிறார்கள். பணம் சம்பாதித்த போதிலும் கணவன் வீண் செலவு செய்வதால் ஆனந்தாயி, “கொத்தமல்லி வந்ததும் களத்திலே ரெண்டு மூட்டையைத் தெரியாமல் விற்றுவிட்டு தன் மூத்த மகள் கலாவுக்கு ஜிமிக்கி செய்துபோட வேண்டும்; மீதிப் பணத்தில் இரண்டு ஆட்டுக்குட்டி பிடித்து விட்டால் போகத்துக்கு இரண்டு குட்டிபோடும்” என்று திட்டமிடுகிறாள். தன் வீட்டு விளைச்சலில் வரும் பொருள்களை விற்றுக் குழந்தைகளுக்காகச் சேமிக்க வேண்டும் என்று செயல்படுகிறாள். இதிலிருந்து ஆனந்தாயியின் பேச்சும் மூச்சும் குழந்தைகளுக்காகவும், குடும்பநலனிற்காகவும், பிறருக்கு உதவுவதற்காகவும் உள்ளது என்பது புலனாகிறது.

# 3.5 நாவலில் கையாளும் உத்திகள்

ஆனந்தாயி நாவலில் கையாளும் எழுத்து நடை, வர்ணனை, சொல்லாட்சி, உவமை, உருவகம், பழமொழி ஆகியவற்றில் ஒரு சில உதாரணங்களை இங்குக் காணலாம்.

## 3.5.1 எழுத்து நடையும் வர்ணனையும்

நாவல் இலக்கிய உலகில் சிவகாமியின் நடை தனித்தன்மை வாய்ந்தது. ஏனெனில் அவரது நாவல்கள் கிராமத்து மக்களின் வாழ்க்கையையே பிரதிபலிக்கிறது அவ்வகையில் இந்நாவலில் திருச்சி மாவட்டம் பெரம்பலூரைச் சுற்றியுள்ள கிராம மக்களின் பேச்சு வழக்குச் சொற்களைக் காண முடிகிறது. கிராமத்து மக்களின் வாழ்க்கை முறை பேச்சுவழக்கு எல்லாம் கதை நடையில் எளிமையையும் அழகையும் கூட்டுகின்றது.

- வர்ணனை

இந்நாவலில் இடம்பெறும் இயற்கை வருணனை, காட்சியை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. இலட்சுமி தன் மாமனுடன் மலங்காட்டிற்குச் சென்று வந்த காட்சியைப் பின்வருமாறு வர்ணிக்கிறார் ஆசிரியர்..



“வானத்தில் பந்தம் புடிச்ச மாதிரிக்கி, நெலா எரிஞ்சிக்கிட்டிருக்கு. நெருப்புப் பத்தப் பத்தப் பானையிலே பால் பொங்கி வழியுமே அது மாதிரி மலங்காட்டுல பால் மாதிரி வெளிச்சம். சாமக்கதிருக்கும் தெனக்கதிருக்கும் காவல் இருந்தோம். திருட்டுப்பசங்க பக்கத்துக்காட்ல தெனையறுத்துக் கிட்டிருந்தானுஹ. சத்தம் போட்டாக்கி பொம்பளைன்னு கூடபாக்காத மென்னியத் திருகிடுவானுஹ” என்று மலங்காட்டு வர்ணனை அமைந்துள்ளது.

பத்தாம் வகுப்பு படிக்கும் தனத்தின் நடவடிக்கையில் ஏற்பட்ட

தடுமாற்றத்தைக் கவனித்த அவள்தாய் ஆனந்தாயி,

“ஓடும்பாம்பை மிதிக்கும் வயதாயிற்றே. தனம் என்ன பண்ணுவாள்? இந்தத் தலைமுறையின் நியாயங்களை முந்தைய தலைமுறையல்லவோ முடிவு செய்கிறது. ஆனந்தாயி தனத்தைக் கண்டித்து கண்காணிப்பில் வைக்க ஆரம்பித்தாள் என்றாலும் வேர்களைச் செல்லரிக்கும் போது இலைகள் என்னாகும்? அந்த வீட்டில் அம்மாவின் அஸ்திவாரமே ஆடிக் கொண்டிருந்தது.”

இலட்சுமியின் அழகை மிளகாய்க்கார தண்டபாணி பெரியண்ணனிடம் பின்வருமாறு வர்ணிக்கிறான்.

“பால்ல குங்குமப்பூ கலந்தா எப்படியிருக்கும். ரோஜாப்பூ கலரு நல்ல ஒயரம், முன்னயும் பின்னயும் பார்த்தா பார்த்துக்கிட்டே இருக்கலாம்.”

வசதியுள்ள ஆண்களுக்கு, மனைவி குடும்பம் இருந்தாலும், இலட்சுமி போன்ற பொதுமகளிரைப் பற்றிக் கூறி அவர்களுடைய மனதைக் கலைத்துப் பொருளை இழப்பதற்குக் காரணமாகத் தண்டபாணியைப் போன்றவர்கள் சமுதாயத்தில் உள்ளனர்.

பெரியண்ணன் செய்யும் கொடுமைகளைத் தாங்கமுடியாத லட்சுமி, பூங்காவனத்திடம் சொல்லி அழும் பொழுது ஆனந்தாயி அங்கு வருகிறாள். விவரத்தை அறிந்த அவள் பின்வருமாறு கூறுகிறாள்.



“எலும்பு துண்டை கண்டா நாய் உடுமா. தொரத்திக் கிட்டுத்தான் அலையும். அவர், நீ எங்க போனாலும் உடப்போறதில்லை. வீட்ல வேலையைச் செஞ்சுக்கிட்டு செவனேன்னுகெட. கொஞ்ச நாள் ஆனா எல்லாம் சரியாப்போவும். செத்து கித்துப் போயிடாத. அந்தாளுக்குப் பயித்தியமே புடிச்சுடும்.” இவ்வாறு கணவனை நாயாகவும் இலட்சுமியை எலும்புத் துண்டாகவும் ஆனந்தாயி உருவாக்குகிறார்.

## 3.6 தொகுப்புரை

சிவகாமி தான் பிறந்து வளர்ந்த சுற்றுப்புற கிராம மக்களின் வாழ்க்கை நிலைகளை நடப்பியல் நெறியில் கலைத் தன்மையுடன் பதிவு செய்து ஒரு சிறப்பான பங்களிப்பைத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வழங்கியிருக்கிறார். இயற்கையோடு இரண்டறக்கலந்த கிராம மக்களின் வாழ்க்கையைக் கூறுவது இவரது தனிச்சிறப்பாகும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 4

## P10144 கே. டானியலின் புதினங்கள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ் ஈழ எழுத்தாளர் கே. டானியல். அவர் யாழ்ப்பாணச் சமூகத்திலே புரையோடியிருந்த சாதிச்சிக்கலை எவ்வாறு தீர்த்து வைக்கலாம் என்றொரு தேடல் முயற்சியினைத் தன்னுடைய ஒவ்வொரு நாவலிலும் மேற்கொண்டிருக்கிறார். இந்தப் பாடம் கே. டானியலை அறிமுகம் செய்து அவர் எழுதிய கானல் என்ற புதினத்தின் வழி வெளிப்படும் அவருடைய சமுதாயப்பார்வை, பாத்திரப்படைப்பு நடைத்திறன் ஆகியவற்றை விளக்குகிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படிப்பதால் பின்வரும் பயன்களைப் பெறலாம்.

- பழந்தமிழ் ஈழ மக்களின் பழக்கவழக்கங்களையும், பண்பாட்டையும் டானியலின் நாவல் மூலம் அறியலாம்.
- இலங்கைத் தமிழரின் சமூக அமைப்பு, தொழில், அரசியல், இனமோதல் என அனைத்துச் செய்திகளையும் தெரிந்து கொள்வீர்கள்.
- ஈழத்துத் தமிழர் சமுதாயத்தில் நிலவிய சமூகக் குறைபாடுகளைக் கண்டறிவீர்கள்.

# பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை

4.1 கே. டானியல்

4.2 கானல் – புதினம்

4.3 கதைமாந்தர்

தன் மதிப்பீடு : வினாக்கள்- I

4.4 சமுதாய நோக்கு

4.5 நாவலில் கையாளும் உத்திகள்

4.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 4.0 பாட முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் சாதிச்சிக்கலை அடிப்படையாகக் கொண்ட நாவல்களின் வரிசையில் இடம் பெற்ற சிறந்த நாவல் கானல் ஆகும். கானலில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளும், உத்தி முறைகளும் இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

# 4.1 கே. டானியல்



யாழ்ப்பாணத்தில் 1927-இல் பிறந்தவர் டானியல். இலங்கைத் தமிழர்களின் போராட்டத்தில் பங்கு கொண்டு 11 மாதங்கள் சிறைப்பட்டார். தமிழகத்திற்கு வந்து தஞ்சையில் தங்கினார். இலங்கையில் தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன இயக்கத்தின் அமைப்பாளராகவும், மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவராகவும் இருந்தவர். தஞ்சையில் மார்ச்சு 1986-இல் மரணமடைந்தார். ஈழத்து பஞ்சம மக்களுக்காகத் தோழர் டானியல் தன் இலக்கிய இயக்கப் பணிகளை அர்ப்பணித்தவர். தமிழ் இலக்கியத் துறைக்கு நாவல், குறுநாவல், சிறுகதை என பல வடிவங்களில் தம் பங்களிப்பைச் செய்துள்ளார்.

### 4.1.1 டானியலின் படைப்புகள்

அறுபதுகளில் சமுதாய ஒழுங்கீனத்தை மிக நுண்ணிய முறையில் விவரித்துச் சீர்திருத்த உணர்வுகளைத் தூண்டும் வகையில் சிறுகதைகளைப் படைத்த டானியல் பின்னர் நாவல்களையும் எழுதத் தொடங்கினார்.

தமிழில் தலித் இலக்கியம் படைத்த சிறந்த நாவலாசிரியரான டானியல் எழுதிய நாவல்களில் முக்கியமானவை பஞ்சமர் (1972), கோவிந்தன் (1983), போராளிகள் காத்திருக்கின்றனர், அடிமைகள் (1984), கானல் (1986), தண்ணீர் ஆகியவையாகும்.

மனங்கள் தானாக மாறுவதில்லை, முருங்கை இலைக்கஞ்சி, தெனியானின் பிஞ்சுப்பழம், மையக் குறி, இருளின் கதிர்கள் ஆகிய குறுநாவல்களையும், அமரகாவியம், உப்பிட்டவரை, டானியல்கதைகள் போன்ற சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவருடைய சிறுகதைகள் தாமரை இதழில் வெளிவந்துள்ளன.



தமிழீழ எழுத்தாளர் டானியலின் நாவல்களில் 'தலித்' மக்களின் கடும் உழைப்பு, தியாக உணர்வு முதலிய நற்குணங்கள் வெளிப்படுகின்றன. 1972-இல் டானியல் எழுதிய முதல் நாவல் பஞ்சமர். இப்புதினம் குடியாட்சி உணர்வுடன் பஞ்சமர் சாதியைச் சேர்ந்தவர்களின் இயக்க அடிப்படையில் சாதி இழிவுகளுக்கு எதிராகத் திரண்டெழுந்து போராடத் தொடங்கிய வரலாற்றை விளக்குவதாகும். கதை சொல்லும் கலை கைவரப் பெற்ற டானியல் தன் அனுபவங்களின் பின்னணியில் இந்நாவலை எழுதியுள்ளார். இந்நாவல் இலங்கை யாழ்ப்பாண நகரப்பின்னணியில் எழுதப்பட்டுள்ளது. அதில் வட்டாரப் பேச்சு வழக்குகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. மனிதர் – வாழ்க்கை – சாவு முதலியவற்றைப் புதிய தரிசனத்தில் புதிய அழகோடு வெளிப்படுத்துகிறது பஞ்சமர். மனித சமூக உறவுகளைப் புதிய முறையில் அமைத்து அதனை மாற்றியமைப்பதற்கான போராட்டம் இந்நாவலில் இடம் பெற்றுள்ளது. இந்நாவலைத் தொடர்ந்து அவர் கோவிந்தன், போராளிகள் காத்திருக்கின்றனர், அடிமைகள், கானல் போன்ற நாவல்களை எழுதியுள்ளார்.

போராளிகள் காத்திருக்கின்றனர் என்ற நாவல் மண்டைத்தீவு மீனவர்கள் பற்றியது. மனித உணர்ச்சிகளின் அடிப்படையில் தொழிலாளர் இனம் ஒன்றுபட்டுப் போராடுவது சுட்டப்படுகிறது. இது வட்டார நாவலாகத் திகழ்கிறது.

**4.1.2** தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறுமிடம்

1950-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தமிழ் நாவல் வளர்ச்சிக்கு இலங்கை எழுத்தாளர்களின் பங்களிப்பு மிகப்பெரியது. அறுபதுகளில் யாழ்ப்பாணப் பகுதியில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் ஆலயப் பிரவேச இயக்கங்கள் ஆகியவை இலக்கியத்திற்கு ஊக்கமளித்தன. செ. கணேசலிங்கன், இளங்கீரன் பொன்னையன், காவலூர். இராசதுரை, டொமினிக்ஜீவா, செ. யோகநாதன், கே. டானியல் முதலிய முற்போக்கு எழுத்தாளர்கள் தேசியப் பிரச்சினைகளைத் தங்கள் எழுத்துகளில் வெளிப்படுத்தினார்கள்.

தமிழீழ எழுத்தாளரான கே.டானியல் அடிநிலை மக்கள் வாழ்க்கையையும்,

பிரச்சினைகளையும் எழுத்தில் வழங்கும் முயற்சியில் தமிழ் மக்களிடையே அடக்கு முறையின் வடிவமாக இருக்கும் சாதிப்பிரச்சினைகளையும் பற்றி எழுதியுள்ளார்.

## 4.2 கானல் - புதினம்

1983-இல் கானல் என்ற நாவலின் முதற்பதிப்பு 1986-இல் தமிழகத்தில் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு 1993-இல் கொழும்புவில் வெளிவந்தது. கானல் என்ற புதினத்தின் கதைக்கரு, கதாபாத்திரங்கள், கதைப்பின்னல், கதைச்சுருக்கம், சமுதாயச் சிந்தனைகள் ஆகியவற்றோடு இந்நாவலில் கையாளும் உத்திமுறைகளைப் பற்றியும் இங்கு விரிவாகக் காணலாம்.

பரம்பரை பரம்பரையாக சைவ மதத்தையே தழுவி வந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினர் இடைக்காலத்தில் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர். அதன் மூலம் தங்கள் அவல வாழ்வை விடுவிக்க முற்பட்டனர். இதன் மூலம் ஏற்பட்ட பலாபலன்களைச் சித்தரிப்பது தான் இந்த நாவலின் கதைக்கருவாகும். "இந்நாவல் எனது இலக்கிய நோக்குக்கு அமைய சாதாரண வாசகனாலும், கருப்பொருளையும் ஏனையவற்றையும் மகிழ்வோடு புரிந்து அனுபவிக்கக் கூடிய விதத்திலேயே பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை நான் இங்கு துணிந்து கூறுவேன்" என்று இந்நாவலின் முன்னுரையில் டானியல் குறிப்பிட்டுள்ளார்.

இது இவரது ஐந்தாவது புதினம். காலமெல்லாம் எந்த மக்களின் ஆட்சி அதிகாரத்திற்காகத் தன் பேனாவையும், ஆன்மாவையும் அர்ப்பணித்தாரோ, அந்தப் பஞ்சம மக்களுக்காக, தோழர் டானியல் அவர்கள் தன்னுடைய படைப்பில் தான் பிறந்த, வாழ்ந்த கிராமத்தையும் அங்கு வாழ்ந்த மக்களையும், வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களையும் கதைமாந்தர்களாகக் கொண்டு இந்த நாவலைப் படைத்துள்ளார்.

### 4.2.1 கதைச்சுருக்கம்

நன்னியன் ஒரு பண்ணை வேலையாள், வேதக்கோயில் அடியார், சுப்பு என்கிற இளையமோன், சிமியோன் என்னும் வைரவன், பொடியன் ஆகிய மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்கள் நன்னியனிடம் வந்து, "ஒரு வேதக்கோயில் கட்டுவதற்கு" யோசனை கேட்கிறார்கள். நன்னியன் ஒப்பவில்லை. 'பத்து வருசத்துக்கு முன்பு உங்கடை ஊருக்கை ஒரு வேதக் கோயிலைக் கட்டி நீங்கள் பட்ட பாடுகளை மறந்து விட்டீர்களா? பண்ணையார் உங்க வீடுகளுக்குத் தீ வைத்து, உங்களைத் தங்கள் நிலங்களிலும் இறங்க விடவில்லை!' என ஆட்சேபிக்கிறான்.

நன்னியனின் நில முதலாளி தம்பாப்பிள்ளைக்கும் இச்செய்தி எட்டுகிறது. அதைப் பற்றி முதலாளி கேட்கிறார்; இல்லை என்று நன்னியன் மறுக்கிறான். நன்னியனின் மகள் சின்னி, பண்ணையார் தம்பாப்பிள்ளையின் தங்கை வீட்டு வேலைக்காரி. தங்கையின் மகன் அவளைப் பாலியல் பலாத்காரம் செய்ததால், "அவளை இனி அங்கு அனுப்பமாட்டேன்" என நன்னியனும் அவனது இரு மகன்களும்

மறுக்கிறார்கள்.

- நன்னியன் குடும்பம்

நன்னியன் – செல்லி தம்பதிகளுக்கு சின்னி என்ற பெண்ணும், இளையவன் என்ற மகனும் உண்டு. நன்னியனுக்கு இன்னொரு மூத்த மகனும் இருந்தான். மூத்த தாரத்து மகன்; அவனுடைய மனைவி பொன்னி; இவர்களுக்கும் குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் யாருமே சின்னியைப் பண்ணைக்காரியின் வீட்டுக்கு அனுப்ப ஒப்புக்கொள்ளவில்லை.

- தகராறும் கொலைகளும்

தன் தங்கையின் வீட்டுக்குச் சின்னியை அனுப்பும்படி தம்பாப்பிள்ளை வந்து அழைக்க, நன்னியன் மறுக்கிறார், அதனால் கோபம் அடைந்த, பண்ணையார் நன்னியனை அடிக்கிறான். நன்னியனின் மூத்த மகன் பாளைக்கத்தியுடன் ஓடிவர தம்பாப்பிள்ளை ஓடி மறைகிறார். பின்பு ஆளனுப்பி, நன்னியனை மரத்தில் கட்டி வைத்து, கர்ணனும் அவரும் அடிக்கிறார்கள். இதனைக் கேட்ட மூத்தவனும் இளையவனும் தம்பாப்பிள்ளை வீட்டில், கர்ணனை வெட்டி வீழ்த்துகிறார்கள்; இதனால் கொதிப்படைந்து பண்ணைக்காரர்கள் பண்ணை விவசாயிகளின் வீடுகளைக் கொளுத்தி, நன்னியனின் மனைவி செல்லியையும் துப்பாக்கியால் சுடுகிறார்கள். செல்லி செத்து விழுகிறாள். குடிசைகள் எரிந்து சாம்பலாயின.

- விசாரணையும் தீர்ப்பும்

மணியக்காரருக்குத் தகவல் போகிறது. விசாரணையில் “நன்னியனின் மகன்கள் இருவரும் கர்ணனை வெட்டிக் கொன்றார்கள்” என்று முடிவாகிறது. செல்லியைச் சுட்டவனை யாரும் பார்க்கவில்லை. கோயில் பாதிரியாரே நன்னியனையும் அவனது இரு மகன்களையும் போலீஸில் ஒப்படைக்கிறார்.

- மதமாற்றம்

நன்னியன் – மூத்தவன் – இளையவன் மூவரும் சிறையில் இருக்கும் போதே சின்னி, வேத மதத்தில் சேர்ந்து திரேசி என்ற புதுப்பெயர் பெறுகிறாள். அவளுக்குத் திருமணமும் முடிகிறது. அவள் ஆசிர்வாதப்பர் கோயில் மூப்பர் மகன் சிமியோனை, திருமணம் செய்து கொள்கிறாள். அத்துடன் விவசாயக் கூலிகள் அனைவரும் மதம் மாறவும் சம்மதித்து, இலவச உழைப்பு மூலம் புதுக்கோயிலையும் கட்டி முடிக்கிறார்கள். ஊர்க்காரப் பெரிய மனிதர்கள் இரவில் கோயிலை இடிக்க முயலவும், அதற்கும் காவல் இருக்கிறார்கள். ஒரு தடவை திரேசி தன்னந்தனியாகக் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போது, நான்கைந்து பேர் அவள் தாவணியையும் சட்டையையும் கிழித்து அவமானப்படுத்தினர். உடனே, தாழ்த்தப்பட்டவர்கள் மெழுகு வர்த்தியுடன் ஊருக்குள்

ஊர்வலம் செல்கிறார்கள். ஒட்டு மொத்தமாக எல்லோரும் கிறிஸ்தவர்களாகவும் மதம் மாறுகிறார்கள்.

- கைதும் விடுதலையும்

இதற்கிடையே தம்பாப்பிள்ளை தன் மனைவி வெள்ளச்சியைக் கொன்று, ‘இயற்கையான சாவு’ என்று மணியக்காரருடனும் மருத்துவருடனும் சேர்ந்து கொலையை மறைக்க முயலுகிறார்கள். தாழ்த்தப்பட்ட ஒருவனால் உண்மை வெளிப்பட்டு, அவர் கைதாகிறார். ஏற்கனவே தூக்குத்தண்டனை பெற்ற தந்தை – மகன்களில், இளையவன் மட்டும் விடுதலையாகி வருகிறான்; தூக்குத்தண்டனையும் குறைக்கப்பட்டு, நன்னியனும் பெரியவனும் கூட நன்னடத்தை, விடுமுறை என்ற நடைமுறைச் சலுகைகளால் கூடிய விரைவில் விடுதலை ஆவார்கள் என எதிர்பார்ப்பும் ஏற்படுகிறது. இளையவனும் கிறிஸ்தவனானான்.

- கலப்புத் திருமணம்

கிறிஸ்தவனாக மதம் மாறிய தம்பன் என்ற மேட்டுக்குடியான் புதிதாக யாக்கோபு என்ற பெயரைச் சூட்டிக் கொண்டவன் பூக்கண்டாரின் மூத்த மகளை விரும்பினான். பூக்கண்டாரின் மனைவிக்கும் இதில் விருப்பம் தான். அவள் பெயர் சரஸ்வதி. அவளும் மதம்மாறி லூர்தம்மா என்று புதுப்பெயர் பெறுகிறாள். சாதிவிட்டு சாதி நடக்கும் இந்தத் திருமணத்தினால் ஊரே குழப்பத்திற்குள்ளானது. பூக்கண்டாரின் மனைவி மக்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள். பெரிய கலட்டியின் மாதா கோயில் இப்பொழுது புதுப்பொலிவு பெற்றுவிட்டது. காலை – மாலை எந்த வேளையிலும் பலர் வந்து போகத் தொடங்கினர். இப்படி பல சாதியினரும் அங்கம் வகிக்கும் பெரும் கோயிலாக மாதா கோயில் இரண்டு வருடத்தில் மாறிவிட்டது.

- சாதி வேற்றுமை

பூக்கண்டாரின் மகன் பெரிய கலட்டி கேணியில் குளித்ததற்காக, உபதேசியார் அடித்ததையும், குருவானவர் குளிப்பதற்குச் சின்னக்கலட்டி தண்ணீர் தராமல் மேல் சாதிக்காரரான பூக்கண்டர் வீட்டுக்கிணற்றிலிருந்து தண்ணீர் தந்ததையும் இணைத்து, இங்கேயே இன்னும் சாதி வேற்றுமை மாயவில்லை என்கிறார் பூக்கண்டர். அவர் மருமகன் யாக்கோபு, எங்களை ஊர்களில், கோவிலுக்குள், எல்லாச் சாதியையும் சேர்ந்து அமர அனுமதிப்பதில்லை என்கிறான். இந்த ஊரைச் சேர்ந்த (தாழ்ந்த சாதி) கிறிஸ்தவர்கள் இடதுபுறமாகவும், வெளியூரைச் சேர்ந்த (உயர்ந்த சாதி) கிறிஸ்தவர்கள் வலதுபுறமாகவும் அமரும்படி எல்லாம் வல்ல கர்த்தரின் பெயரால்” கேட்டுக்கொள்கிறார் பாதிரியார்.

இந்துக்களாக இருந்த பொழுது எத்தகைய சாதி வேறுபாடுகள் இருந்தனவோ,

அதே போல்தான் கிறித்தவ மதம் மாறிய பின்னரும் சாதி வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை இக்கதை கூறுகிறது.

## 4.3 கதைமாந்தர்

இந்த நாவலில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றுமே எடுத்துக் கொள்ளப்பட்ட கதை நிகழ்ச்சிக்குத் தேவையானவற்றையே செய்துவிட்டு இடை இடையே நின்று போய் விடுகின்றன. கதையை நகர்த்திச் செல்லும் நோக்குடன் அவைகள் கொண்டு வரப்படவில்லை. இயல்பான நடைமுறைகளை வெளிக்கொண்டு வருவதற்கே அவைகள் இடம் பெற்றுள்ளன. எனவே, இந்த நாவலில் இடம் பெறும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சில மாந்தர்களைப் பற்றி மட்டும் இங்குப் பார்ப்போம்.

### 4.3.1 ஞானமுத்துப் பாதிரியார்

தந்தை இறந்துபோக அம்மாவின் இரண்டாம் தாரமாக வந்த சிறிய தந்தையின் அன்புடனும், அம்மாவின் அன்புடனும் இரயில்வே துறையில் பணிபுரிந்து வருகிறார். சில நாட்களுக்குப் பிறகு அவ்வேலையை விட்டுவிட்டு குருமடம் செல்கிறார். குருபட்டம் பெற்று ஏழை எளியவர்களுக்காகவும் திக்கற்ற மனிதர்களுக்காகவும், நியாயத்திற்காகவும் பாடுபடுகிறார். இவர் சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்த மக்களைத் தன் வழிப்படுத்த நினைக்கிறார். ஆனால் கடைசியில் உயர்சாதி மக்களுக்கு ஒத்துப் போகவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

பாதிரியார் நல்ல பண்பாளர். அன்பு குணம் படைத்தவர். எந்த ஒரு செயலையும் தன்னம்பிக்கையோடு செயல்படுபவர். பின் தள்ளப்பட்ட மனிதர் வாழும் கிராமங்களில் கோயிலைக் கட்டி அதனால் பல இன்னல்களை அனுபவித்து, கிராமங்களில் பசியோடும் பட்டினியோடும் இரவுகளைக் கழித்து, சாதிவெறியர்களால், அவமதிப்பிற்குள்ளாகுகிறார். மேலும் கல்வியறிவில்லாத சிறுவர்களுக்குக் கல்விச் செல்வம் கிடைக்கவழி செய்கிறார். நன்னியனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் உதவி செய்கிறார். இளையவனுக்கு விடுதலை வாங்கித்தருகிறார். பெரிய கலட்டியில் மாதா கோயில் கட்டுகிறார். துன்பப்படுகிறவர்களின் துன்பத்தைப் போக்கி அவர்களுக்கு வழிகாட்டத் தன்னை அர்ப்பணிக்கிறார். மிகுந்த சிரமப்பட்டு மக்களுக்கு வேலை வாங்கித் தருகிறார். தன்னம்பிக்கையோடு செயல்படும் இவர், இறுதியில் வயிற்றில் பசி என்ற நெருப்பை கட்டிக் கொண்டிருக்கும் இளையவனிடம் தோற்றுப் போகிறார். அவர் தோற்றுப் போகுமுன் கண்டவையெல்லாம் வெறும் கானலாகிறது. பசி, பட்டினி, பஞ்சம் என்பவைகளை அவரால் தனித்து நின்று வென்றுவிட இயலவில்லை. இது இவரது தன்னம்பிக்கையையும், நற்பண்பினையும் வெளிப்படுத்தும் விதமாக உள்ளது.

### 4.3.2 பிறர்

நன்னியன், தம்பன், பூக்கண்டர், தம்பாப்பிள்ளை, வெள்ளச்சியம்மாள், நெஞ்சுச்சுப்பன், சந்தியாபிள்ளை ஆகிய பிற பாத்திரங்களின் பண்பு நலன்களையும்

பார்க்கலாம்.

- நன்னியன்

நன்னியன், நல்லமுறையில் தம்பாப்பிள்ளை வீட்டில் வேலை பார்த்து வருகிறான். இவனுக்கு மூத்தவன், இளையவன், சின்னி என்று மூன்று பிள்ளைகள். இவன் உழைப்பில் சிறந்தவன். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இவன் மகள் சின்னி, தம்பா பிள்ளையின் தங்கை வீட்டில் வேலை செய்கிறாள். சின்னியின் கற்புக்குக் களங்கம் ஏற்பட்டதினால் தம்பாப்பிள்ளை தங்கையின் வீட்டிலிருந்த சின்னியை அழைத்து வருகிறான் நன்னியன். இதனால் தம்பாப்பிள்ளைக்கும் இவனுக்கும் மோதல் ஏற்பட, விதானையான் இவனை அடிக்கிறான். இதைப் பார்த்த இளையவனும் மூத்தவனும் அதிர்ச்சி அடைகின்றனர். ஆத்திரத்தால் மூத்தவன் விதானையானைக் கொலை செய்கிறான். மூவரும் சிறைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இவன் வாழ்க்கை மண்வெட்டியுடனும் வயல்களுடனும் இணைந்தது.

- தம்பன்

இவன் சின்ன கலட்டி மக்களுக்கு அடைக்கலம் தந்து அம்மக்களுக்கு உதவி செய்கிறான். நன்னியன் குடும்பத்துக்கு நண்பனான இவன், பெரிய சவட்டியில் மாதாகோயில் கட்டுவதில் பெரும்பங்கை எடுத்துக் கொள்கிறான். கோயிலில் பொறுப்பேற்கிறான். பூக்கண்டருக்கும் இவனுக்கும் நெருங்கிய பழக்கம் இருந்து வருகிறது. நன்னியன் மகன் இளையவனுக்கும் மகள் சின்னிக்கும் தனித்தனியே திருமணம் நடத்தி வைக்கிறான். இவன் நல்ல குணம் படைத்தவன். இனம் பிரிக்காது ஒன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன். இவ்வாறு, பல்வேறு வகையில் நல்ல செயல்களையே செய்கிறான்.

- பூக்கண்டர்

உயர் சாதியைச் சேர்ந்த வறுமைப்பட்ட விவசாயியான இவர் கலட்டி மக்களுக்கு இருக்க இடம் கொடுக்கிறார். நன்னியன் மகள் சின்னியின் திருமணத்தில் பெரும்பங்கை எடுத்துக் கொள்கிறார். இவரிடம் சாதிய உணர்வுகளைவிட வர்க்க உணர்வுகளே மேலோங்கி நிற்கிறது. அவ்வப்போது பொதுவான மனித நீதிகளை மனம் திறந்து சொல்வார். தனியான போக்குடைய இவர் கலட்டி மக்களிடம் நற்பெயரைப் பெறுகிறார். தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் கிறித்தவர்களாக மாறிய பின்பு இவரும் கிறித்தவராகிறார். மனிதாபிமானியாக வரும் இவர் அடிக்கடி தம்பனிடம் பல யோசனைகளைச் சொல்வதோடு உயர்சாதிகளிடையே கெட்ட பெயரையும் சம்பாதிக்கிறார்.

- இளையவன்

நாவலின் தொடக்கத்தில் இளையவனாக வரும் இளையவன், கிறித்தவனாக மாறுகிறான்; எந்தக் குற்றமும் செய்யாமல் சிறைக்குப் போகிறான்; கதையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் பாத்திரமாக வரும் இவன் நாட்டில் உள்ள கோடிக்கணக்கான மக்களையும், பாதிரிகளையும் சிந்திக்க வைக்கிறான். கதை முடிவுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் கொடுமைக்கும் தன்னை வெண்மைபடுத்திக் கொள்ளும் பாதிரிகளுக்கும் ஒரு சவாலாக அமைகிறது இப்பாத்திரம்.

- சந்தியாப் பிள்ளை உபதேசியார்

கலட்டி மக்களுக்கு வேதம் கற்றுக் கொடுக்கவரும் இவர் வெளியில் சாதிவேறுபாடு பார்க்காதவர் போல் நடிப்பார். வேதம் சொல்லிக் கொடுக்கும் இவர் தாழ்ந்த சாதி வீடுகளில் தண்ணீர் குடிப்பது கிடையாது. தாழ்த்தப்பட்ட சின்னியின் தாவணியை உயர்சாதி நயனாத்திகள் இழுத்தபோது எங்கே கோயில் கட்டுவது நின்றுவிடுமோ என நினைத்தாரே தவிர அந்தச் சம்பவத்துக்காக எந்த ஒரு வெளிப்பாடும் அவரிடம் தெரியவில்லை.

இது போன்று இந்நாவலில் பல பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. அவற்றால் மாறுபட்ட பாத்திரங்களைக் கொண்ட மனிதர்களைக் காணமுடிகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 4.4 சமுதாய நோக்கு

நாவலில் மக்கள் ஒரு சமூக அமைப்பின் கட்டுக்கோப்பிலிருந்து இன இழிவுகளைப் போக்கிட வேறோர் சமூக அமைப்பை எவ்வாறு நாடுகிறார்கள் என்பதை ஆசிரியர் தெளிவாகவே கூறுகிறார். இந்நாவல் சமுதாய நோக்கில் எழுதப்பட்டுள்ளது. சாதி ஒழிப்பு இயக்கங்கள் பார்க்கத் தவறியதும், தாழ்த்தப்பட்ட மக்கள் கேட்கத் தவறியதும் ஆன செய்திகள் இந்நாவலிலே விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லாமல் கூறப்படுகின்றன.

### 4.4.1 மதமும் சாதியும்

மானுட வாழ்வில் மதம் வகிக்கும் இடத்தையும், அதிலிருந்து மாறுபட்டு, சாதியம் வேர்ப்பிடித்திருக்கும் வித்தியாசத்தையும், சாதி இழிவுகளுக்கு மதமாற்றம் தீர்வாகாது என்பதையும், சாதியத்தின்முன் கிறித்தவம் தோற்றுப்போகிறது என்பதையும் புதிய ஜனநாயகப் புரட்சியே சாதி ஒழிப்பின் நிபந்தனை எனவும் இந்த நாவலில் சுட்டப்படுகிறது.

இந்நாவலில் இடம்பெறும் கீழ்ச்சாதி மக்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதற்குப் பல எதிர்ப்புகளை எதிர்நோக்கி, கோயில் கட்டுவதற்கு உழைப்பைக் கொடுத்து இரவு பகலாகக் கண்விழித்து சாதி இழிவுகளைப் போக்க நினைக்கின்றனர். ஆனால் அங்கும் உயர் சாதியினர் மதத்தில் ஊடுருவி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும்போது பாதிரியார் உயர் சாதியினருக்கு ஆதரவாகவே போக நேர்கிறது. மதத்திலிருந்து சாதியம் பிரியும் இடத்தை ஆசிரியர் இந்நாவலில் தெளிவாகக் காட்டியுள்ளார்.

- சாதி ஏற்றத்தாழ்வு

வேதம் சொல்லிக்கொடுக்க வரும் சந்தியாப்பிள்ளை உபதேசியாருக்குத் தண்ணீர் தேவைபட, தம்பன் ஒருவனை அனுப்பித் தூய்மையான பாத்திரத்தில் பூக்கண்டர் வீட்டில் தண்ணீர் கொண்டுவா என்கிறார். எனவே மதம் மாற்றம் சாதிமாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது தெளிவு.

இந்நாவலில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களைத் தாங்களாகவே தாழ்வாக நினைக்கின்றனர் என்பதை நடப்பியல் தன்மையோடு ஆசிரியர் காட்டுகிறார்.

### 4.4.2 பெண்கள் நிலையும் எதிர்ப்பும்

நன்னியனின் மகள் சின்னி பல வருடங்களாக தம்பாப்பிள்ளையின் வீட்டில் தங்கி அடிமையாக வேலை செய்கிறாள். தம்பாப்பிள்ளையின் மருமகன்கள் சின்னியிடம் தவறான முறையில் நடந்து கொள்ள, இதையறிந்த பெற்றோரும் சகோதரரும் அவளைத்

தங்கள் வீட்டிற்கே அழைத்து வந்துவிடுகின்றனர். அவர்கள் பலமுறை வந்து அழைத்தபோதும் சின்னியை அனுப்பாததால் நன்னியனுக்குத் தண்டனை தருகின்றனர். இந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட பெண்கள், “இண்டைக்கு நன்னி மகளுக்கு வந்தது நாளைக்கு எங்கடை தங்கச்சியாருக்கும் வரும்! எங்கடை பத்துப் பெட்டைகள் (இளம் பெண்கள்) நயினார் வீடுகளில் இருக்குதுகள்... எங்கடை பெட்டைக் குஞ்சுகள் இவங்களுக்குப் பொடுதடியேளா (வைப்புகளா) கேக்கிறேன்” என்று பொங்கி எழுகின்றனர், சின்னிக்கு ஏற்பட்ட நிலையை, தாய், தகப்பன், அண்ணன், தம்பி என்று அனைவரும் சேர்ந்து பேசக்கூடிய விஷயமா? என்று ஆசிரியர் கோடிட்டுக் காட்டுகிறார். இதன்மூலம் வயிற்றுப் பிழைப்பிற்காக வேலை செய்யச் செல்லும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை வெளிப்படுகிறது. இதுபோன்று வேறுசில நிகழ்ச்சிகளிலும் பெண்களுக்குத் தீங்கிழைக்கின்றமை எடுத்துக்காட்டப் படுகிறது.

## 4.5 நாவலில் கையாளும் உத்திகள்

நாவலில் கையாளும் உத்திகளால் நாவல் தனிசிறப்பைப் பெறுகிறது. உத்தி நுணுக்கங்களே நாவலை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்கின்றன. உத்தி மூலம் ஆசிரியரின் மொழித்திறனும் எழுத்தாற்றலும் வெளிப்படுவதோடு அல்லாமல் கலைப்படைப்பும் சிறப்புறுகின்றது. நாவலின் தலைப்பு, எழுத்து நடை, வர்ணனை, சொல்லாட்சி, உவமைகள் ஆகியவற்றில் உத்தி நுணுக்கங்களை இங்குக் காணலாம்.

- நாவலின் தலைப்பு



நாவலின் தலைப்பான கானல் என்பது, கதைக்கருவை உருவக முறையில் குறிப்பாகப் புலப்படுத்துகிறது. மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் வறுமையை நீக்க முயலும் முயற்சியானது கானல் நீராகவே உள்ளது என்பதை இந்த நாவலின் தலைப்பு மையப்படுத்துகிறது.

### 4.5.1 மொழிநடை

ஒரு நாவலுக்குச் சிறப்பு சேர்ப்பனவற்றுள் ஒன்று, ஆசிரியர் கையாளும் நடையே ஆகும். நாவல் இலக்கிய உலகில் டானியலின் நடை, தனித்தன்மை வாய்ந்தது. இந்நாவலில் யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள மக்களின் பேச்சுவழக்குச் சொற்களைக் காணமுடிகிறது.

பூக்கண்டரின் மைத்துனன் மாதாகோயில் கட்டுவதற்கு இடம் தருவதற்கு இசைவு தெரிவிக்கிறார். அதை விரும்பாத விதானையார் பூக்கண்டரிடம் எதிர்ப்பு தெரிவிக்கிறார். அதற்குப் பூக்கண்டார்,

“விதானையார், நான் மச்சானுக்கு எழுதித்தான் மச்சான் ஓமெண்டு முற்றுச் சொன்னவர். நான் அந்த முற்றை ஞானமுத்து சுவாமிக்குச் சொல்லிப் போட்டன். இனி

நான் மாறமாட்டன். உங்கடை இந்த வில்லங்கங்களிலிருந்து நளவன், பள்ளன், பறையன், வண்ணான், அம்பட்டன் இதாலை விடுபடுவாங்கள் எண்டால் அவங்கள் கோயில் கட்டட்டன். உங்களுக்கு என்ன இடைஞ்சல்? ஏன் விதானையார், இளவாலையிலை, பண்டத்தரிப்பிலை; சில்லாலையிலை, அச்சுவேலியிலை.... இப்பிடிப் பல இடங்களிலை வெள்ளாளரும் வேதத்திலை சேருகினம், ஏன் உந்த உப்பிமாலடியிலை, நவாலியிலை, நாவாந்துறையிலை, ஆனைக் கோட்டையிலை இருக்கிற கரையாள் திமிலன், முக்கியன் எண்டு பல சாதியளும் சேர்ந்திருக்கினம். அதுக்கென்ன இவங்கள் சேந்தா? சும்மா வேலைமினக்கெட்டு உதைக்கதைக்க வந்திட்டியார்? எனக்குத் தெரியுது விதானையார்... சொன்னாச் சொன்னது தான்! காணியை நான் மறிக்க மாட்டன்" என்று பதில் கூறுகிறார். நாவலின் சில இடங்களில் படிக்காத பாமரமக்கள் பேசுகின்ற கொச்சைத் தமிழும் இடம் பெற்றுள்ளது.

**4.5.2** வர்ணனை

நாவலில் இடம் பெறும் வர்ணனைகள் கதையோடு பொருந்தியதாக அமைந்திருக்க வேண்டும். அவ்வகையில் இந்நாவலில் தோட்டக்கரை காளிகோயில் திருவிழாவிற்காகக் காளாஞ்சி கட்டும் நிகழ்ச்சியைப் பின்வருமாறு வர்ணனை செய்துள்ளார் ஆசிரியர்.

கோவிலுக்கு முன்னால் மூன்று தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன. சாமிக்கூத்திலிருந்து தெர்ப்பை, சந்தனம், குங்குமம் திருநீறு, பிரசாதம் ஆகிய அடுக்கப்பட்ட ஏழு வெற்றிலைச் சுருள்களை எடுத்துக் கொண்டு பெருங்குடும்பி ஐயர் வெளியே வந்தார். "காளாஞ்சிக்காரர், எல்லாம் சரியோ?" என்று ஐயர் கேட்ட போது, தம்பாப்பிள்ளை ஒரு முறை எல்லோரையும் சுற்றிப் பார்த்துவிட்டு கை விரல்களை மடக்கி கணக்கெடுத்துக் கொண்டார். கட்டாடி பகுதி வந்திட்டுது ! பரியாரி பகுதி வந்திட்டுது ! தச்சபகுதி வந்திட்டுது ! பள்ள பகுதி வந்திட்டுது ! தச்சபகுதி வந்திட்டுது ! எங்கடை பகுதியும் சரி! நளவப்பகுதிக்கை இருந்துதான் நன்னியனைக் காணேல்லை என்று தம்பாப்பிள்ளை முணுமுணுத்துக் கொண்டார். சந்து இருளுக்குள் நின்ற நன்னியன். நான் இஞ்சை நிக்கிறனாக்கும் என்று சொல்லிக் கொண்டே சற்று வெளிச்சம் பட வந்து நின்றான். மேலே குறிப்பிட்ட வர்ணனையில் முதல் கொடியேற்றத் திருவிழாக் காளாஞ்சிக்காரர் தம்பாப்பிள்ளை என்பதும் மற்றவர்களெல்லாம் அந்த ஊரிலுள்ள சாதிப்பிரிவினர் என்பதும் வெளிப்படுகிறது.

நல்ல நேரம் பார்த்து, நாள் பார்த்து புகையிலை நாற்று நடும் காட்சி பின்வருமாறு வர்ணனை செய்யப்பட்டுள்ளது.

"கமக்காரன் புறப்பட்டு விட்டான். நாற்றுக் கடகத்துடன் நன்னியன் பின்னால் நடந்தான். படலைக் கேற்றுவரை நகுலனும் வழியனுப்ப வந்து நின்றுவிட்டது. கிழக்குப்பக்க வடக்கு மூலை ! முதல் பாத்தி சிறு வரம்பு மூலையில் நாற்று புதைக்க

வேண்டும். பட்டைத் தண்ணியைச் செழிக்க ஊற்றி, அந்த மென் வெளிச்சத்திலும் செழித்த புகையிலைக் கன்றுகளைத் தெரிந்தெடுத்த நன்னியன் மேற்கு வானைப்பார்த்து வெள்ளிக்கணக்கை சரிகண்டு நேரம் சரி கமக்காரன் நன்னியன் நாத்தை ஊண்டப் போறானாக்கும் ! என்றான். உனக்கும் நேரக்கணக்கு விளங்குது ! நேரம் சரி ஊண்டு ! என்று கமக்காரன் விடை கொடுத்து விட்டார். பூமியைத் தொட்டு கண்களில் ஏற்றிக்கொண்டு நன்னியன் முதல் நாற்றை ஊன்றிவிட்டான். இவ்வாறு புகையிலை நடும் காட்சி வர்ணனை ஆக்கப்பட்டுள்ளது. மேலும்,

"செவந்திப் பூவின் நடுவில் இருக்கும் மஞ்சள் நிறத்தின் மினுமினுப்பு; புழுதிநிறமான பெருத்த அள்ளி முடியப்பட்ட கூந்தல்! கபில நிறமான கண்கள் வளவளப்பான மகரந்தச் சொண்டு! எடுப்பான நெஞ்சுக் கும்பிகள்! சுருக்கம் விழுந்த கழுத்து! மார்பை இறுக்கி முடியப்பட்ட சட்டை, அரை மட்டத்திற்குக் கீழாக வயிற்று நெறி தெரியக்கூடியதாக விரிந்து கட்டப்பட்ட பாவாடை. இவ்வாறு தம்பாப்பிள்ளையின் மகள் செவ்வந்தி நாச்சியாரின் தோற்றம் வருணிக்கப்பட்டுள்ளது.

### 4.5.3 உவமை

டானியல் கையாண்டுள்ள உவமைகளில் சிலவற்றை இங்குக் காணலாம். தோட்டத்துக்குச் சென்ற நன்னியன் வழக்கத்திற்கு மாறாகத் தாமதமாகத் தன் குடிலுக்கு வந்தான். வந்தவுடன் தினைக்கஞ்சி குடிக்கப் போகாமல் எதுவும் பேசாமல் குடத்தடிக்குப் போனான். பொச்சுமட்டை அணைப்பில் இருந்த மண்குடத்தை சரித்துப் பிடித்துக் கொண்டே இருந்து விட்டான். நன்னியன் குடத்தடியில் வெகுநேரம் இருந்ததைக் கவனித்த அவன் மனைவி செல்லி

"இஞ்சை என்ன கல்லுப் பிள்ளையார் போல இருக்கிறாய்...... ....... கஞ்சி ஆறப்போகுது..." என்று குரல் வைத்தாள். இப்படி ஒரு உவமை நன்னியனின் நிலையை விளக்க வருகிறது. எந்த இயக்கமுமில்லாமலிருப்பதைப் பார்த்து, கல்லுப் பிள்ளையார்போல அசைவற்று இருக்கிறாயே என்று குறிப்பிடுகிறார்.

மகள் சின்னியை நயினாத்தி வீட்டில் மீண்டும் வீட்டு வேலைக்குக் கொண்டுவிட மறுக்கும் செல்லி,

"நீ சொல்லிற கதை எனக்கு ஒண்டுமாய் விளங்கேல்லை. நான் இதுக்குச் சம்மதியன், அவளை இனி ஓரிடமும் விடுகிறேல்லை. எங்கடை வறுமை எங்கேளாடை; பஞ்சம் போனாலும் பஞ்சத்திலே பட்ட வடுப்போகா தெண்டு என்றை ஆத்தை (அம்மா) நெடுகலும் சொல்லுவா" என்று தெரிவிக்கிறாள். இதில் வறுமை போனாலும் வறுமையில் அனுபவித்த துன்பம் நெஞ்சில் வடுவாகப் பதிந்து இருக்கும் என்பதை இந்த உவமை விளக்குகிறது.

புண் ஆறும்; வடுஆறாது. வள்ளுவரும், தீயினால்பட்ட புண் ஆறும், வடு ஆறாது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதையே தான், தன் மகள் கெடுக்கப்பட்டதை – இழந்த கற்பை மீண்டும் பெறமுடியாது என்பதை இந்த அழகிய உவமை மூலம் விளக்குவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

தம்பாப்பிள்ளை மனைவியை அடித்துக் கொன்றுவிட்டு காவலர்களுக்குத் தெரியாமல் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யும் பொழுது, திடீரென்று “வெண்ணெய் திரளும் பொழுது தாழி உடைந்தாற்போல” போலீஸ் வாகனம் வந்தது என்று ஓர் உவமை மூலம் ஆசிரியர் அந்தக் காட்சியைக் குறிப்பிடுகிறார். இதுபோன்று சில உவமைகளே இந்த நாவலில் இடம் பெற்றுள்ளன.

- உருவகம்

ஆசிரியர் உவமைகளைக் கையாண்டிருப்பது போல உருவகங்களையும் எடுத்தாண்டுள்ளார். பூக்கண்டர் “இந்த இரணியனுக்கு இப்படி ஒரு தெய்வப்பிறவி பொஞ்சாதியாக வந்தாளே! என்று பல தடவை வாய்திறந்து சொல்வதுண்டு. தீய குணம் படைத்த தம்பாப்பிள்ளைக்கு நல்லகுணம் படைத்த வெள்ளச்சியம்மாள் மனைவியாக வந்து மாட்டிக் கொண்டதையும், தம்பாப்பிள்ளையை இரணியனாகவும் உருவகித்துள்ளார். இதே போன்று ஒருசில உருவகங்கள் இந்த நாவலில் இடம் பெற்றுள்ளன.

## 4.6 தொகுப்புரை

சமூக அமைப்பு முறையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படும் வரை சீர்கேடுகள் மனித இனத்தைச் சூழ்ந்து கொண்டேயிருக்கும். அந்த வகையில் டானியல் நாவலில் சாதிமறுப்பு, ஆதிக்க எதிர்ப்பு, மனித நேயம் ஆகிய பண்புக் கூறுகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தை அடைவதற்கான முயற்சிகளின் ஆயுதங்களில் ஒன்றாக இலக்கியம் இருக்க வேண்டும் என்ற நோக்குடன் இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

பாடம் - 5

# P10145 பொன்னீலனின் புதினங்கள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ் நாவல் இலக்கியத்தில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றவர் பொன்னீலன். சமூக வளர்ச்சிக்கான இலக்கியத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சிறந்த எழுத்தாளர்களுள் இவரும் ஒருவர். இந்தப் பாடம் பொன்னீலனை அறிமுகம் செய்து அவர் எழுதிய புதினங்கள் வழி வெளிப்படும் அவருடைய சமுதாயப் பார்வை, பாத்திரப் படைப்பு, நடைத்திறன் ஆகியவற்றை விளக்குகிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படிப்பதால் பின்வரும் பயன்களைப் பெறலாம்.

- பொன்னீலனின் புதினங்கள் மூலம் மானுடப்பரப்பு முழுவதையும் அணைத்துக் கொள்கிற மனிதநேயப் பண்பினைக் காணமுடிகிறது.
- இந்திய விடுதலைக்குப்பின் எழுதப்பட்ட இவருடைய நாவல்கள் பெரும்பான்மையும் மார்க்சீய கோணத்தில் எழுதப்பட்டுள்ளதை அறிவீர்கள்.
- குடும்பம், சமுதாயம் பற்றிப் பொன்னீலனின் மதிப்பீட்டை அறியலாம்.

# பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை

5.1 பொன்னீலன்

5.2 புதிய மொட்டுகள்

5.3 கதைமாந்தர்

தன் மதிப்பீடு : வினாக்கள்- I

5.4 சமுதாயச் சிந்தனைகள்

5.5 நாவலில் கையாளும் உத்திகள்

5.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 5.0 பாட முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் கருத்துச் செறிவும், சிறந்த நடையும் கொண்ட நாவல்களின் வரிசையில் இடம் பெற்ற அரிய நாவல் புதிய மொட்டுகள். சமதர்ம சமுதாயத்தைக் காணவிழையும் பொன்னீலனின் புதிய மொட்டுகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளும், உத்தி முறைகளும் இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

# 5.1 பொன்னீலன்



தற்பொழுது வாழ்ந்துவரும் எழுத்தாளர்களுள் இலக்கியத்தரமான படைப்புகளைப் படைப்பவர் பொன்னீலன். பொன்னீலனின் இயற்பெயர் கண்டேஸ்வர பக்தவத்சலன். கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் அருகேயுள்ள மணிகட்டிப் பொட்டல் என்ற கிராமத்தில் 1940-ஆம் ஆண்டு டிசம்பர் 15-ஆம் நாள் பிறந்தார். இவர் பெற்றோர், சிவ. பொன்னீலவடிவு, அழகிய நாயகி அம்மாள். இவருடைய தாயார் தன் முதுமைக்காலத்தில் எழுதிய கவலை என்னும் நாவல் மிகவும் புகழ்ப் பெற்றது.

எம்.ஏ., எம்.எட்., பட்டங்களைப் பெற்ற இவர் ஆசிரியர், தலைமை ஆசிரியர், மாவட்டக் கல்வி அலுவலர், கல்வித்துறை உதவி இயக்குநர், முதன்மைக் கல்வி அலுவலர் எனப் படிப்படியாகப் பணி உயர்வு பெற்று முப்பத்தேழு ஆண்டுகள் கல்விப்பணியாற்றியுள்ளார். 1967-ஆம் ஆண்டு உமாதேவியைத் திருமணம் செய்து கொண்டார். கவிதை, சிறுகதை, நாவல், வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு என பல்வேறு இலக்கியத்தளங்களிலும் தடம் பதித்திருக்கிறார்.

- பரிசுகள்

சமுதாயத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட பொன்னீலனுக்குக் கிடைத்த பரிசுகள் பின்வருமாறு:

கரிசல் – சிறந்த நாவலுக்கான தமிழக அரசுப் பரிசு (1975)
புதிய தரிசனங்கள் – சாகித்ய அகாதெமி விருது (1994)

## 5.1.1 பொன்னீலனின் படைப்புகள்

பொன்னீலனின் புதினங்களைப் பற்றி அறியும் முன்னர் அவரது படைப்பு சார்பான வாழ்வை அறிந்து கொள்வது மிக இன்றியமையாதது. நாவல்களோடு,

சிறுகதைகள், கவிதைகள், வாழ்க்கை வரலாறுகள், தொகுப்பு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், விமர்சன நூல்கள் ஆகியவற்றையும் எழுதியுள்ளார். மேலும் பயணநூல் ஒன்றையும், இருநூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும், எழுதியுள்ளார். இவருடைய படைப்புகள் பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதில் இருந்து இவருடைய இலக்கியத்தரத்தை அறியலாம்.



குன்றக்குடி அடிகளார்

இவர் கவிதை, சிறுகதை, நாவல் என பலதுறைகளில் தன் பங்களிப்பைச் செய்திருந்தாலும் நாவல் எழுதுவதில் தான் பொன்னீலனுக்கு மிகுந்த விருப்பம் என்று அவரே நேர்காணலில் கூறியிருக்கிறார். இவருடைய கரிசல், கொள்ளைக்காரர்கள், புதிய மொட்டுகள் போன்ற நாவல்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி என்ற வாழ்க்கை வரலாற்று நூலும் சில பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாக வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பொன்னீலனின் நாவல்கள் அனைத்தும் விடுதலைக்குப் பின்பு எழுதப்பட்டவை. இவருடைய நாவல்கள் பெரும்பான்மையும் மார்க்சீயக் கோணத்தில் எழுதப்பட்டவை.

1976-ஆம் ஆண்டு பொன்னீலன் எழுதிய முதல் நாவல் கரிசல் என்பதாகும். இந்நாவல் முழுமையும் மார்க்சீய நோக்கில் எழுதப்பட்டது. இந்நாவலைத் தொடர்ந்து, கொள்ளைக்காரர்கள், ஊற்றில் மலர்ந்தது, தேடல், புதிய தரிசனங்கள், புதிய மொட்டுகள், மறுபக்கம் ஆகிய நாவல்களை எழுதியுள்ளார்.

## 5.2 புதிய மொட்டுகள்

புதிய மொட்டுகள் என்ற புதினத்தின் கதைக்கரு, கதாபாத்திரங்கள் கதைப்பின்னல், கதைச்சுருக்கம், சமுதாயச் சிந்தனைகள் ஆகியவற்றோடு, இந்நாவலில் கையாளும் உத்திமுறைகளைப் பற்றியும் இங்கு விரிவாகக் காணலாம்.

- கதைக்கரு

மூடநம்பிக்கைகளும், அடிமைத்தனங்களும் மிகுந்த ஒரு கிராம சமுதாயத்தை எதிர்த்து ஒரு தனிமனிதன் போராடுகின்றான். அப்போது சமுதாயம் அவனை எவ்வித இன்னல்களுக்கெல்லாம் ஆளாக்குகின்றது என்பதைக் கருவாகக் கொண்டு இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது.

புதிய மொட்டுகளின் கதைத்தலைவன் மனித சமத்துவ உரிமை, அடிப்படை வாழ்க்கை உரிமை, கல்வி உரிமை, தொழிலாளர் உரிமை, சாதி எதிர்ப்பு, உழைப்பவர் மேம்பாட்டு உரிமை, பெண் உரிமை, விதவை மறுவாழ்வு உரிமை இவற்றிற்காகச் சமுதாயத்தை எதிர்த்துப் போராடுகின்றான்.

- கதை மாந்தர்கள்

இந்நாவலின் கதை மாந்தர்கள் சுதந்திரராஜன் என்ற எசக்கிமாடன், தங்கரளி, பாலையா, பாக்கியராஜ், பெருமாள் பிள்ளை, தையல்காரர், வெற்றிப் பெருமாள், ஆடும்பெருமாள், டி.எஸ். பொன்னம்பெருமாள், நொண்டிச்சிங்காரம் பகத்சிங், ரசூல், துரைசாமி, முதலாளி, வடிவு, முதலாளிமகன், தங்கப்பழம், தொரப்பழம், சுப்பையா போன்றவர்களாவர். இவர்களைத் தவிர, பிச்சிப்பூ, சுதந்திரராஜனின் தாய், தம்பி, தங்கை, பள்ளிக்கூடத்தின் முதல்வர், சுப்பையாவின் மனைவி, தங்கரளியின் சிற்றப்பன், கோயில் பூசாரி, காவலதிகாரி போன்ற பாத்திரங்களும் ஓரிரு இடங்களில் வருகின்றனர்.

- கதைப்பின்னல்

புதிய மொட்டுகள் நாவலில் கதைத் தலைவனாகச் சுதந்திரராஜன் படைக்கப்பட்டுள்ளான். இவனைச் சுற்றியே கதை பின்னப்பட்டுள்ளது. இந்தப் புதினத்தின் வழி பொருளாதாரத்தை முதன்மையாகக் கொண்டு, மனித உரிமைகள், சாதி அதிகார வர்க்கம், அரசியல், சட்டம், காவல், கல்வி முதலியன எவ்வாறு மக்களை ஒடுக்குகின்றன என்பதை மிகத்தெளிவாகப் பொன்னீலன் எடுத்துக்காட்டியுள்ளார். பொருளாதாரமே தனிமனிதன் மற்றும் சமூகத்தின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. காவல் துறையினர் மனித உரிமை மீறல்களைச் செய்கின்றனர். இவ்வாறு கதைப்பின்னல் அமைந்துள்ளது.

### 5.2.1 கதைச்சுருக்கம்

சுதந்திரராஜனின் சமாதியைக் காட்டுவதற்கு அவனுடைய நண்பன் துரைசாமி, ரசூல் என்பவரை அழைத்துக்கொண்டு தன்னுடைய கிராமத்திற்குச் சென்றான். அங்கு அமைக்கப்பட்டிருக்கும் அவனுடைய சமாதியைக் காட்டி, அவன் சமாதி முன்பு நடக்கும் நிகழ்ச்சியையும், சுதந்திரராஜனின் வரலாற்றையும் தன்னுடைய வாழ்க்கை அனுபவத்தோடு சேர்த்து ரசூலிடம் கூறினான்.

- சுதந்திரராஜனின் நினைவு நாள்

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரராஜனின் நினைவு நாளைக் கிராமத்து மக்கள் கொண்டாடுவர். அவனுடைய நண்பர்கள் அவன் சமாதியைச் சுத்தம் செய்துவிட்டு சென்று விடுவர். மாலையில் சமாதியில் அவனுடைய படத்தை வைத்து மலர்களால் அலங்கரிப்பர். பின்பு நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கூடிவிடுவர். சுதந்திரராஜனுக்குப்பிடித்த 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்ற பாரதியார் பாடலை அவன் நண்பன் நொண்டிச் சிங்காரம் பாடுவான். கூட்டத்தில் ஒருவர் சுதந்திரராஜனைப் பற்றிப் பேசுவார். பின்பு கூட்டம் முடிந்ததும், சுதந்திரராஜன் மனைவி தங்கரளி எல்லோரையும் தன் வீட்டுக்கு அழைத்துப் போய்ச் சுக்கு நீர் கொடுப்பாள். அவர்கள் எங்கிருந்தாலும் என்ன வேலை செய்தாலும் அன்றைய தினம் ஒன்று கூடி விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

- சுதந்திரராஜனின் நட்பும் நல்லெண்ணமும்

துரைசாமியின் தந்தை பக்கத்து ஊரைச் சார்ந்தவர். வரிபாக்கி செலுத்தாததால் அவருடைய குடும்பத்தை ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கின்றனர். அதனால் சுதந்திரராஜனின் ஊருக்கு அவர்கள் வந்து சேர்கின்றனர். வந்த அன்றிலிருந்து இருவரும் நண்பர்கள் ஆனார்கள். துரைசாமியும், சுதந்திரராஜனும் ஒன்றாகப் பள்ளிக் கூடம் சென்றனர். அப்போது சுதந்திரராஜனின் இயற்பெயர் எசக்கிமாடன். அவன் நன்றாகப் படித்தான். குறும்புகளும் செய்தான். பாடம் படிக்காமல் வந்த முதலாளி மகனை ஆசிரியர் அடிக்காமல் தன்னை மட்டும் அடித்ததற்குக் காரணமென்ன? என்று கேட்டான். சலவைத் தொழிலாளியை ஊர்க்காரர்கள் இழிவாகப் பேசுவதைக் கண்டு எதிர்த்தான். தான் மட்டும் மரியாதைக் கொடுத்துப் பேசினான். மதிப்பும் மரியாதையும் மனிதர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே அவன் எண்ணம். தனக்குப் பிடித்ததை நிறைவேற்றினான். அதைப்போலவே தனக்குப் பிடிக்காத செயல்களைத் தீவிரமாக எதிர்த்தான்.

- ஆசிரியரும் பெயர் மாற்றமும்

 

பெருமாள் பிள்ளை என்ற ஆசிரியர், புதிதாக மாற்றலாகி பள்ளிக்கூடத்திற்கு வந்தார். அவர் தேசப்பற்றும், விடுதலை வேட்கையும் உடையவர். அவரிடம் சுதந்திரராஜன் அதிக அன்பும் மரியாதையும் கொண்டான். அவர் காந்தியைப் பற்றியும், நேருவைப் பற்றியும், நாட்டு விடுதலை பற்றியும் அடிக்கடி கூறுவார். ஒருநாள் பெருமாள் பிள்ளை ஆசிரியர் இரவு ஏழு மணிக்குப் பள்ளிக்கூடத்திற்கு வரச்சொன்னார். இருவரும் சந்தித்தனர். ஆசிரியர், நம் நாடு விடுதலை அடையப்போகிறது. நாளை இரவு பன்னிரண்டு மணிக்கு ஜவஹர்லால் நேரு தேசியக்கொடி ஏற்றி வைப்பார். நாடு முழுவதும் கொண்டாடுவர் என்று கூறினார். அப்போது சுதந்திரராஜன் நாமும் கொண்டாடுவோமா? என்று கேட்டான். அதற்கு ஆசிரியர், தான் ஊருக்குச் சென்று விடுவதாகவும், நீங்கள் கொடியேற்றிக் கொண்டாடுங்கள் என்று கூறிவிட்டு, “டேய் எசக்கிமாடா, இனிமேல் உன் பெயர் சுதந்திரராஜன்; உன் பெயரை மாற்றிவிடு” என்றார். அன்றிலிருந்து அவன் பெயர் ‘சுதந்திரராஜன்’ என்று ஆனது.

- விடுதலை உணர்வும் தண்டனையும்

மூன்றாம் நாள் சுதந்திரராஜனும், அவனுடைய நண்பர்களும் சேர்ந்து சப்பரம் செய்து அதில் காந்திப்படம் வைத்து ஊர்வலம் வந்தனர். சுதந்திரத்துக்கு ஜே, இந்தியாவுக்கு ஜே என்று கோஷம் போட்டனர். முதலாளி கேள்விப்பட்டு ஓடிவந்து காந்திப்படத்தைப் பிய்த்துப் போட்டார். அவர்களைத் தடியால் அடித்தார். சுதந்திரராஜனின் தந்தை ஓடி வந்து மகனைக் காப்பாற்றி விட்டு, முதலாளியைக் கீழே தள்ளி விட்டார். அதனால் அன்று மாலை ஊர்க்கூட்டம் கூடி அவருக்கு இருபத்தோரு தேங்காய் கோயிலில் உடைக்க வேண்டும் என அபராதம் விதித்தனர். சுதந்திரராஜனுக்கு மொட்டையடித்து கரும்புள்ளி, செம்புள்ளி குத்திக் கழுதைமீது ஊர்வலம் வரச்செய்ய வேண்டுமென்று கூட்டத்தில் முடிவு எடுத்தனர். இதனால் சுதந்திரராஜன் ஊரைவிட்டே ஓடிவிட்டான்.

- மீண்டும் ஊர் வருகையும் புரட்சியும்

ஊரைவிட்டு ஓடிய சுதந்திரராஜன் காட்டில் அலைந்து திரிந்து வேறு ஊருக்குச் சென்று வேலை செய்து விட்டு, இறுதியாகத் தக்கலை என்ற ஊரை அடைந்தான். அவ்வூரிலிருந்த தையல்காரரிடம் காசா போடும் வேலையில் அமர்ந்தான். அந்தத் தையல்காரர் அவனுக்கு உலக அறிவைப்பற்றியும், புத்தகம் படிப்பது பற்றியும் சொல்லிக் கொடுத்தார். நாட்டு நடப்பை அறிந்த சுதந்திரராஜன் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சொந்த ஊருக்குத் திரும்பி அங்குத் தையல்கடை வைத்தான். தன் தம்பிக்கு மளிகைக்கடை வைத்துக் கொடுத்தான். மற்ற நண்பர்கள் எல்லோரும் ஆளுக்கொரு வேலையில் சேர்ந்திருந்தனர். மாலைப்பொழுதில் தையல்கடையில் பழைய நண்பர்கள் எல்லோரும் ஒன்று கூடிப்பேசினர். சுதந்திரராஜன் மூடநம்பிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தான். பெரியார், அண்ணாதுரை, பாரதியார், பாரதிதாசன் புத்தகங்களையும், பகவத்கீதை போன்ற நூல்களையும் கற்ற சுதந்திரராஜன், அவ்வூர் முதலாளி, கோயில் பணத்தைக் கொள்ளையடிப்பதைக் கண்டு பிடித்து மக்களுக்கு எடுத்துரைத்தான். கோயில் பணத்தை வைத்து மக்களுக்குப் பல நல்ல காரியங்கள் செய்யலாமென்று கூறினான். கடவுள் எதிர்ப்புணர்ச்சி அவனை ஆட்டிப்படைத்தது. அதன்பின்னர் இரண்டு மாதங்கள் கழித்து முதலாளி சுதந்திர தினவிழா கொண்டாடினார். அவ்விழாவிற்குச் சுதந்திரராஜனும் அவனுடய நண்பர்களும் செல்லவில்லை. அதற்குப் பிறகு முதலாளியின் வாழ்க்கையே மாறிவிட்டது. அவருடைய வீட்டில் ஒரு பகுதி ரேஷன் கடையாக மாறியது. ஏழை மக்களின் நிலங்களெல்லாம் முதலாளியின் நிலத்தோடு ஒட்டிக்கொண்டது.

- தேர்தலும் மோதலும்

சுதந்திரராஜனும் அவனுடைய நண்பர்களும் சேர்ந்து ஊரில் நாடகம் நடத்தினர். முதலாளி தூண்டுதலின் பேரில் காவலதிகாரிகள், சுதந்திரராஜனையும் அவனுடைய நண்பர்களையும் பிடித்துச் சிறையில் அடைத்தனர். எனினும் அவர்கள் மீண்டும் வக்கீல் மூலமாக முயன்று நாடகத்தை நடத்தினர். இந்தச் சமயத்தில் ஊரில் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் வந்தது. முதலாளியை எதிர்த்து தேர்தலில் நின்ற சுதந்திரராஜனால் வெற்றி பெற இயலில்லை. பணபலமே வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற முதலாளி, சுதந்திரராஜனுக்கு ஏதாவது ஒரு வகையில் தீங்கு இழைத்துக் கொண்டே இருந்தார்.

- மோதலும் சிறைத் தண்டனையும்

ஊருக்குத் தெற்கில் மாந்தோப்பில் குடியிருந்த வடிவும் அவள் மகள் தங்கரளியும் சுதந்திரராஜனின் உதவியால் அரிசி வியாபாரம் செய்தனர். தங்கரளியை மனதார விரும்பிய சுதந்திரராஜன் அவள் வீட்டிற்கு வந்து பேசிக் கொண்டிருப்பது வழக்கம். அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் பொழுது முதலாளி பத்து ஆட்கேளாடு வந்து அவனை அடித்தார். இவன் மறுநாள் காவல் அதிகாரியிடம் சொல்லி முதலாளியையும் அவர் ஆட்களையும் பிடித்துச் சிறையில் வைத்துவிட்டான். வெளியில் வந்த முதலாளி,

தன்னுடைய மாந்தோப்பில் சுதந்திரராஜன் மாங்காய் திருடியதாகப் பொய்க் குற்றம் சுமத்தி ஆறுமாதம் சிறை தண்டனையை வாங்கிக் கொடுத்தார்.

- விடுதலையும் விவாகமும்

தங்கரளியும் சுதந்திரராஜனும் ஒருவரையொருவர் விரும்புவதையறிந்த முதலாளி, சுதந்திரராஜன் சிறையிலிருக்கும் போதே, பொன்னம்பெருமாள் என்பவருக்குத் தங்கரளியைத் திருமணம் செய்து வைத்தார். தங்கரளி மறுத்த போதும் அதை முதலாளி பொருட்படுத்தவில்லை. தங்கரளியின் கணவனான பொன்னம் பெருமாளுக்கு நான்கு மனைவிகளும் இறந்து விட்டனர். தங்கரளி ஐந்தாவது மனைவி, சிறையிலிருந்து விடுதலையாகி வந்த சுதந்திரராஜன், தன்னுடைய தையல் எந்திரங்களைத் தந்தை விற்றுவிட்டதால், கயிறு முறுக்கும் பட்டறையில் வேலைக்குப் போனான். தங்கரளியின் கணவன் பொன்னம்பெருமாள் திடீரென இறந்தார். தங்கரளியின் வாழ்க்கையைப் பற்றிக் கவலையுற்ற வடிவு பைத்தியமானாள். தாய் செய்த அரிசி வியாபாரத்தைத் தங்கரளி செய்தாள். சுதந்திரராஜன் தங்கரளியை நாகர்கோவிலுக்கு அழைத்துச் சென்று பதிவுத்திருமணம் செய்து கொண்டான். விதவையைத் திருமணம் செய்து கொண்டதால் ஊர்மக்கள் எதிர்த்தனர். ஆனால் அவனுடைய நண்பர்கள் ஆதரவளித்தனர்.

- தொழிலாளர் சங்கமும் முடிவும்

அவன் கயிற்றுத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகத் தொழிற்சங்கம் தொடங்கினான். துரைசாமியும் தொழிற்சங்கத்தில் சேர்ந்தான். தொழிலாளர் போராட்டத்தின் முடிவில் பாதியளவு ஊதிய உயர்வு கிடைத்தது. தொழிலாளர்கள் திருப்தியடைந்தனர். அதன் பின்னர் சுதந்திரராஜன் வட்டார அளவில் ஒரு கயிற்றுத் தொழிலாளர் சங்கத்தைத் தொடங்கினான். அதில் எழுநூற்றிற்கும் மேற்பட்டவர்களைச் சேர்த்தான். ஒரு மாதம் கழித்து இரவில் சுதந்திரராஜனைச் சிலர் அடித்துப் போட்டதில் கைவிரல் முறிந்து போனது. இரண்டு மாதங்கள் மருத்துவமனையில் இருந்து திரும்பி வந்த போது எலும்பும் தோலுமாக இருந்த சுதந்திரராஜன் மீண்டும் உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்து போனான். அவனுடைய நண்பர்களும் வெளியூரிலிருந்த தொழிலாளர்களும் பிணத்தை அடக்கம் செய்தனர்.

- தொண்டும் புகழும்

அந்தப் பகுதியில் யாருக்கும் கிடைக்காத மரியாதை சுதந்திரராஜனுக்குக் கிடைத்தது. அனுதாபக் கூட்டம் நடத்தினார்கள். சுதந்திராஜனின் இறப்புக்குப் பின்னர் அந்தக் கிராமப்புறத்தில் நிலவிய மூடநம்பிக்கைகளும் அச்சமும் இல்லை. பணக்காரன் எதிரில் ஏழை ஒதுங்கி நிற்கவில்லை. கயிறு திரிக்கின்ற தொழிலாளர்கள் அரைவயிற்றுக் கஞ்சியாவது குடிக்கும் நிலை ஏற்பட்டது. சுதந்திரராஜன் சொல்லிக் கொடுத்தும், புத்தகம் கொடுத்தும் படிக்க வைத்த இளைஞர்கள் இன்று நல்ல நிலையில் இருக்கின்றார்கள்.

இதற்கெல்லாம் வித்தாக இருந்தவன் சுதந்திரராஜன்தான். அந்த வட்டாரத்தில் பகுத்தறிவுச் சிந்தனையைப் பயிர் செய்தவன் சுதந்திரராஜன். ஆனால், இதனையெல்லாம் காண சுதந்திரராஜன் இல்லை என்று துரைசாமி, ரசூலிடம் சுதந்திரராஜனின் வாழ்க்கையைப் பற்றிக் கூறினான்.

## 5.3 கதைமாந்தர்

கதைக்கருவிற்கு உயிர் ஊட்டுபவர்கள் கதை மாந்தர்களே ஆவர். நாவலில் காண்பதெல்லாம் கதை மாந்தர் தொடர்புடைய நிகழ்ச்சிகளே ஆகும். ஒரு நாவலில் பல்வேறு பாத்திரங்கள் இடம் பெற்றிருந்தாலும் அவை ஒவ்வொன்றும் ஏனைய பாத்திரங்களினின்றும் வேறுபட்டுத் தனித்து நின்று விளங்க வேண்டும். கதைமாந்தரைத் தலைமை மாந்தர், துணைமாந்தர் என்று இருவகைகளாகப் பிரிக்கலாம். இந்நாவலில் இடம்பெறும் கதைமாந்தர்கள் குறித்து இப்பகுதி விளக்குகிறது.

### 5.3.1 தலைமை மாந்தர்

இந்நாவலின் தலைமை மாந்தராகத் திகழ்பவன் சுதந்திரராஜன்.

- சுதந்திரராஜன்

புதிய மொட்டுகள் நாவலின் கதைத்தலைவன் சுதந்திரராஜன், இவனைச் சுற்றியே கதை பின்னப்பட்டுள்ளது. சமூகத்திற்காக இவன் தன்னை எப்படியெல்லாம் அர்ப்பணித்துக் கொள்கிறான் என்பதை மையமாகக் கொண்டே சுதந்திரராஜன் படைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இளம் பருவத்தே வேறு ஊரிலிருந்து வந்த துரைசாமியுடன் நட்பு கொள்கிறான். ஆகையால் துரைசாமியே சுதந்திரராஜனின் வரலாற்றைக் கூறும் முகமாகச் சுதந்திரராஜன் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

- இளமையும் ஆர்வமும்

விளையும் பயிர் இளமையிலேயே தெரியும் என்பர். அதுபோல் சுதந்திரராஜனின் இளமைக்கால உணர்வுகள் அவனது எதிர்கால இலட்சிய வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டுவதாகப் படைக்கப்பட்டுள்ளது. அவனுக்குப் பெற்றோர் வைத்த பெயர் எசக்கிமாடன். அவன் நன்றாகப் படித்த போதிலும், குறும்புக்காரனாகவும் இருந்தான். அவன் ஆறாம் வகுப்பு படிக்கும் போது வகுப்பு வாத்தியாராக இருந்தவர் பாலையா. அவர் பாடம் நடத்தாமல் உறங்கக்கூடியவர். அதனால், அவருடைய கொண்டையிலே பூவைச்செருகி ஏளனம் செய்கிறான். ஆனால், அவன் புதியதாக வந்த பெருமாள் பிள்ளை ஆசிரியரிடம் முழுமையான சுதந்திர உணர்ச்சியைப் பெற்றான். அவரிடம், பிறநாட்டு சுதந்திர வரலாறு பற்றியும், இந்திய நாட்டின் சுதந்திரம் பற்றியும் மிகுந்த ஆர்வத்துடன் கேட்கிறான். அவனுடைய சுதந்திர உணர்ச்சியைக் கண்டு ஆசிரியர் 'சுதந்திரராஜன்' என்றே பெயர் மாற்றம் செய்கிறார். அவன், தன் நண்பர்களுடன் சுதந்திர தின விழாக் கொண்டாடியதனால் ஊராரின் எதிர்ப்புக்கும், முதலாளியின் எதிர்ப்புக்கும் ஆளாகின்றான். பஞ்சாயத்தார் விதித்த தண்டனையை ஏற்காமல் ஊரைவிட்டே ஓடிவிடுகிறான். ஏனெனில் அந்தத்

தண்டனையை ஏற்றுக்கொண்டால் தான் செய்தது தவறென்று ஆகிவிடும் என்பதனாலேயே இவ்வாறு செய்கிறான். உயர்ந்தசாதி, தாழ்ந்தசாதி என்பது சரியா? தவறா? என்று நண்பர்களோடு விவாதிக்கிறான். அவன் இளமையிலிருந்தே சாதியை வெறுக்கும் ஒருவனாகப் படைக்கப்பட்டுள்ளான். மேலும், தன்மானமும், தன்னம்பிக்கையும் நிறைந்தவனாக அவன் விளங்குகிறான்.

- உழைப்பும் உதவியும்

தன்னுடைய கடமைகளை முழுமையாகச் செய்யும் அவன், பிறரின் உதவியை நாடாமல் தன் உழைப்பினால் இறுதிவரை வாழ்ந்தான். வெளியூரிலிருந்து வந்ததும் தன் தம்பிக்குக் கடை வைத்துக் கொடுப்பதிலிருந்து அவனுடைய குடும்பப் பொறுப்பை உணரலாம். அவன் கல்வியறிவு மூலம் மக்களிடம் விழிப்புணர்வை ஊட்ட முடியும் என்பதைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து, புத்தகம் படிக்கும் பழக்கத்தை மக்களிடம் உண்டாக்கினான். அவன் வடிவு என்ற பெண்ணிற்குப் பண முதலீடு கொடுத்து வியாபாரம் செய்யச் சொல்கிறான். இதிலிருந்து அவன் உள்ளத்திலிருந்த உதவும் மனப்பான்மை வெளிப்படுகிறது.

- சீர்திருத்தமும் செயல்பாடும்

அவன் கோயில் வருமானத்திலிருந்து ஊர்மக்களின் தேவைகளை நிறைவேற்றலாம் என்று புதிய சிந்தனையை முன் வைக்கிறான். அவன் சமூகச் சீர்திருத்த நாடகங்களை நடத்தி மக்களை விழிப்படையச் செய்தான். அவன் நேர்மையும், துணிவும் கொண்டவனாக விளங்கியதோடல்லாமல் சிறந்த தொழிற்சங்க வாதியாகவும் தொழிலாளர் நலம் நாடுபவனாகவும் விளங்கினான்.

### **5.3.2** துணை மாந்தர்

இந்நாவலின் துணைமாந்தர்களுள் தங்கராளி, துரைசாமி, பெருமாள்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

- தங்கரளி

சுதந்திரராஜனின் மனைவி தங்கரளி துணைப் பாத்திரமாக வருகிறாள். அவள் சிறுவயதில் சுதந்திரராஜனின் கடைக்கு வந்து துணிப் பொறுக்குகிறாள். பிறகு ஊரிலுள்ள பெண்களிடமிருந்து அவள் தையல் கடைக்குத் துணி வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறாள். அவள் தையல் கடையைப் பெருக்கிச் சுத்தம் செய்கிறாள். அவள் மீது இரக்கங்கொண்ட சுதந்திரராஜன் அவளுக்குப் பாவாடை, தாவணி வாங்கிக் கொடுக்கிறான். அவள் அதை ஏற்க மறுக்கிறாள். அவள் ஏழ்மையிலும் உள்ள உறுதி கொண்டவளாகவும், தன்மானம் மிக்கவளாகவும் விளங்குகிறாள். முதலாளி கட்டாயப் படுத்தி பொன்னம் பெருமாளுக்குத் தங்கரளியை ஐந்தாவது தாரமாகத் திருமணம் செய்து

வைக்கிறார்.

- துணிச்சலும் புரட்சியும்

அவள் கணவன் இறந்த பிறகு, தவறான நோக்கத்தோடு தன் வீட்டிற்கு வந்த முதலாளி மேல் சாணத்தைக் கரைத்து ஊற்றினாள். இது அவளுடைய அஞ்சா நெஞ்சத்தைக் காட்டுகிறது. கணவன் இறந்தபிறகு தாலி அறுக்காமல் புரட்சி செய்கிறாள். பிறகு தான் விரும்பிய சுதந்திரராஜனைத் திருமணம் செய்து கொண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிறாள். கணவன் கயிற்று வேலைத் தொழிலில் ஈடுபட்டபோது இவளும் துணையாக இருக்கிறாள். அவன் தொடங்கிய தொழிற்சங்கத்தில் இவளும் பல உறுப்பினர்களைச் சேர்த்தாள். இந்நாவலில் தங்கரளி, துணிவுடைய பெண்ணாகவும், சுதந்திரராஜனுக்குப் பொருத்தமான மனைவியாகவும் படைக்கப்பட்டிருக்கிறாள்.

- துரைசாமி

இந்நாவலில் இடம் பெறும் முக்கியமான துணைப் பாத்திரம், தலைமை மாந்தரோடு சிறுவயதிலிருந்தே நெருங்கிப்பழகிய துரைசாமி. அவன் தன் ஊரைவிட்டு, சுதந்திரராஜனின் ஊருக்கு வந்தவன். சுதந்திரராஜனோடு சிறு வயதிலிருந்தே பழகியதால் அவனுடைய சுதந்திர உணர்வுகள் எல்லாம் இவனுக்கும் இருந்தது. அவன் சுதந்திரராஜன்மீது மிகுந்த அன்பு கொண்டவன்; நண்பனுடைய துன்பத்தில் பங்கெடுத்துக் கொண்டான்.

- பெருமாள்பிள்ளை

சுதந்திரராஜன் ஊருக்கு மாற்றலாகி வந்த புதிய ஆசிரியர் பெருமாள் பிள்ளை. தலைமை மாந்தருக்கு மிகுந்த வலிமை சேர்ப்பதாக இப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. இவர் விடுதலை வேட்கையுடைவர். இவர் மாணவர்களிடம் அன்புகாட்டி அவர்களை நல்வழிப்படுத்தினார். இவர் மாலை நேரத்தில் இலக்கிய மன்றம் நடத்தி மாணவர்களுக்குப் பேச்சு, பாட்டு, நாடகமெல்லாம் சொல்லிக் கொடுத்தார். இத்துணைப் பாத்திரம் தலைமை மாந்தர், அவரைச் சுற்றியுள்ள மாந்தர்களின் பண்புகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

- தையல்காரர்

தலைமை மாந்தரே தையல்காரரை, 'தன் ஆசான்' எனப் பெருமையுடன் கூறுமளவிற்கு உயர்ந்த பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார்.

"பெருமா புள்ள சாருக்கு அப்புறம் இந்த டெயிலர் தான் எனக்கு ஆசானா இருந்து படிப்பிச்சார்"

என்று தன் சிந்தனை வளத்திற்கு அடித்தளமிட்டவர் என்று சுதந்திரராஜன் குறிப்பிடுகிறான்.

இப்பாத்திரம் ஓரிடத்தில் வந்தாலும் இந்நாவலுக்கு ஒரு தனித் தன்மையாக அமைந்துள்ளது. தலைமை மாந்தரின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியதில் இப்பாத்திரத்திற்கும் ஓர் இடமுண்டு. இது போன்று இந்நாவலில் பல பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. மாறுபட்ட பாத்திரங்களைக் கொண்ட மனிதர்களைக் காணமுடிகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 5.4 சமுதாயச் சிந்தனைகள்

இந்நாவல் விடுதலைக்கு முன்பும், பின்புமாகிய அக்காலச் சமுதாய வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மேலும், மார்க்சீயக் கருத்துகளைக் கதையின் போக்கோடு இணைத்துக் கூறியுள்ளார் ஆசிரியர். அக்காலக் கிராம மக்களின் நிலை, கல்வி நிலையங்கள், மருத்துவமனை, முதலாளியின் ஆதிக்கம், மூடப்பழக்கம், சாதி ஏற்றத்தாழ்வு, அரசு அதிகாரிகளின் அடக்குமுறை, மனிதநேயம் இல்லாமை, பொதுவுடைமைக் கருத்துகள் ஆகியவற்றை ஒரு சில உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தலாம்.

### 5.4.1 கிராமவாழ்வும் மக்களும்

“நாகரிகமில்லாத இருண்ட பட்டிக்காடு” என்று கூறுமளவுக்குச் சாலை வசதியும், மின்சார வசதியுமில்லாத கிராமம். இந்நாவலின் மக்கள் நாகரிகமடையாத மக்கள் என்பது தெரிகிறது. அவர்கள் உழைப்பை உயிர் மூச்சாகக் கொண்டவர்கள்; மேலும் தம் உழைப்பிற்கே ஊதியத்தைப் பெறாதவர்கள்; முதலாளியின் வயலில் வேலை செய்தனர்; காட்டிற்குச் சென்று முந்திரிப்பழம் சேகரித்தனர்; குடியிருப்பதற்கோ, விவசாயம் செய்வதற்கோ சிறிது கூட சொந்தநிலம் இல்லாதவர்கள்; கிராமத்தில் அம்மன் கோயிலில் கொடை என்று ஏழை மக்களிடம் வரி வசூலித்தனர்; வரிகொடுக்க இயலாத நிலையில் அவர்களுடைய உடைமை பறிக்கப்படுகிறது; நசுக்கப்பட்டனர்; ஊர் முதலாளியை மக்கள் தெய்வமென்றே எண்ணினர்; அதனால் அவர் மீது நம்பிக்கை கொண்ட அப்பாவிகளாக இருந்தனர்; செய்தித்தாள் என்ற ஒன்று இருப்பதே அம்மக்களுக்குத் தெரியவில்லை. மாடசாமி, எசக்கி முதலான சிறு தெய்வங்களை வழிபட்டனர்; ஊரை அவமதிக்கும் வகையில் தவறு செய்தால் தண்டனை விதிக்கப்பட்டது; அம்மக்கள் தேநீராகச் சுக்கு நீரைப்பருகி இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தினர். இத்தகைய சூழலில் வாழும் மக்கள் எவ்வாறு துன்பப்படுகிறார்கள் என்பது இந்நூலில் கூறப்படுகிறது.

கல்வி நிலையங்கள்

இந்நாவலில் கிராமத்துப் பள்ளிகளில் ஆசிரியர் பாடம் நடத்தாமல் தூங்கிவிட்டுச் செல்லும் நிலையை நகைச்சுவை உணர்வோடு ஆசிரியர் சுட்டுகிறார். ஆசிரியர்கள் தவறு செய்கின்ற படிக்காத மாணவர்களைச் சித்திரவதை செய்தனர். மேலும், ஆசிரியர் என்பவர் மாணவர்களைச் சமமாக நடத்த வேண்டும். அப்படியில்லாமல் முதலாளி மகனை மட்டும் ஆசிரியர் அடிக்காமல் இருப்பது மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துகிறது என்பதை ஆசிரியர் காட்டுகிறார்.

மருத்துவமனை

"இந்த அரசாங்க ஆஸ்பத்திரிகளைப்போல கேடுகட்ட எடம் ஒலகத்தில இல்ல"

இதன் மூலம் அரசாங்க மருத்துவமனைகளின் சுகாதாரமற்ற நிலையையும், அங்குள்ள ஊழியர்கள் லஞ்சம் வாங்கிக்கொண்டு மருத்துவம் பார்ப்பதையும் எடுத்துரைக்கிறார் நாவலாசிரியர் பொன்னீலன்.

**5.4.2** சுரண்டும் வர்க்கம்

இந்நாவலில் சமுதாயத்தைச் சுரண்டுபவர்களாகச் சுயநலம் கொண்ட முதலாளிகள், சாதிவெறியர், அரசு அதிகாரிகள், மனச்சாட்சியில்லாதோர் உள்ளனர் என்பதை ஆசிரியர் பல நிகழ்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

- முதலாளிகள்

மக்களுக்குச் சுதந்திர உணர்வு இருக்கக்கூடாது என்று முதலாளிகள் கருதினர். மக்களின் ஏழ்மை நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அவர்களுடைய உடைமைகளைப் பறித்தது முதலாளி வர்க்கம். அவர்களுக்குக் கடன் கொடுத்து மூன்று மடங்கு வட்டி வாங்கினார் முதலாளி. வட்டிப்பணம் கொடுக்க முடியாதவர்களின் உடைமை பறிக்கப்பட்டது. தேர்தலில் தன்னை எதிர்த்து யாரும் நிற்கக் கூடாது என்று எண்ணிய முதலாளி மக்களுக்கு உணவு, பணம் கொடுத்து வெற்றி பெற்ற அவல நிலையைக் காணமுடிகிறது. முதலாளிவர்க்கம் தொழிலாள வர்க்கத்தை எவ்வாறு சுரண்டுகிறது. என்பது இந்நாவலில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

- சாதி வெறி

சாதிகளை ஒழிப்பதற்கு அரசு பல்வேறு திட்டங்களை எடுத்தாலும் அது முற்றிலும் ஒழியவில்லை. இதனை ஆசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஊரில், சலவைத் தொழிலாளியையும், வயல் வேலை செய்யும் உழவர்களையும், குலம் கருதியும், தொழில் கருதியும் ஊர் மக்கள் மரியாதைக் குறைவாக நடத்துகின்றனர். இதனை,

"இந்த மிக்கேலுக்க தகப்பனாரை அவன்தான் மொத மொதல்ல வாங்கோ போங்கோன்று கூப்பிட்டான். ஊர்ல ஒரே எதிர்ப்பு"

என்று அன்றைய சமூகநிலையை விளக்கிய பொன்னீலன் சாதிகள் இல்லாத சமூகத்தைப் படைக்க விரும்புகிறார். சாதி என்பது பிறப்பினாலோ, செய்யுந் தொழிலாலோ வருவதில்லை. எனவே, சாதி ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்று எடுத்துரைக்கிறார் பொன்னீலன்.

- அரசு அதிகாரிகள்

காவலதிகாரிகளின் பணி மக்களுக்காக என்பது மாறி

ஆளுங்கட்சியினருக்காக என்று ஆகிவிட்டது, இந்நிலையை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். விசாரணை நடத்த வந்த காவலதிகாரிகள் பள்ளியின் முதல்வரிடம் மூட்டை மூட்டையாய்ப் பழவகைகளைப் பெற்றுக் கொண்டு விசாரணை நடத்தாமல் செல்கிறார்கள். இது அதிகாரிகளின் ‘மாமூல்’ எனும் இலஞ்சம் வாங்கும் வாழ்க்கையைக் காட்டுகிறது. நாடகம் நடத்திய சுதந்திரராஜனையும் அவனுடைய நண்பர்களையும் காவலர்கள் அடித்தனர்.

“கம்யூனிஸ்ட் பிரச்சாரமா பண்ணுறீங்க? ராஸ்கல்,
யார்கிட்ட அனுமதி வாங்கியிருக்கீங்க”

என்று இன்ஸ்பெக்டர் கூச்சலிட்டார். சில நேர்மையான அதிகாரிகளும் முதலாளி போன்றவரின் ஆதிக்கத்தால் தம் கொள்கையை விட்டுவிடுகின்றனர் என்பதையும் இந்நாவலில் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

- மனச்சாட்சி இல்லாதோர்

உலகில் நிகழ்கின்ற அனைத்துப் பூசல்களுக்கும் மனித நேயம் இல்லாமையே காரணமாகின்றது. சுதந்திரராஜன் வரிப்பணம் கட்டாததால், அவன் இறந்த பிறகும்கூடப் பணத்தைக் கொடுத்த பின்னரே பிணத்தைத் தூக்க வேண்டுமென்று ஊர் மக்கள் ஒன்று கூடி நின்றனர்.

“ஒங்களுக்கும் எங்களுக்கும் பாடுபட்ட

ஒருத்தன் நமக்கெல்லாம் சொந்தக்காரன்

செத்துக்கெடக்கான் ! நீங்களும் நானுமால

அவனப் பொதைக்க விடமாட்டேங்கிறது !

என்று நெஞ்சம் குமுறும் ஒரு தொழிலாளி மூலம் மனிதநேயமற்ற மனசாட்சி இல்லாத விலங்குகளைப் போன்ற மக்களை ஆசிரியர் இந்நாவலில் எடுத்துக்காட்டுகிறார்.

## 5.5 நாவலில் கையாளும் உத்திகள்

நாவலில் கையாளும் உத்திகளால் நாவல் தனிச் சிறப்பைப் பெறுகிறது. உத்தி மூலம் ஆசிரியரின் மொழித்திறனும் எழுத்தாற்றலும் வெளிப்படுவதோடு அல்லாமல் கலைப்படைப்பும் சிறப்புறுகின்றது. நாவலின் தலைப்பு, நனவோடை உத்தி, கதைக்குள்கதை, எழுத்துநடை, வருணனை, சொல்லாட்சி, உவமை, உருவகம் ஆகிய உத்திகளை ஆசிரியர் கையாண்டுள்ளார். அவற்றை இனிக் காண்போம்.

### 5.5.1 தலைப்பும் நனவோடை உத்தியும்




நாவலின் தலைப்பான புதிய மொட்டுகள் கதைக்கருவை உருவக முறையில் குறிப்பாகப் புலப்படுத்துகிறது. மூடப்பழக்க வழக்கங்கள் வேரோடிப்போன சமுதாயத்தின் புண்ணுக்கு மருந்திட்டு, குணப்படுத்தி, புதிய சமுதாயத்தை உருவாக்கிட புதிய மொட்டுகள் பூக்கத் தொடங்கி விட்டன என்ற கருத்தில் ஆசிரியர் நாவலுக்குத் தலைப்பை வைத்துள்ளார். கதை மாந்தர்களின் பண்பு நலன்களையொட்டி அவர்களுக்குப் பெயரிட்டு, குறிப்பால் உணர்த்துவதை இந்நாவலில் மேற்கொண்டுள்ளார். சுதந்திரராஜன், பெயரில் மட்டும் சுதந்திரராஜனாக இல்லாமல் விடுதலை வேட்கை கொண்டவனாக விளங்குகிறான். அவன் அறியாமையில் மூழ்கிக் கிடந்த மக்களை விழிப்படையச் செய்தான். அந்தக் கிராமத்தில் மக்கள் அறியாமை நீங்கிப் புதிய மொட்டுகளாய் சுதந்திரராஜன் வழியாக மாறினர் என்பதைக் கதைத் தலைப்பு குறிப்பாகப் புலப்படுத்துகிறது.

- நனவோடை உத்தி

இந்நாவல் கடந்த கால நிகழ்ச்சிகளை ஒரு பாத்திரத்தின் வழி நினைவு கூர்வதாய் அமைந்துள்ளது. இதனைத் திருப்புக் காட்சிகள் (Flash Backs) என்று கூறுவர். படைப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் பழங்கதைப் பற்றிய குறிப்பு தேவைப்படுகிறது என்ற சூழலில் இவ்வுத்தி முறை புகுத்தப்படுகிறது. இந்நாவலில் ரசூல் என்பவரைத் துரைசாமி, சுதந்திரராஜனின் சமாதியைக் காட்டுவதற்கு அழைத்துச் செல்கிறான். அப்போது சுதந்திரராஜனின் வரலாற்றைக் கூறுமுகமாய்ப் புதினத்தின்

போக்கு அமைந்துள்ளது.

**5.5.2** எழுத்து நடை

நாவல் இலக்கிய உலகில் பொன்னீலனின் நடை தனித்தன்மை வாய்ந்தது. ஏனெனில் அவரது நாவல்கள் கிராமத்து மக்களின் வாழ்க்கையையே படம் பிடித்துக் காட்டுகிறது. அவ்வகையில் இந்நாவலில் நாகர்கோயிலைச் சுற்றியுள்ள கிராமமக்களின் பேச்சு வழக்குச் சொற்களைக் காண முடிகிறது.

“லே, ஒன் பேரென்னல” ன்று கேட்டான்
“தொரச்சாமில”ன்னு அதே அகங்காரத்தோடே நான் பதில்
சொன்னேன். “இந்த ஊருக்கு ஏம்ல வாறீக” ன்னு பதிலுக்கு
நானும் கேட்டேன், “சடுகுடுவெளையாடத்
தெரியுமால?“ன்னான், “தெரியுமிலே”ன்னேன். “சரிவா
வெளயாடப் போவாம்”னு என் கையைப் பிடிச்சு இழுத்தான்”

கிராமத்துச் சிறுவர்கள் பேசுவதை அப்படியே கையாண்டிருப்பது அவருடைய எழுத்தாற்றலை வெளிப்படுத்துகிறது. சில இடங்களில் படிக்காத பாமரமக்கள் பேசுகின்ற கொச்சைத் தமிழும் இடம்பெற்றுள்ளது.

**5.5.3** வர்ணனை

நாவலில் இடம் பெறும் வர்ணனைகள் கதையோடு பொருந்தியதாக அமைந்திருக்க வேண்டும், அவ்வகையில் இந்நாவலில்

“பதினஞ்சி வயசில சுதந்திரராஜனைப் பாத்தீங்கன்னாலும்
இதே மாதிரித்தான், நீண்ட கையும் காலுமாக, நீண்ட
மொகமும், அதில் கூர்மையான வட்டக் கண்ணும்,
வளையாத மொரட்டுக் கருப்பு ரோமமும் நெறஞ்ச பெரிய
தலையுமா, செவியுங்கூட இதே போலத்தான்
அவனுக்கும் வெடச்சி நிக்கும்”

என்று கதைத்தலைவன் சுதந்திரராஜனின் மகன் பகத்சிங் வர்ணிக்கப்படுகிறான்.

மற்றொரு இடத்தில், “அது பூக்கத் தொடங்கி நாலுவருஷம் ஆகுது, ஓரொரு வருடமும் இந்த நாளுக்கு அது... பூவா நெறஞ்சிருக்கும், பாருங்க, எல நிறைஞ்ச ஒவ்வொரு கொண்டையிலேயும் வெள்ளை வெளேர்னு பூச்சரஞ்சூடி, அது என்னமா காத்தில கொழையுது” இவ்வாறு இயற்கையை வர்ணிக்கிறார்.

**5.5.4** சொல்லாட்சி

இந்நாவலில் சுதந்திரராஜனும், அவனுடைய நண்பர்களும் சிறு வயதில் நாடகம் நடத்தியபோது நடந்த ஒரு நிகழ்ச்சியை நகைச்சுவையோடு குறிப்பிட்டுள்ளார்.

"நாடகத்துக்கு டிக்கட் உண்டு, பாக்க வாறவ
னெல்லாம் ரெண்டு ரெண்டு முந்திரிக்கொட்ட, அல்லது
ரெண்டு ரெண்டு செரட்ட கொண்டாந்து குடுக்கணும். ஒரு
தடவ தெக்குத்தெரு பகவதி, நாடகம் பாக்குற ஆசையில,
வீட்ல அவங்க அம்மா பாதி துருவிட்டு வச்சிருந்த
தேங்காயத் தூக்கிக் கொண்டாந்து குடுத்துட்டான். அவங்க
அம்மா கொளம்புக்குத் தேடியிருக்காங்க. காணல்ல. நேரே
கொள்ளிக் கட்டையைத் தூக்கிட்டு நாடக அரங்குக்கு
வந்துட்டாங்க. பகவதி முதுகுவீங்குது. அழுதுகிட்டே நான்
குடுத்த தேங்காய்ச் செரட்டையத் தாங்கண்ணான். ஆனா
அந்தச் செரட்டைய எங்கும் காணல. விசாரிச்சா, டிக்கட்
வாங்கின பயலுக செரட்டைய ஒடச்சி தேங்காயத் தின்னு
போட்டானுக, அந்த அம்மா திட்டுது, திட்டுது மானங்கெட்ட
திட்டு. நாங்க காதப்பொத்திக்கிட்டு ஓடினோம்". இது போன்ற
சொல்லாட்சி அமைந்துள்ளது.

சுதந்திரராஜன் ஆறு ஆண்டுகள் கழித்து தன்னுடைய ஊருக்கு வந்தான். தந்தைக்கு வேட்டியும் சட்டையும் வாங்கி வந்தான். அதனை,

"ஹோ, மகன் கொண்டு வந்த வேட்டியக்கட்டி கிட்டுத்
துண்டத் தலையில சுத்திக்கிட்ட அவன் தகப்பனாரு
ஒருவாரமா ஆகாயத்தப்பாத்து என்ன நட நடந்தாரு!"

என்று ஒரு தந்தையின் பெருமித உணர்வைச் சித்தரித்துள்ளார்.

மேலும்,

"தொரச்சாமி தங்கப்பனைப் பணம் கொன்னு
போட்டுதேன்னு சத்தமில்லாத அழு கொரல்ல சொன்னான்.
எனக்கு தேகம் முழுதும் செவந்திட்டுது. ஆன்னு லேசா
அலறிட்டேன்"

தங்கப்பன் இறந்த செய்தியைக் கேட்ட சுதந்திரராஜன் அளவில்லாத துன்பத்தை அடைந்தான் என்பதை இச்சொற்றொடரால் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**5.5.5** உவமை

பொன்னீலன் கையாண்டுள்ள உவமைகளில் சிலவற்றை இங்குக் காணலாம். அவர் காட்டில் உள்ள மரங்களைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.



“எங்ககாடு அழகாருக்கில்லா? மா மரங்களும், பலா
மரங்களும், முந்திரி மரங்களும் காய்களும் பழங்களுமா
அலக்கரித்த தேர்களப் போல அழகழகா நிக்குதில்லா?
அதா தெரியுதே சதுரமா ஒரு சிறிய கருங்கல் கட்டுமானம்,
அதுக்குள்ளதான் எங்க சுதந்திரராஜன் தூங்கறான்.”

மேலே உள்ள வருணனையில், சுதந்திரராஜனை அடக்கம் செய்த இடத்திலுள்ள மரங்கள், அலங்கரிக்கப்பட்ட தேர்களைப்போல உள்ளதாக உவமை கூறி ஆசிரியர் விளக்குகிறார்.

ஊர் மக்களின் நிலங்களை முதலாளி ஏமாற்றி வாங்கிக் கொண்டதை,



“காந்தத்தில போயி ஒட்டிக்கிற இரும்புத் துண்டுகளப்
போல, பாவப்பட்டவனுகளுக துண்டு துக்காணி
நெலங்களெல்லாம் எங்க மொதலாளி நெலங்களோட
ஒண்ணொண்ணாப் போயி ஒட்டிக்கிடுச்சி !”

என்கிறார். சுதந்திரராஜன் சுதந்திர தினவிழாக் கொண்டாடிய போது ஊர் முதலாளி எதிர்க்க வந்ததை,



“சூரியன் மேகத்தில மறஞ்சது போல இருந்தது. ஊர் மொதலாளி எங்கள நோக்கி தத்தக்க புத்தக்கன்னு ஓடியே வாறாரு”

என்று நகையுணர்வு தோன்ற ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் நிலாவினைத் தங்கத் தட்டோடு ஒப்பிடுகிறார்.



“கெழக்கே நிலா ஒரு தங்கத் தட்டம் போல மேல எழும்புது”

இவ்வாறு இந்நாவலில் பல இடங்களில் உவமை நன்கு பயின்று வந்துள்ளது.

**5.5.6** உருவகம்

ஆசிரியர் உவமைகளைக் கையாண்டிருப்பது போல உருவகங்களையும் எடுத்தாண்டுள்ளார். தங்கரளியின் சிரிப்பைப் பூஞ்சிரிப்பு என்று ஆசிரியர் உருவகப்படுத்தியுள்ளார்.



“மொகத்தில ஒரு சாந்தமான பூஞ்சிரிப்பு படரும் பங்குனி மாசம் பூவரசம்பூ பூத்தாப்ல”

மேலும், கிராமத்து மக்கள் காவலதிகாரிகளைக் கண்டதும் ஓடிவிட்டனர்.

“வேலிக்குப் பின்னால் ஒளிச்சிக் கெடந்து தீக்குச்சி, தீக்குச்சி டோன்னு ஊள போட்டானுக”



காவலதிகாரிகளைத் தீக்குச்சி என்று ஆசிரியர் உருவகித்துள்ளார். மற்றொரு இடத்தில்,

“ஊர்ல உள்ள அத்தனச் செம்மறியாடுகளும் ஆமா செய்ய வேண்டியதுதான்னு தலய ஆட்டுது”



என்று ஆசிரியர் ஏதும் அறியா மக்களைச் செம்மறியாடுகள் என்று உருவகப்படுத்தியிருப்பதன் மூலம் உணர முடிகின்றது. இதே போன்று பல உருவகங்கள்

இந்த நாவலில் இடம் பெற்றுள்ளன.

## 5.6 தொகுப்புரை

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து இந்த நாவல் படைக்கப்பட்டிருப்பதால், பொன்னீலன் சமூகத்தின் மீது பற்றுடைய சமூக ஆர்வலராக விளங்குகிறார் என்பது தெளிவு. வாழ்க்கையில் எத்தனைத் துன்பங்கள் வந்தாலும் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்புடன் நின்றால்தான் வெற்றி பெற முடியும் என்பது இந்நாவலின் தலைமைப் பாத்திரத்தின் வழி புலனாகிறது. தொழிலாளி, முதலாளி வர்க்க முரண்பாட்டைச் சுட்டிக்காட்டி விமரிசனம் செய்ததோடு மக்களின் மனதில் மாற்றம் உண்டானால்தான் சமுதாயத்தில் மாற்றம் உண்டாகும் என்று இந்நாவலில் ஆசிரியர் தீர்வு காணுகின்றார். குறையற்ற சமுதாயத்திற்கு முக்கியமாக மனிதநேயம் போற்றப்பட வேண்டும்; மதிக்கப்பட வேண்டும் என்பது இந்நாவல் வழி புலனாகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் பொருளாதார அளவில் முன்னேற்றம் அடையவேண்டும்; அதுவே ஒட்டு மொத்த சமூக முன்னேற்றமாகக் கருதப்படும் என்ற செய்தியை இந்நாவல் மூலம் பொன்னீலன் வெளியிடுகின்றார்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் 6

## P10146 சுஜாதாவின் புதினங்கள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ் வாசகர்களால் பரவலாக அறியப்பட்ட எழுத்தாளர் சுஜாதா. இவர் தமிழில் அறிவியல் கதைகள் எழுத முன்வந்தவர்களில் முதன்மையானவர். இவர் எழுதிய அறிவியல் புதினம் என் இனிய இயந்திரா. இந்தப் பாடம் சுஜாதாவை அறிமுகம் செய்து அவர் எழுதிய என் இனிய இயந்திரா என்ற புதினத்தின் மூலம் அவருடைய அறிவியல் பார்வை, பாத்திரப்படைப்பு, நடைத்திறன் ஆகியவற்றை விளக்குகிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- இன்றைய நாவலாசிரியர்களில் அறிவியல் புதினங்களைப் படைத்து வருபவர் சுஜாதா. இவர் அறிவியல் தொழில் நுட்ப நுணுக்கங்களை எளிதாகவும் இயல்பாகவும் புதினங்கள் மூலம் வெளியிடுவதை அறியலாம்.
- பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் பழமையில் புதுமைகளைக் காணலாம்.
- புதினத்தில் அறிவியலின் எண்ணற்ற வளர்ச்சிகளையும் அவ்வளர்ச்சிகளின் விளைவுகளையும் காணலாம்.
- இவர் துப்பறியும் நாவல் துறையில் புதிய உத்திகளை மேற்கொண்டுள்ளதை அறியலாம்.

# பாட அமைப்பு

6.0 பாட முன்னுரை

6.1 சுஜாதா

6.2 என் இனிய இயந்திரா – புதினம்

6.3 கதைமாந்தர்

தன் மதிப்பீடு : வினாக்கள்- I

6.4 அறிவியலாட்சியும் வாழ்வியல் மாற்றங்களும்

6.5 நாவலில் கையாளும் உத்திகள்

6.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 6.0 பாட முன்னுரை

அறிவியல் யுகம் இது. எங்கும் எதிலும் அறிவியல் ஊடுருவும் நேரம். எனவே மக்கள் இலக்கியமாகிய நாவலிலும் அறிவியல் நுழைந்ததில் வியப்பில்லை. அறிவியல் புதினம் எழுதிய முன்னோடி சுஜாதா. தமிழ் இலக்கிய உலகில் அறிவியல் செறிவும் புதுமை நடையும் கொண்ட நாவல் என் இனிய இயந்திரா. இந்நாவலில் அவர் மக்களாட்சி மாறி எதிர்காலத்தில் அறிவியல் ஆட்சி மலர்ந்திருப்பதாகக் கற்பனையாகப் படைத்துள்ளார். அவர் கையாண்டுள்ள உத்திகளும் அறிவியல் செய்திகளும் இப்பாடத்தில் விளக்கப்படுகின்றன.

## 6.1 சுஜாதா



தற்பொழுது வாழ்ந்து வரும் எழுத்தாளர்களுள் அனைவருக்கும் அறிமுகமானவர் சுஜாதா. இவர் பிறந்த தேதி 03.05.1935. இவரின் சொந்த ஊர் ஸ்ரீரங்கம். இவரது இயற்பெயர் எஸ். ரங்கராஜன்; புனைபெயர் சுஜாதா; திருச்சி பி.எச்.இ.எல் நிறுவனத்திலும், பெங்களூர் பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திலும் பணிபுரிந்துள்ளார்; புதுமைக் கதைகள், அறிவியல் கதைகள் படைத்துள்ளார்; தனக்கெனத் தனிப் பாணி வகுத்துக் கொண்டவர்; பொறியாளராகப் பணியாற்றிய இவர் பன்முகத்திறன் கொண்டவராக விளங்குகிறார். இவர் ஸ்டெர்லிங் டி.எஸ்.எல் நிறுவனத்தின் அம்பலம் என்னும் இதழை நிர்வகிக்கிறார். இவர், இணையத்தைப் பற்றி எழுதிய நூல் வீட்டுக்குள் வரும் உலகம் ஆகும். மேலும் ஏன்? எதற்கு? எப்படி? என்ற இவரது நூல் அறிவியல் கேள்விகளுக்குப் பதில் கூறுகிறது.

துப்பறியும் நாவல் துறையில் புதிய உத்தியைக் கையாண்டு மக்களைக் கவர்ந்தவர் சுஜாதா. துப்பறியும் நாவல்கள் இன்றளவும் மக்களிடம் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளன. மர்மத்திற்குமேல் மர்மங்களும் கொண்டு பாமரமக்களும் வாங்கிப் படிக்கும் நிலைக்கு இவரது துப்பறியும் நாவல்கள் வளர்ந்துள்ளன. இவர் எழுதிய என் இனிய இயந்திரா பதிப்பியலில் சரித்திரம் படைத்த அறிவியல் புதினம். இந்தக் கதை வெளிவந்தபின் பலர் தங்கள் வீட்டுச் செல்லப்பிராணிகளுக்கு ஜீனோ என்று பெயரிட்டார்கள். இந்தக் கதையின் தொடர்ச்சியாக இவர் மீண்டும் ஜீனோ என்னும் நாவலும் எழுதினார்.

### 6.1.1 சுஜாதாவின் படைப்புகள்

அறிவியல் படைப்புகள் மூலம் ஓர் இனிய பரம்பரையை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. இவர் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாவல்களும் எழுதியுள்ளார். இவர் எழுதிய அறிவியல் சிறுகதைகள் வடிவங்கள், தேவன் வருகை போன்ற தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. என் இனிய இயந்திரா என்ற நாவல்

பல பதிப்புகளைப் பெற்றது. மேலும் இந்நாவல் தொலைக்காட்சியில் தொடராகவும் இடம் பெற்றது.



தமிழ்வாணன்

எழுத்தாளர் தமிழ்வாணன் சங்கர்லால் என்ற கற்பனைப் பாத்திரத்தை உண்மை மாந்தர் என நினைக்கும் அளவிற்குத் தனது துப்பறியும் நாவல்களில் அமைத்தார். அவரது முறையைப் பல வருடங்கள் கழித்து வந்த சுஜாதா தனது நாவல்களில் பயன்படுத்தினார். தனது துப்பறியும் நாவல்களில் கணேஷ், வசந்த் என்ற இரு கற்பனை மாந்தர்களை உண்மைமாந்தர் என எண்ணும்படி இவர் பயன்படுத்தி வருகிறார். இவரைப் பின்பற்றியே இன்றை நாவல்களில் புஷ்பா தங்கதுரை, ராஜேஷ்குமார், ராஜேந்திரகுமார், பட்டுக்கோட்டை பிரபாகர், சுபா, தேவிபாலா முதலான நாவலாசிரியர்கள் தமது நாவல்களில் நிரந்தரமான இரு கதாபாத்திரங்களை உருவாக்கினார்கள்.

நாலாயிரத் திவ்விய பிரபந்த பாசுரங்களில் ஈடுபாடு கொண்ட சுஜாதா சில பாசுரங்களை எளிய முறையில் புதிய நடையில் மறு உருவாக்க முறையில் தந்துள்ளார். மொழிபெயர்ப்பிலும் ஈடுபாடு கொண்ட சுஜாதா பல கவிதைகளை எளிமையுடன் மொழி பெயர்த்துள்ளார். இவரது நாவல்களில் துப்பறியும் நாவல், அறிவியல் நாவல் என்ற இரு பிரிவுகளைக் காணலாம்.

இவரது முதல் நாவல் 14வது மாடி என்பர். இதனைத் தொடர்ந்து கரையெல்லாம் செண்பகப்பூ, 24 ரூபாய்த் தீவு, கனவுத் தொழிற்சாலை, கொலையுதிர் காலம், நைலான் கயிறு, நில் கவனி தாக்கு, 14 நாட்கள், வானமெனும் வீதியிலே, அனிதா இளம் மனைவி, ஜன்னல் மலர், நிர்வாண நகரம், மேற்கே ஒரு குற்றம், மறுபடியும் கணேஷ் போன்ற நாவல்களோடு, 1992ஆம் ஆண்டு ஆ...! என்ற பரிசோதனை நாவலையும் இவர் படைத்துள்ளார்.

இவர் சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, விமரிசனம் என்று பல துறைகளில்

தன் பங்களிப்பைச் செய்துள்ளார். எழுபதுகளில் இவரது இலக்கியப்பணி தமிழ் நடையிலும் கதைகளின் உட்பொருளிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை விளைவித்தது. சுஜாதா அறிவியல் நாவலின் முதன்மை முன்னோடியாளராகத் திகழ்கிறார். இன்று அறிவியல் கதைகள் எழுதுபவர் பலரும், இவரது நாவல்களின் தாக்கத்தால் எழுதுகின்றனர். இவர் மேடை நாடகங்களையும் எழுதி அரங்கேற்றியிருக்கிறார். இவருடைய படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. விஞ்ஞானப் புனைகதைகள் எழுதியுள்ள இவர் ம.இராஜாராமுடன் இணைந்து எலெக்ட்ரானிக்ஸ் பற்றிய நூலொன்றும் எழுதியிருக்கிறார். இவர் ஹைகூ கவிதையை எளிதாக விளக்குவதில் வல்லவர்; எலக்ட்ரானிக்ஸ், இசை, சித்த வைத்தியம், நாட்டுப்புறப் பாடல்கள் இப்படிப் பல செய்திகள் பற்றியும் விளக்குகிறார். இந்திய மொழிகளில் இவருடைய படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## 6.2 என் இனிய இயந்திரா - புதினம்




என் இனிய இயந்திரா என்ற புதினத்தின் கதைக்கரு, கதாபாத்திரங்கள், கதைப்பின்னல், கதைச் சுருக்கம், அறிவியல் ஆட்சியில் மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றோடு இந்நாவலில் கையாளும் உத்திமுறைகளைப் பற்றியும் இங்கு விரிவாகக் காணலாம்.

- அறிவியல் நாவல்

அறிவியல் வளர்ச்சி அதனால் அமைந்த இயந்திரங்களின் முன்னேற்றம், அவற்றால் வாழ்க்கையில் ஏற்பட்ட வேகம், இம்மூன்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இலக்கியத்தில் ஒரு மாறுதலை விளைவித்தன. வாழ்க்கையில் புதுமைகளையும் அவற்றால் நேர்ந்த போராட்டங்களையும் விளக்க இலக்கியம் உதவுகிறது. அந்த வகையில் கி.பி.2022-இல் அறிவியல் ஆட்சி நடந்தால் அப்பொழுது நாட்டின் நிலை நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை ஆகியவை எப்படியிருக்கும் என்பதை சுஜாதா என் இனிய இயந்திரா என்ற நூலில் தீர்க்க தரிசனமாகப் படைத்துள்ளார்.

அறிவியல் (Scientific) யுகம் இது. எங்கும் எதிலும் அறிவியல் ஊடுருவும் நேரம். எனவே மக்கள் இலக்கியமாகிய நாவலிலும் விஞ்ஞானம் நுழைந்ததில் வியப்பில்லை. அறிவியல் நுட்ப நுணுக்கங்களைத் திட்டத்தோடு கதையின் ஊடே எளிதே, இனிதே விளையாட்டாக இவரது நாவல்கள் விளக்கிச் செல்கின்றன. துப்பறியும் பாங்கும், பாலுணர்வும் அறிவியல் நுட்பங்களும் இவர் கதையில் கலந்து வரக் காணலாம். இவரது கதைகள் பழமையில் அறிவியலைப் புகுத்திப் புதுமை ஒளிவீசச் செய்து ஒரு திருப்பத்தை உருவாக்கியுள்ளன. பாமரரும் விமானம், கம்ப்யூட்டர் போன்றன பற்றிக் கதையோடு தெரிந்து கொள்கின்றனர்.

### 6.2.1 கதைக்கருவும் கதை உருவாகியதும்

இனி இந்நாவலின் கதையின் கருவைப் பற்றியும், கதை எவ்வாறு உருவாகியது என்பதையும் பார்ப்போம்.

- கதைக்கரு

சமுதாய மாற்றம் என்பது ஆட்சி மாற்றத்தால் ஏற்படுவது. ஆட்சி மாற்றத்தின் விளைவுகள் மக்கள் வாழ்க்கையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தக் கூடியது. உலக நாடுகளின் வரலாற்றில் முடியாட்சி மாறி மக்களாட்சி ஏற்பட்டதால் உண்டான விளைவுகளை இன்றைய நடைமுறை காட்டுகின்றது. அதுபோல் இன்றைய மக்களாட்சி மாறி அறிவியல் ஆட்சி நடைபெற்றால் அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதே இந்நாவலின் கரு ஆகும். இந்நாவல், புதிய திருப்பத்தை ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க நாவலாகும்.

என் இனிய இயந்திரா நாவலில் கதைத்தலைவியாக நிலா படைக்கப்பட்டுள்ளாள். இவளைச் சுற்றியே கதை பின்னப்பட்டுள்ளது. இந்தப் புதினத்தின் வழி அறிவியலை முதன்மையாகக் கொண்டு மனித உரிமைகள், வாழ்வியல் முறைகள் முதலியன எவ்வாறு மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. என்பதைத் தெளிவாக சுஜாதா எடுத்துக்காட்டுகிறார். அறிவியல் ஆற்றலே தனிமனித மற்றும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

- கதையின் கதை

இந்த நாவல் ஆனந்த விகடன் பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்தபோது அவ்வப்போது வாசகர்களிடமிருந்து சுஜாதாவிற்கு ஊக்குவிக்கும் கடிதங்கள் வந்தன. அதில் பலர், "விஞ்ஞானத்தை வியந்து இப்படியெல்லாம் நடக்குமா என்று கேட்டிருந்தார்கள். ஒரு ஐ.ஐ.டி மாணவர் இதில் குறிப்பிட்டிருக்கும் "ஹலோ கிராப்பி" எவ்வாறு சாத்தியமில்லை என்று பூச்சி பூச்சியாகக் கணக்கெல்லாம் போட்டு விளக்கியிருந்தார் என்று நாவல் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள சுஜாதா அவற்றிற்குப் பின்வருமாறு விளக்கங்களைத் தருகிறார்.

"விஞ்ஞானக் கதை (Science fiction) என்பதின் தற்போதைய வடிவத்தில் அது எல்லையற்ற மிக விஸ்தாரமான கற்பனையாக இருக்கிறது. அதனால் மாற்று உலகங்களையும் மாற்றுச் சித்தாந்தங்களையும் படைக்க முடிகிறது. அதன் சாலைகளில் இருளையும் ராத்திரிகளில் வெளிச்சங்களையும் தேவைப்பட்டால் அமைத்துக் கொள்ளலாம். அதன் கடவுள்கள் ப்ரோட்டான் வடிவெடுக்கலாம். அதன் பெண்கள் மகப்பேற்றை ஒட்டு மொத்தமாக இழந்து மீசை வளர்த்துக் கொள்ளலாம். அதன் நாய்கள் ப்ளேட்டோவைப் பற்றியும் ப்ரும்ம சூத்திரம் பற்றியும் பேசலாம். ஆயிரமாயிரம் மாற்று சாத்தியக் கூறுகளை ஆராயும் அற்புதமான சுதந்திரத்தைத் தருகிறது விஞ்ஞானக் கதை. அதைப் பயன்படுத்தும் போது புதிய விளையாட்டுக்களை ஆடும் போது ஒரே ஒரு

எச்சரிக்கை தான் எழுத்தில் தேவைப்படுகிறது. கதையில் இன்றைய மனிதனின் உணர்ச்சிகளுடனும் ஆசாபாசங்களுடனும் ஏதாவது ஒரு வகையில் சம்பந்தம் அல்லது தொடர்பு காட்ட வேண்டும். அப்போது தான் நமக்கு அதில் சுவாரஸ்யம் ஏற்படுகிறது" என்று தன் அறிவியல் நாவல் உருவாக்கத்திற்கான அளவுகோலை சுஜாதாவே குறிப்பிடுகிறார். இது அறிவியல் நாவலுக்கான அளவுகோலாகவும் அமைந்துவிட்டது எனலாம்.

### **6.2.2** கதைச்சுருக்கம்

எதற்கெடுத்தாலும் கட்டுப்பாடு விதிக்கின்ற ஒரு கற்பனை உலகம், குழந்தை பெறுவதற்குக்கூட அரசாங்கத்தின் அனுமதிக்குக் காத்திருக்க வேண்டும். இறந்து போனவரைப் பற்றிய துக்கம் மறைய வேண்டும் என்றால், இறந்தவரைப் போலவே மனித இயந்திரத்தை (Robot) அரசாங்கம் செய்து அனுப்பும். இப்படிப்பட்ட இயந்திர உலகத்தில் சிபி திடிரெனக் காணாமல் போய்விடுகிறான். அவன் மனைவி நிலா தவித்துக் கொண்டிருக்கும் போது, ரவி அவள் வீட்டிற்கு விருந்தாளியாக வருகிறான்; கூடவே ஜீனோ என்ற ரோபாட் நாய் வருகிறது. இருவரும் சேர்ந்து சிபியைக் கம்ப்யூட்டர் மூலம் கண்டுபிடிக்கிறார்கள். சிபி அரசாங்கத்துக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டு, கதிரியக்கச் சிறையில் இருக்கிறான். நிலாவும் ரவியும் சிபியைத் தப்ப வைக்கிறார்கள். ரவி அரசாங்கத்துக்கு எதிரான சதிக்கும்பலைச் சேர்ந்தவன் என்று நிலாவைச் சிபி எச்சரிக்கிறான். நிலா இதைப் பொருட்படுத்தாது ரவியின் ஆலோசனையின் பேரில் இயந்திர உலகின் தலைவன் – சர்வாதிகாரி ஜீவாவைக் கொலை செய்ய முயல்கிறாள். முயற்சி தோல்வியடைகிறது. நிலாவும் ஜீனோவும் தப்பிக்கிறார்கள். ஜீவா மனிதனுமல்ல; இயந்திரமுமல்ல; அப்டிகல் சாதனங்களை வைத்து உருவாக்கப்பட்ட ஒரு ஹோலோ பிம்பம் என்று ஜீனோ கண்டுபிடித்து நிலாவுக்குச் சொல்கிறது. உண்மையை மக்களுக்கு உரைக்கின்றாள் நிலா. நிலாவையும், எதிர்பாராதவிதமாக ஜீவாவுக்கு எதிராகச் செய்வதாக நாடகமாடிய ரவியையும், மனோவையும் வானளாவப் புகழ்கிறது மக்கள் கூட்டம். இதற்கெல்லாம் ரவியே காரணம் என்று சொல்வதற்கு முன் மக்கள் கூட்டம் ஆர்த்தெழுகிறது. புத்திசாலித்தனமாக ஜீனோ நழுவி விடுகிறது. நினைத்தபடியெல்லாம் நிலாவை ஆட்டிவைக்கிறான் ரவி. ஆனால் ரவியின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு மறுபடியும் நிலாவிடம் வருகிறது ஜீனோ. நிலாவிற்கு மீண்டும் உயிர்வந்தது போல உணர்கிறாள்.



## 6.3 கதைமாந்தர்

இக்கதையில் இடம் பெறும் கதை மாந்தரைத் தலைமை மாந்தர், துணைமாந்தர் என்று இருவகைகளாகப் பிரித்துப் பார்ப்போம்.

### 6.3.1 தலைமை மாந்தர்

என் இனிய இயந்திரா என்ற நாவலின் தலைமை மாந்தர் நிலா, ஜீனோ. ஆகியோர்.

- நிலா

சிபியின் மனைவி நிலா. புத்தாண்டை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் பொழுது ஜீனோ கி.பி.2022 இனிப்பான செய்தியைக் கொண்டு வருகிறது. குழந்தை பெற்றுக் கொள்ளக் கிடைத்த அரசாங்க அனுமதியைக் கண்ட நிலா இன்ப அதிர்ச்சி அடைகிறாள். நிலாவுக்கு இப்போது இதயத்துடிப்பு அதிகரித்தது. பவுன் கலரில் இதயம் தனியாகத் தடக் தடக்கென்று சத்தமாக இரைச்சலிட்டது. பிழம்பாக அதற்குள் ஒரு சந்தோஷம் ஒளிந்து கொண்டு பிதுங்கினாற் போல வெளிக்காட்டியது. வயிற்றுக்குள் தேன் கலந்த ஒரு நேர்த்தி தெரிந்தது. கான்கீரிட் கட்டடங்களின் உச்சியில் வெள்ளி விளிம்புகளில் சிலிக்கன் தேவதைகள் தெரிந்தார்கள். புதிய யுகம், புதிய சகாப்தம், புதிய குழந்தை, புதிய பிரஜை குழந்தை மணி! மணியோ மணி என் பொன்மணி.. தங்கமணி.. ரேடிய மணி. பிறக்கப்போகும் குழந்தைக்கு மணி என்று அரசாங்கமே பெயரும் நிர்ணயிக்கிறது. ஆனால் நிலாவிற்கு இரண்டு எழுத்து பெயர் பிடிக்கவில்லை. தன் குழந்தைக்கு சோமசுந்தரேசுவர சுப்பிரமணி என்று பெரிய பெயராக வைக்க விரும்புகிறாள். கம்ப்யூட்டர் கேந்திரத்திற்குச் சென்ற தன் கணவன் சிபி திரும்பி வராததால் பல வழிகளில் அவனைத் தேடி அலைகிறாள். அந்த நிலையில் மருத்துவமனை அவள் கணவனுக்குப் பதிலாக ஒரு பொம்மையை அனுப்பி வைக்கிறது. அதை ரவி மூலம் தெரிந்துகொண்ட நிலா அறிவியல் ஆட்சியின் தலைவரான ஜீவாவைச் சந்திக்கிறாள். பிறந்ததிலிருந்து ஒருநாள் கூடச் சிரிக்காதவர் போல மங்கோலிய முகத்துடன் காணப்பட்ட ஜீவா ‘வா குழந்தாய்’ என்று நிலாவை அருகில் அழைத்தார். ஜீவா கருநீலத்தில் கால்சராயும் மேலங்கியும் அணிந்திருந்தார். நிலாவின் பிரச்சனையைப் பற்றி விசாரித்துவிட்டு உன் கணவன் நீக்கப்பட்டிருக்கிறார். உன்னுடைய அஞ்சல் சபைக்கு விண்ணப்பித்து அதிகாரியிடம் கேட்டுக்கொள். சிபிக்குப் பதிலாக ரவியை எடுத்துக்கொள் என்று கூறுகிறார். இந்தத் தேசத்தில் ஆடையைப் போல ஆடவனும் மாற்றிக்கொள்ளும் பொருளா? என்று ரவி, நிலாவிடம் வினா எழுப்புகிறான். ஜீனோவின் உதவியால் ஜீவா மனிதன் அல்ல ஒரு பிம்பம், ஒரு ஹோலோ பிம்பம்! முப்பரிமாண ஒளி வடிவம் என்பதை நிலா அறிந்து கொள்கிறாள். அச்செய்தியை மக்களுக்கு உணர்த்துகிறாள். ‘எல்லாத்

தலைவர்களுமே ஒரு நிலையில் குடிமக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதுதான் சரித்திரம். எந்த அளவுக்கு எத்தனை நாட்கள் ஏமாற்றுகிறார்கள் என்பதில்தான் மாற்றம். மனித சரித்திரத்தில் முழுவதும் படிப்படியாக ஏமாற்றங்கள்தான்' என்று இருபதாம் நூற்றாண்டு தத்துவஞானி ரஸ்ஸல் சொல்லியிருக்கிறார். அவருடைய ப்ரின்ஸிப்பியா மாத்தமாட்டிக்காவைப் படிக்க ஆசை என்று ஜீனோ நிலாவிடம் கூறுகிறது. சிந்தனை இஷ்டங்கள், இண்டலெக்ட் அறிவு ஆகிய இவற்றைக் கொண்டிருந்த ஜீனோ, நிலாவிற்கு உற்ற தோழியாகத் தக்க சமயத்தில் உதவி செய்கிறது. ரவி, மனோ இவர்களின் முயற்சியால் நிலா நாட்டின் தலைவியாகிறாள்.

- ஜீனோ



நிலாவிற்குப் பக்கத்துணையாக இருப்பது ஜீனோ. ஜீனோ என்பது கிரேக்கத் தத்துவ ஞானியின் பெயர். ஜீனோ ஓர் உயிரில்லாத இயந்திரமாக இருந்தாலும், பொய் நாயாக இருந்தாலும் அதன் தோற்றம் ஒருவகையில் நிலாவிற்கு மன உறுதியளித்தது. மனித சிந்தனையைக் கற்றுக் கொண்டதும் மனிதத் தந்திரங்களும் தானாக வருகிறது. இந்த நாவலை இயக்கும் சக்தி, ஜீனோதான். ரோபாட் நாய் என்றாலும் கூட கூரிய அறிவு கொண்ட நாய். நிலாவின் உயிரோடு உயிராய் ஒட்டிக் கொண்டது. நிலா தவறு செய்யும் போதெல்லாம் அவளை எச்சரித்துக் காப்பாற்றுவது ஜீனோதான். தன் கணவன் சிபி காணாமல் போனான் என்று நிலா அரசாங்கத்திற்குப் புகார் செய்ய, அவர்கள் ஒரு ரோபாட்டைக் கொண்டு வந்து அவள் வீட்டில் இறக்கிவிட்டார்கள். அது மனிதனல்ல; இயந்திர பொம்மை; டோட்டல் ப்ராஸ்தொரிஸ் (T.P) என்று ஜீனோ தான் நிலாவுக்குக் கண்டுபிடித்துச் சொல்லியது. இவ்வாறு அரசாங்கத்தின் ஒவ்வொரு சதியையும் ஜீனோவே வெளிப்படுத்திக் காட்டுகிறது.

ஜீவா ஒரு பிம்பம், வெட்ட முடியாது, தொட முடியாது! என்று ஜீனோ கண்டுபிடிக்கிறது. ஜீனோ இயந்திரமாக இருந்தாலும் நிலாவுடன் ஒட்டி வாழ்ந்து விட்டதால் நிலாவுக்கும், ஜீனோவுக்கும் இனம்புரியாத உறவு ஒன்று வளர்ந்து விட்டது. அதனால் தான் ஜீனோவை மரண பயம் கடைசியில் பிடித்துக் கொள்கிறது. “உன் சூடான

கரத்தால் என்னைத் தொட்டுத் தடவிக் கொடு நிலா, எனக்குப் பயம் என்பதன் முழு அர்த்தங்களும் விளங்கிவிட்டது. நான் இயந்திரமாகவே இருக்கலாம். எனக்குத் தற்செயலாகச் சிந்திக்கும் சக்தியைக் கற்றுக் கொடுத்து, பயம், பாசம் போன்ற உணர்ச்சிகளையெல்லாம் புரிய வைத்தது தப்பு... பொய் சொல்லக் கற்றுக் கொண்டு தந்திரங்கள் எல்லாம் புதுசாக அமைத்துக் கொண்டு விட்டேன்” என்று ஜீனோ பரிதாபமாகச் சொல்கிறது. ஜீனோ ஒரு ரோபாட். அஜாக்ஸ் கம்பெனியில வாங்கினது. ஜீவாவின் சுபீட்சராஜ்யத்தில் எதுவுமே சாத்தியம். என்ன விந்தை நாயைப் பேச வைத்து விட்டார்கள்! அவ்வளவு முன்னேற்றம் என்று மக்கள் வியக்கின்றனர். நிலாவைப் போலவே ரோபாட்டாக இருந்தாலும் ஜீனோவும் தலைமை மாந்தராகச் செயல்புரிகிறது.

**6.3.2** துணை மாந்தர்

சிபி, ரவி, மனோ போன்றவர்களெல்லாம் துணைமாந்தராக இந்நாவலில் இடம்பெறுகின்றனர்.

- சிபி

சிபி நிலாவின் கணவன். இவன் கம்ப்யூட்டர் கேந்திரத்தில் பணியாற்றுபவன். அவர்கள் வீட்டின் முன்னறையில் குடியிருக்க ரவி என்பவனுக்கு அரசாங்க அனுமதி கிடைக்கிறது. ரவியின் வரவு நிலாவின் வாழ்க்கையில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ரவி தங்கள் வீட்டில் குடியிருக்க வந்திருப்பதைப் பற்றி அரசாங்கத்திடம் கேட்கச் செல்லும் சிபி எதிர்பாராத விதமாக அரசாங்க இரகசியங்களடங்கிய மூன்று ஆணைகளைத் தெரிந்து கொள்ள நேரிடுகிறது. அதனால் காவல் படையினர், சிபியைப் பெங்களூர் கொண்டு சென்று கதிரியக்கச் சிறையில் அடைக்கின்றனர். நிலாவின் தொடர் முயற்சியினால் சிபி மீட்கப்படுகிறான்.

- ரவி

மற்றொரு துணைப் பாத்திரமான ரவி, தலைமைப் பாத்திரமான நிலாவின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படக் காரணமாக உள்ளான். ரவி மக்களாட்சி திரும்ப வரும் கழகமான ம.தி.க.வின் உறுப்பினன். தீவிரமாக ஜீவாவின் தலைமையில் நடைபெறும் அறிவியல் ஆட்சியை எதிர்ப்பவன்.

“பொய் வியாபாரியே! வயதானவர்களைக் கொல்ல உனக்கு என்ன உரிமை? தப்பிப் போன கருக்களைக் கலைக்க என்ன உரிமை? அருமையான நூல்களைத் தடைசெய்ய என்ன உரிமை? பாட்டையும் கூத்தையும் பண்பாட்டையும் நீக்க உனக்கு என்ன உரிமை? பதில் சொல்” என்று ம.தி.க கட்சி உறுப்பினர்கள், ஜீவாவின் பிறந்த நாளான டிசம்பர் மூன்றாம் தேதிக்கு முன் ஜீவாவுக்குப் பகிரங்கக் கடிதம் அனுப்புகின்றனர்.

ஜீவாவைக் கொல்ல நடந்த சதியில் ரவியும் செயலாற்றியதால் அதனைக் கண்டறிந்த அரசாங்கம் அவனைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு, ஒரு அந்தமான் விளையாட்டு விடுமுறையும், ரொக்கம் இரண்டாயிரமும் தருவதாக அறிவித்தது. இருந்தாலும் ரவி காவலர்களிடம் பிடிபடாமல் சுரங்கப்பாதை வழியாக நடமாடுகிறான். ரவி மனோ, நிலாவுடன் இணைந்து ஜீவாவின் அராஜகத்தை ஒழித்துக்கட்டுகிறான். ரவி பாத்திரம் இந்நாவலுக்கு ஒரு தனித்தன்மையாக அமைந்துள்ளது. இந்நாவலில் தலைமை மாந்தரைப் போலவே துணை மாந்தரும் சிந்தனைத் தெளிவுடையவர்களாக உள்ளனர்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 6.4 அறிவியலாட்சியும் வாழ்வியல் மாற்றங்களும்

2022-இல் அறிவியல் ஆட்சி ஏற்பட்டால் அப்பொழுது நாடு எப்படி இருக்கும் என்பதையும், மக்களின் வாழ்வில் அறிவியல் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதையும் இந்த நாவல் சித்திரிக்கிறது. இந்நாவலில் இடம்பெறும் குழந்தை பிறப்பு, அரசியல் கட்சி, அரசாங்க நடைமுறைகள், குற்றத்திற்குத் தண்டனை, விளையாட்டு ஆகியவற்றை ஒரு சில உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தலாம்.

### 6.4.1 குழந்தை பிறப்பு

இந்நாவல் சுட்டும் அறிவியல் ஆட்சி உலகத்தில் குழந்தை பெற்றுக் கொள்ளவும் அரசாங்க அனுமதி தேவை. இந்த நிலையில் நிலா, சிபி இருவருக்கும் ஆண் குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதி கிடைக்கிறது. மணி என்ற பெயரும் நிர்ணயிக்கப்படுகிறது. இரண்டெழுத்துப் பெயர் நிலாவிற்குப் பிடிக்கவில்லை. அவள் 'சோமசுந்தரேசுவர சுப்ரமணி' என்று பெரிய பெயராக வைக்க வேண்டும் என்று விரும்புகிறாள். அனுமதி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள படி 2022-ம் ஆண்டு ஜூன் இருபத்தைந்திற்குள் குழந்தை பிறக்கவில்லையென்றால் அனுமதி நீடிக்கப்படுவதற்கு அரசின் மக்கட்தொகை கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு உடனே தெரிவிக்க வேண்டும். ஆண்குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதி கிடைத்து, பிறப்பது பெண் குழந்தையாக இருந்தால் உடனே அரசாங்கத்திற்குத் தெரிவித்து அக்குழந்தையை ஒப்படைக்க வேண்டும். பிறந்த பெண் குழந்தையை அரசாங்கம் காற்று ஊசி ஏற்றிக் கொன்று விடும். குழந்தை பெற்றுக் கொள்ளவும், பெற்ற குழந்தைக்குப் பெயரிடவும் மக்களுக்கு உரிமையில்லை. பெண்குழந்தை பிறப்பு தடுக்கப்பட்டு மக்கட்தொகை கட்டுப்படுத்தப்படுகிறது. இவ்வாறு அறிவியல் ஆட்சி உலகத்தில் நிகழ்வதாக இந்நாவல் குறிப்பிடுகிறது.

### 6.4.2 அரசியல் கட்சிகளும் அரசாங்கமும்

ஜீவாவின் ஆட்சியில் புத்தாண்டைக் கொண்டாடுவதற்கும் அனுமதி தேவை. தெருக்களில் மக்கள் அனுமதிக்கப்பட்ட மகிழ்ச்சியில் உற்சாகமாக ஊடாடிக் கொண்டிருந்தார்கள். முதன் முதலாக மக்கட்பெருக்கம் சரிய ஆரம்பித்த சாதனை! போதிய மக்கள், போதிய கோதுமை, ஜீவாவின் சாதனை! இவ்வாட்சி பொதுவுடைமை. ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் ஆட்சியாக உள்ளது. அந்த அறிவியல் ஆட்சியின் எதிர்கட்சியாக மக்களாட்சி திரும்ப வரும் கழகம் என்றொரு அமைப்பு ஏற்பட்டு, அந்தக் கழகம் ஜீவாவின் ஆட்சி முறையைத் தீவிரமாக எதிர்க்கிறது.

- அரசாங்க நடைமுறைகள்

நாவலின் தொடக்கத்தில் 'அந்த நகரமே இயந்திரக் கட்டுப்பாட்டில் இயங்கிக் கொண்டிருக்கிறது, என்பதை உணர்த்தும் வகையில் அனுமதிக்கப்பட்ட மகிழ்ச்சி என்று முதலிலேயே ஆசிரியர் சொல்லி விடுகிறார். அங்கு வாழும் நபர்களுக்கு இரண்டெழுத்துக்களுக்கு மேல் பெயர்கள் இல்லை. நிலா, சிபி, ஜீனோ, ரவி, மனோ இப்படி பெயர்களுக்கும் எண்கள். நிலா என்றால் எண் 107836. சாலையில் காகிதக்குப்பை பொறுக்குவது, வீட்டு வாசல் குப்பைகளைச் சேகரிப்பது, அலம்புவது, பெருக்குவது எல்லாமே இயந்திரங்கள்தாம். மொத்தத்தில் 'ஜீவாவின் சுபிட்ச ராஜ்யத்தில் எதுவுமே சாத்தியம்.' கிரிக்கெட், ஹாக்கி போன்றவற்றைத் தடைசெய்து ஜேவ் என்ற விளையாட்டைச் சொல்லி தந்திருக்கின்றனர். 'மனிதர்களும் ரோபாட்டுகளும் விளையாடும் ஆட்டம். ஜேவ் என்கிற ஒரு ரோபாட் இயங்கும். அதை மனித கட்சிக்காரர்கள் பிடிக்க வேண்டும். பிடித்துக் கொல்ல வேண்டும். இப்படித்தான் ஒரு ஜேவ் ஆட்டத்தின் போது. ஜேவ் நட்ட நடுவே அகப்பட்டு அதன் உடலில் முதல் குத்துப்பாய, குபுக்கென்று ரத்தம் பொங்கியது. பிரும்மாண்டமான விவி திரையில் தெளிவாகத் தெரிந்தது. இந்த ஆட்டத்தின் காரணம், ஜனங்களின் கொல்லும் இச்சையைத் தணிப்பதுதான் என்று ஆசிரியர் கூறுகிறார். இயந்திரமாய் மாறிவிட்ட மனிதர்கள் எப்பாடுபட்டாவது தம்முடைய இச்சையை ஏதாவதோரு வழியில் தீர்த்துக் கொள்ளத்தானே வேண்டும்! இது ஒரு வகையில் மனித குலத்திற்கு விடுக்கும் எச்சரிக்கையாகத் தெரிகிறது.

சோப்பு, சீப்பு முதல் வீடு போன்ற அனைத்துப் பொருள்களையும் அரசாங்கமே கொடுத்தது. அரசாங்க வண்டி சிவப்பு நிறத்தில் இருந்தது. அதிலிருந்த வானொலி ரெட் செக்ஷன், புளுசெக்ஷன் என்று அலறிக் கொண்டிருக்கும். முதியவர்கள் இறப்பதற்கு முன் ஆளுக்கொரு ட்ரம்பெட் ஊதிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு அரசாங்க நடைமுறை இருந்தது.

அறிவியல் ஆட்சி உலகில் ஆட்சிக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு மரண தண்டனையும், நாடு கடத்தும் தண்டனையும் விதிக்கப்படுகிறது.

### 6.4.3 விளையாட்டு

நாட்டில் கிரிக்கெட் ஆட்டம் தடை செய்யப்பட்டது. அஸ்ட்ரோ புல்வெளி அமைத்து பங்கி, ஜீல் போன்ற ஆட்டங்கள் நடைபெற்றன. ஜேவ் ஆடுவதற்கு, பிடிப்பான், எடுப்பான், அடிப்பான் என்று தனித்தனி விபாகங்கள் உண்டு. மைலாப்பூர் மன்னர்கள் என்று பெயர் பெற்ற டைனமோ கட்சிக்கும் ஜேவ் என்ற ரோபாட்டுக்கும் போட்டி நடைபெற்றது. ஜேவ் நட்ட நடுவே அகப்பட்டு அதன் உடலில் முதல் குத்துப்பாய குபுக்கென்று ரத்தம் பொங்கியது. மிகப் பெரிய வி.வி.திரையில் தெளிவாகத் தெரிந்தது. இப்போது அவர்கள் யாவரும் செத்த பிராணியின் மேல் கழுகுக் கூட்டம் போலச் சூழ்ந்துக் கொள்ள, கட்சியின் தலைவன் தன் நீண்ட ஈட்டியால் அதன் துடிப்புகள் அடங்கும் வரை

குத்தினான். வன்முறைக்கு ஒருவடிகால்! எல்லாருமே அந்த ஜேவ் பொம்மையைத் தத்தம் வெறுப்புக்களின் குறியீடாக நினைத்துக் கொள்ள முடியும்.

ரோபாட் சர்க்கஸ் என்பது நாட்டின் வருடாந்திர மெகா விழா! பல்வேறு திசைகளிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும், ரோபாட்டுகள் வந்திறங்கி சதுரங்கம், ஜேவ், ஜீக்கு, நடனம், மெட்டுக்கட்டும் போட்டி என்று எத்தனையோ நிகழ்ச்சிகள் யார் மனிதன், யார் இயந்திர ரோபாட் என்று சொல்ல முடியாதபடி மானிடர்களிடையே இயந்திரப் புழக்கம். இவ்வாறு பல்வேறு விளையாட்டுகள் அறிவியல் ஆட்சியில் நிகழ்வதாக நாவல் குறிப்பிடுகிறது.

## 6.5 நாவலில் கையாளும் உத்திகள்

நாவலில் கையாளும் உத்திகளால் நாவல் தனிச் சிறப்பைப் பெறுகிறது. உத்தி மூலம் ஆசிரியரின் மொழித்திறனும் எழுத்தாற்றலும் வெளிப்படுவதோடு அல்லாமல் கலைப்படைப்பும் சிறப்படைகிறது. இந்நாவலில் வர்ணனை, உவமை, ஆகிய உத்திகளுக்கு உரிய ஒரு சில உதாரணங்களை இங்குக் காணலாம்.

### 6.5.1 நாவலின் தலைப்பு

நாவலின் தலைப்பான என் இனிய இயந்திரா என்பது ரோபாட் நாய் ஜீனோவைக் குறிக்கிறது. இந்த நாவலை இயக்கும் சக்தி ஜீனோதான். அது இயந்திர பொம்மையாக இருந்தாலும் மனிதர்களைப் போல எச்சரிக்கை உணர்வோடு தானும் செயல்பட்டு, நிலாவையும் காப்பாற்றுகிறது.

‘ஏன் தான் பிறந்தேன் எனக்கே புரியாது நான் யார்? இயந்திரமா நாயா தெரியாது’

என்று பாடிய ஜீனோவிடம் ‘நீ இனிய இயந்திரம் உயிருள்ள இயந்திரம்’ என்கிறாள் நிலா. இனிய இயந்திரமாக ஜீனோவைப் படைத்துள்ள ஆசிரியர்,

“எல்லா விதிகளுமே மனிதன் அமைத்தது தானே? அதனால் அவற்றை மீற முடியும். ஓட்டை காண முடியும். என்ன, கொஞ்சம் நிறையவே பொறுமை வேண்டும். எல்லா பிரச்சனைகளையும் தர்க்க ரீதியாக அலசுவதற்கு ஜீனோ என்று ஒரு மெஷின், இனிய இயந்திர மூளை இருக்கிறது! ஜீனோ இங்கே வா!”

என்று நிலா பேசுவதாக விளக்கம் தருகிறார். ஜீனோ என்ற கற்பனைப் பாத்திரத்தின் பண்பு நலனை விளக்குவதாக இந்நாவல் அமைந்துள்ளது.

### 6.5.2 வர்ணனை

எளிய முறையில், நடைமுறையில் காணப்படும் பொருள்களையும் அவற்றின் தன்மைகளையும் கொண்டு தன் ஆற்றலால் சிறப்பாக வர்ணிக்கிறார் சுஜாதா.

எடுத்துக்காட்டு

“காணாமல் போன சிபியின் எண் கிடைத்ததும் நிலா, தன் நரம்புகளுக்குள் சின்னச் சின்ன மின்சாரத் துகள்கள் செலுத்துவது போல உணர்ந்தாள். திருட்டுத்தனமாக அரசாங்க ரகசியத்தின் வாசல் திறக்கப்பட்டு விட்டது அவளுக்கு. கொஞ்ச நேரம் திரை ‘காத்திரு’ என்று சொன்னதுடன், ஒரு பச்சை சதுரம் கண் சிமிட்டிக் கொண்டிருக்க,

திடீரென்று உயிர் பெற்று, சிபி பெங்களூர் சிறைச்சாலையில் 124ஆம் எண் அறையில் இருக்கிறார்."

மற்றொரு வருணனை:

"பெங்களூர் மெஜஸ்டிக் ரயில் நிலையத்தில் வந்து இறங்கியபோது மணி காலை 6.36. லேசாகப் பனிப்படலம் மூடியிருக்க, அதனூடே தானாக அணைய மறந்த சோடியம் வெளிச்சம். ஓட்டல் ஜீவாவின் ஐம்பது மாடிக் கட்டடம் கத்திக்குத்து போல் நின்றது. வாசலில் இருந்த டெர்மினலில் பிளாஸ்மா டிஸ்ப்ளேயில் "நிலா நல்வரவு" என்று சொல்லி "ரூம் நம்பர் 1223" என்றது."

பன்னிரண்டாவது மாடி 1223வது அறையிலிருந்து பார்த்தபோது பெங்களூர் பிளாஸ்டிக் நகரம் போலத் தெரிந்தது. அஸ்ட்ரோடோம் ஒரு ராட்சசப் பறவையின் கூடு போலத் தெரிய இழுத்துக் கட்டின கான்கிரீட் வார்களின் அருகில் அபரிமிதமாகப் புல் சரிந்தது. கும்பல் கும்பலாக உபநகரங்கள். 'சண்டைக்குப் பிறகு பெங்களூரை அழகாகவே புதுப்பித்திருக்கிறார்கள் என்றாள் நிலா'.

இவ்வாறு பல வர்ணனைகள் அமைந்துள்ளன.

**6.5.3** உவமை

காலையில் சூரியன் வெளுக்கும் போது வெள்ளை மயில் போல விசிறியடித்த நீர்த்திரையில் கடைச் சன்னல்கள் அலம்பப்பட்டு ஆளரவமே இல்லாமல் எல்லாமே சாது இயந்திரங்கள் தத்தம் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தன என்ற சொற்றொடரில் விசிறியடிக்கப்பட்ட நீர்த்திரைகள் வெள்ளை மயிலுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

இந்த விநோத தேசத்தில் ஆடை மாற்றிக் கொள்வது போல ஆடவனை மாற்றிக் கொள்ளுகின்றனர். ஜீவாவின் ஆட்சியில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிபியைத் தேடும் முயற்சியின் போது மாட்டிக் கொண்டால் "இயந்திரக் கோழி பிடிப்பது போல அமுக்கி விடுவார்கள்" என்று நிலா அஞ்சுகிறாள். நிலாவைச் சந்தித்த சிபி "நிதி கிடைத்தாற் போல" மகிழ்ச்சியடைகிறான். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்து மனிதர் தொப்பி அணிந்து ஷேக்ஸ்பியர் பாத்திரம் போல இருந்தார். வயதான அந்த மனிதரின் நெற்றியில் உழுதாற் போல கோடுகள் இருந்தன. இவை போன்று பல உவமைகள் இடம் பெற்றுள்ளன.

## 6.6 தொகுப்புரை

உலகளவில் அறிவியல் மகத்தான வளர்ச்சி பெற்று வருகிறது. இத்துறையின் கண்டுபிடிப்புகள் மானுட அறிவின் எல்லையற்ற ஆற்றலைக் காட்டுகின்றன. இத்தகைய சூழலில் இந்தியாவில் அறிவியலின் அசுர சாதனைகளைக் கொண்டு ஓர் ஆட்சி நிறுவப்பட்டால் எப்படி இருக்கும் என்று கற்பனைக்காக இந்நாவலை சுஜாதா படைத்துள்ளமை அவரது அறிவியல் ஆர்வத்தைப் புலப்படுத்துகிறது. இம்முயற்சியில் அவரது சமுதாயப் பார்வை இன்றைய இந்தியனின் நிலையை ஒட்டியே காட்டப்படுகிறது. அரசு சட்டங்கள் மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக இருந்தாலும் மக்கள் அரசின் வசதியான வாழ்விற்குரிய சலுகைகளால் எவ்வாறு ஆட்டு மந்தைகளாக்கப்படுகிறார்கள் என்பதை அவர் விளக்கியுள்ளார். ஆதலின் கடின உழைப்பு மட்டும் சமுதாய முன்னேற்றத்திற்கு முக்கியமல்ல. எந்தவொரு ஆட்சிமுறைச் செயல்பாட்டிலும் சமூகத்தைப் பாதிக்கக் கூடிய நன்மை தீமைகளை ஆராய்ந்து அதற்கேற்பச் செயலாற்றி ஆட்சிமுறையை மேன்மைப்படுத்தும் தொடர்முயற்சி மக்களிடம் இருந்தால் மட்டுமே மனித சமுதாயம் சிறப்புறும் என்ற கருத்தை அவர் நிலைநாட்டுகிறார். மக்களாட்சி, அறிவியலாட்சி இவற்றின் ஆட்சி முறையில் உள்ள நிறைகுறைகளை நிகழ்ச்சிகளின் மூலம் சுட்டிக் காட்டுவதுடன் மக்களின் விழிப்புணர்வு மட்டுமே சமுதாய நலத்தை என்றும் தக்கவைக்கும் வழியாகும் என்று அவர் தீர்வு காணுகிறார்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# P10141

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1. கி.ரா., என்று சுருக்கமாக அழைக்கப்படுபவர் யார்?

   விடை : கி. ராஜநாராயணன்

2. கி.ராஜநாராயணனின் முதல் நாவல் எது?

   விடை : கோபல்ல கிராமம்

3. கி.ராஜநாராயணனின் எந்த நாவலுக்குச் சாகித்ய அகாதெமி பரிசு கிடைத்தது?

   விடை : கோபல்லபுரத்து மக்கள்

4. பள்ளிக்கு முதலில் வரும் மாணவன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?

   விடை : ஏரான்.

5. கவிராயர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

   விடை : கம்பர் என்று அழைக்கப்பட்டார்.

முன்

# P10141

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1. முதன்முதலாக இரயிலைப் பார்த்த மக்கள் என்ன செய்தார்கள்?

விடை : தரையில் விழுந்து கும்பிட்டார்கள்.

2. நெல்லுச் சோற்றைப் பற்றிய நாடோடிப் பாடல் எது?

விடை : நித்தம் நித்தம் நெல்லுச்சோறு நெய் மணக்கும் கத்தரிக்காய்.

3. யார் யாருடைய வரலாற்றை அறிந்த இளைஞர்கள் உள்ளம் குமுறினர்?

விடை : நாட்டு விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட குமரன், பகத்சிங் ஆகியோர் வரலாற்றைக் கேட்ட இளைஞர்கள் குமுறினர்.

முன்

# P10142

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1. இராஜம் கிருஷ்ணனின் முதல் நாவல் எது? எந்த ஆண்டு எழுதப்பட்டது?

விடை : சுதந்திர ஜோதி, 1948.

2. இராஜம் கிருஷ்ணன் எழுதிய இரண்டு வட்டார நாவல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

விடை : குறிஞ்சித்தேன், கரிப்பு மணிகள்

3. 'மண்ணகத்துப் பூந்துளிகள்' என்ற நாவலில் பேசப்படும் பிரச்சினை என்ன?

விடை : பெண்சிசுக் கொலை.

4. இராஜம் கிருஷ்ணனின் எந்த நாவலுக்குச் சாகித்ய அகாதெமி பரிசு கிடைத்தது?

விடை : வேருக்கு நீர்.

5. இராஜம் கிருஷ்ணனின் எந்தக் கதை உலக மொழிகளின் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது?

விடை : ஊசியும் உணர்வும் என்ற கதை.

முன்

# P10142

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1. விலங்குகள் என்ற நாவலில் எதை மையமாகக் கூறுகிறார்?

    விடை : பெண்களின் அடிமை நிலை.

2. தீப்பெட்டித் தொழிலில் ஈடுபடும் சிறுமிகளைப் பற்றி எந்த நாவல் குறிப்பிடுகிறது?

    விடை : கூட்டுக்குஞ்சுகள்.

3. ரஞ்சனி எனும் பாத்திரம் எந்த நாவலில் இடம் பெற்றுள்ளது?

    விடை : வீடு என்ற நாவலில்.

முன்

# P10143

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1. சிவகாமியின் முதல் நாவல் எது?

    விடை : பழையன கழிதலும்.

2. சிவகாமி இயக்கிய 'ஊடாக' என்ற குறும்படத்திற்கு என்ன பரிசு கிடைத்தது?

    விடை : குடியரசுத்தலைவர் பரிசு கிடைத்தது.

3. சிவகாமி எந்தப் பத்திரிகையின் ஆசிரியராக உள்ளார்?

    விடை : புதியகோடங்கி.

4. இயற்கை அழகை ரசிக்கும் ஆனந்தாயியின் மகள் பெயர் என்ன?

    விடை : அருள்.

முன்

# P10143

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1. குடும்பத்தின் நங்கூரமாகச் செயல்படுபவர் யார்?

விடை : பெண்ணே குடும்பத்தின் நங்கூரமாக செயல்படுகிறார்.

2. தந்தைக்கும் குழந்தைக்கும் பாலமாக இருப்பவள் யார்?

விடை : தாய்.

3. ஆனந்தாயி எந்த நிலைக்குத் தள்ளப்பட்டாள்?

விடை : குழந்தைகளை வளர்ப்பதற்கும், குடும்பத்தை நடத்துவதற்கும், நல்ல நடத்தையில்லாக் கணவனோடு வாழ்வதற்கும் ஆன நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

4. ஆனந்தாயி தன் மகன் பாலனை இழப்பதற்கு என்ன காரணம் கூறுகிறார்?

விடை : என் கணவன் பெற்ற குழந்தையைக் கவனிக்காமல் வீட்டைவிட்டு வெளியே தங்கியதால்தான் என் மகன் பாலனை இழக்க நேர்ந்தது என்று கூறுகிறாள்.

முன்

# P10144

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1. கே. டானியல், இலக்கியப் பணியைத் தவிர வேறு எந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்?

விடை : தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் அமைப்பாளராகவும், மக்கள் கலை இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் இருந்தார்.

2. டானியல் இலங்கைத் தமிழர் போராட்டத்தில் எத்தனை மாதம் சிறை சென்றார்?

விடை : பதினொரு மாதங்கள் சிறை சென்றார்.

3. டானியல் எழுதிய நாவல்களில் ஏதேனும் மூன்றைக் குறிப்பிடுக.

விடை : பஞ்சமர், கோவிந்தன், தண்ணீர்.

4. கானல் நாவல் மூலம் அவர் தரும் செய்தி என்ன?

விடை : மதம் மாறினாலும் சாதி மாறாத தன்மையுடனிருக்கிறது.

5. நன்னியன், தன் மகள் சின்னியை மீண்டும் வேலைக்கு அனுப்ப ஏன் மறுக்கிறான்?

விடை : சின்னி, தம்பாபிள்ளையின் தங்கை வீட்டில் கற்பழிக்கப்படுகிறாள். எனவே, நன்னியன் அவளை மீண்டும் அங்கே அனுப்ப மறுக்கிறான்.

முன்

# P10144

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1. பாதிரியார் யாருக்கு ஆதரவாக இருக்கிறார்?

விடை : உயர்சாதிக்காரர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்.

2. இந்த நாவலின் தலைப்பு எதை வெளியிடுகிறது?

விடை : மக்களின் வாழக்கையில் ஏற்படும் வறுமையை நீக்க முயலும் முயற்சி கானல் நீராகவே உள்ளது என்ற கருத்தை வெளியிடுகிறது.

3. புதினத்தில் இடம்பெற்ற ஏதாவது ஓர் உவமையைக் குறிப்பிடுக.

விடை : பஞ்சம் போனாலும் பஞ்சத்தில் ஏற்பட்ட வடு போகாது.

முன்

# P10145

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1. பொன்னீலனின் எந்த நூலுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு கிடைத்தது?

விடை : புதிய தரிசனங்கள்.

2. பொன்னீலனின் தாயார் எழுதிய நாவலின் பெயர் என்ன?

விடை : கவலை.

3. நாவலில் இடம்பெற்றுள்ள சுதந்திரராஜன் இயற்பெயர் என்ன?

விடை : எசக்கிமாடன்.

4. துரைசாமியின் குடும்பத்தினரை ஏன் ஊரைவிட்டு விலக்கி வைத்திருந்தனர்?

விடை : வரிகட்டாததால் ஊரை விட்டு விலக்கி வைத்தனர்.

5. ஊரார் சுதந்திரராஜனுக்கு எத்தகைய தண்டனையை வழங்கினர்?

விடை : மொட்டையடித்து, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கழுதை மீது ஊர்வலம் செல்ல வேண்டும்.

முன்

# P10145

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1. யாரை எல்லாம் சுரண்டும் வர்க்கமாக நாவலாசிரியர் அடையாளம் காட்டுகிறார்?

விடை : முதலாளிகள், சாதிவெறியர், இலஞ்சம் வாங்கும் அரசு அதிகாரிகள், மனச்சாட்சியில்லாதோர்.

2. நாவலாசிரியர் கையாளும் இரு உத்திகளைக் குறிப்பிடுக.

விடை : வர்ணனை, உவமை.

3. நாவலாசிரியர் குறிப்பிடும் இரண்டு உவமைகளைக் கூறுக.

விடை : அலங்கரித்த தேர், காந்தத்தில் ஒட்டிய இரும்பு.

4. தீக்குச்சி என்று யார் சுட்டப்படுகின்றனர்?

விடை : காவலதிகாரிகள்.

முன்

# P10146

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1. சுஜாதாவின் இயற்பெயர் என்ன?

விடை : எஸ். ரங்கராஜன்

2. சுஜாதாவின் முதல் நாவலின் பெயர் என்ன?

விடை : 14-வது மாடி

3. என் இனிய இயந்திரா எத்தகைய புதினம்?

விடை : ஓர் அறிவியல் புதினம்

4. ஜீவாவைப் பற்றி ஜீனோவின் கருத்து யாது?

விடை : ஜீவா மனிதனுமல்ல, இயந்திரமுமல்ல, அப்டிகல் சாதனங்களை வைத்து உருவாக்கப்பட்ட ஒரு ஹோலோ பிம்பம்.

5. நிலா தனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு என்ன பெயரிட விரும்பினாள்?

விடை : சோமசுந்தரேசுவர சுப்பிரமணி.

முன்

# P10146

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1. அறிவியல் ஆட்சியில் ஆண்குழந்தை பிறக்காமல் பெண் குழந்தை பிறந்தால் என்ன செய்ய வேண்டும்?

விடை : அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

2. அறிவியல் ஆட்சியில் எந்த எந்த விளையாட்டுகள் தடை செய்யப்பட்டன?

விடை : கிரிக்கெட்டும், ஹாக்கியும் தடை செய்யப்பட்டன.

3. அறிவியல் ஆட்சியில் அரசாங்க வண்டியின் நிறம் எது?

விடை : சிவப்பு

4. அறிவியல் ஆட்சியில் நடைபெறும் வருடாந்திர மெகா விழாவின் பெயர் என்ன?

விடை : ரோபாட் சர்க்கஸ்

5. வெள்ளை மயிலுக்கு எது உவமிக்கப்பட்டுள்ளது?

விடை : விசிறியடிக்கப்பட்ட நீர்த்திரைகள் வெள்ளை மயிலுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

முன்